50வது ஆண்டை நோக்கி...

# மல்லிகை

ஆசிரியர் : டொமினிக் ஜீவா



## கவிதையால் காலத்தை ஆளும் ஆளுமை!

ஜூலை - ஆகஸ்ட் 2012 விலை 50/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SURIYA

**TEXTILE MILLS (PVT) LTD.**

32/34, 3RD CROSS STREET,
COLOMBO - 11.

Tel : 2336977, 2438494,
2449105
Fax: 2438531



**மல்லிகை**

'ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி
ஆதியினைய கலைகளில் உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர் பிறர்
ஈன நிலை கண்டு துள்ளுவர்'

உலகப் பாராளுமன்ற வரலாற்றிலேயே, இலங்கை நாடாளுமன்றத்தில் மாத்திரம் தான் ஓர் இலக்கியச் சஞ்சிகை விதந்து பாராட்டப் பெற்ற பெறுமதி மிக்க சம்பவம் இடம் பெற்றுள்ளது. அங்கு பாராட்டப்பட்ட சஞ்சிகை மல்லிகை. இதனை நாடாளுமன்றப் பதிவேடான ஹன்ஸார்ட் (04. 7. 2001) பதிவு செய்ததுடன் எதிர்காலச் சந்ததியினருக்காக ஆவணப்படுத்தியுமுள்ளது. அத்துடன் உலக வரலாற்றில் முதன் முதலில் சலூனுக்குள் இருந்து வெளிவந்த இலக்கியச் சஞ்சிகையும் மல்லிகையே தான்!

**50 - ஆவது ஆண்டை நோக்கி...**

**ஜூலை - ஆகஸ்ட்**

**398**

*'Mallikai' Progressive Monthly Magazine*

மல்லிகை அர்ப்பணிப்பு உணர்வுடன் வெளிவரும் தொடர் சிற்றேடு மாத்திரமல்ல- அது ஓர் ஆரோக்கியமான இலக்கிய இயக்கமுமாகும்.
மல்லிகையில் வெளியாகும் எழுத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பானவர்கள்!

201/4, Sri Kathiresan St,
Colombo - 13.
Tel : 2320721
mallikaiJeeva@yahoo.com


# கடந்த காலங்களை எல்லாம் இரை மீட்டிப் பார்க்கின்ற போது...

எனது 86-ஆவது பிறந்த தினத்தை வாழ்த்தி உலகெங்கும் இருந்தெல்லாம் வாழ்த்துக்கள் வந்தன.

உண்மையிலேயே உலகமெங்கும் இருந்து வந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் பார்த்து, அப்படியே பிரமித்துப் போய்விட்டேன்.

இத்தகைய சர்வதேசப் பாராட்டுக்களுக்கும், மிகையான போற்றுதல்களுக்கும் நான் தகுதியுள்ளவன்தானா? என ஆறுதலாக இருந்து ஒரு கட்டத்தில் சிந்தித்துப் பார்த்தேன்.

என்னை மனதாரப் பாராட்டும் அத்தனை நெஞ்சங்களும் எனது கடந்த காலச் செயற்பாடுகளை வைத்தே பாராட்டி மகிழ்கின்றனர் என்ற முடிவுக்கே இறுதியில் வந்தேன்.

இத்தனை பெறுமதி மிக்க நெஞ்சார்ந்த வாழ்த்துக்களுக்கும் பாராட்டுக்களுக்கும் காரணமே எனது இடையறாத மானுட நேசிப்பும், விசுவசிப்பும்தான் என்ற முடிவுக்கே வந்துவிட்டேன்.

நான் அப்படியொன்றும் பிரமாதமாகச் சாதித்து விடவில்லை என்பது எனது நெஞ்சுக்குத் தெரியும். ஆனால், நான் மனசாரச் செய்த நல்லதொரு வேலை, இந்த மண்ணையும் இந்த மண்ணில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கும் கலைஞர்கள் அனைவரையும் நெஞ்சார நேசித்ததுதான்.

பலதரப்பட்ட கலைஞர்களின் உருவப் படங்களை மல்லிகை அட்டையில் பதிவு செய்ததுடன், அவைகள் அத்தனையையும் ஒருங்கிணைத்து, கட்டம் கட்டமாகத் தொகுத்து நூலுருக் கொடுத்து, மக்கள் மத்தியில் தெருத் தெருவாகக் கொண்டு சென்று விநியோகித்து மக்கள் கலைஞர்களான அவர்களது திறமைகளையும், ஆற்றல்களையும் அறிமுகப்படுத்தி வைத்தேன்.

அதன் பெறுபேறுகளை இன்றைய நடைமுறைச் செயற்பாடுகளில் மிக மிகத் தெளிவாகவே உணர முடிகின்றது.

முகத்தை முகம் பார்த்திராத - முன்னர் பின்னர் தெரிந்திராத - பல இளம் தலைமுறையினர் பாரிஸில் இருந்தும், லண்டனில் இருந்தும், அமெரிக்கா, அவுஸ்திரேலியாவில் இருந்தும் மின்னஞ்சலில் எனது பிறந்த நாளை ஒட்டி வாழ்த்துக்களும் தகவல்களும் அனுப்பிய வண்ணம் உள்ளனர். அவர்கள் அத்தனை பேர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

நான் இந்த வயதிலும் வெகு உற்சாகத்துடனும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் என்னை நானே முற்று முழுவதுமாக ஒப்புக் கொடுத்து தினசரி இயங்கி வருவதின் சூட்சுமமே வருங்காலத் தலைமுறையினர் மீது கொண்டுள்ள அளப்பரிய பாசமும் பற்றுதலும் தான்.

என் வரைக்கும் ஏராளமான இலக்கிய இளந்தலைமுறையினருடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணிப் பாதுகாத்து வருகின்றேன்.

நமது இளமைப் பருவ காலகட்ட இளைஞர்களை விட, இன்றைய தலைமுறை இளஞ்சந்ததியினரிடம் ஒரு வகையான தைரியத்தையும், எதையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத் துடிப்பையும் கண்டு, மெய்யாகவே நெஞ்சில் பெருமிதம் கொண்டு பெருமகிழ்ச்சி அடைந்துள்ளேன்.

அதேசமயம், ஆர்வமும் துடிப்பும் நெஞ்சு நிறைய வைத்துள்ள பல இளஞ் சந்ததியினர் வெகு சீக்கிரமாகப் புகழைச் சேமித்துவிட வேண்டும் என்று துடிதுடிக்கின்றனரோ எனவும் மனதில் சில சமயங்களில் நினைத்துப் பார்ப்பதுண்டு.

ஆர்வமும் எதிர்கால நம்பிக்கையும் துடிப்பும் மிக்க இளைய தலைமுறையினர், இலக்கியக் குழுக்களை வடிவமைத்து, தமக்குள் தாமே அடிக்கடி இலக்கிய விமரிசனங்கள் செய்துவர வேண்டும். எந்தவொரு இலக்கிய விழாக்களையும் தவறவிடக் கூடாது.

அடிக்கடி ஒன்று சேர்ந்து இலக்கிய விழாக்களை நடாத்த வேண்டும். சர்ச்சை செய்ய வேண்டும். சிற்றிலக்கிய ஏடுகள் எங்கு கிடைத்தாலும் அவற்றைக் கருத்தூன்றிப் படித்துக் கிரகித்துக் கொள்வது மிக மிக முக்கியமானதொன்றாகும்.

அனுபவம் வாய்ந்த மூத்த எழுத்தாளர்களினது கருத்துக்களைக் கேட்டறிவதுடன், அவர்களது கருத்துக்களைக் கனம் பண்ணிக் கௌரவிக்கப் பழகிக் கொள்வது அதி முக்கியமானதாகும்.

# புதிய தடத்தில் காலடி பதிப்போம்!

நீண்ட நெடுங்காலமாகவே மல்லிகை தனக்குத் தானே வரித்துக் கொண்ட இலக்கியத்தடத்தில் வெகு தெளிவான பார்வையுடனும், ஆழமான சிந்தனை வீச்சுடனும் நடைபோட்டு வந்துள்ளதை மல்லிகையின் தொடர் வாசகர்கள் ஏற்கனவே புரிந்து வைத்துள்ளனர்.

அதற்காக மல்லிகை யாழ்ப்பாணத்திலும் தலைநகரிலும் கொடுத்து வந்திருக்கும் பாரிய விலை, எதிர்காலத்தில் நிச்சயமாகப் பதியப்படும் என்று மெய்யாகவே நம்புகின்றோம்.

மல்லிகை ஆரம்பித்த காலத்தில் பிறந்து வளர்ந்து வந்த ஓர் உயிர் இன்று நடுத்தர வயதைத் தாண்டி வளர்ந்திருக்கும் என்பது இயல்பான செய்தி.

இந்த அரை நூற்றாண்டுக் காலகட்டத்தில் எத்தனையோ உள்நாட்டு யுத்தக் கெடுபிடிகளைக் கண்டு, தாங்கி, வளர்ந்து வந்துள்ளதுதான் இச்சிற்றேடாகும். வட புலத்தில் தொடர்ந்து நெருக்கடி தந்து வந்த வாழ்வாதாரச் சிக்கல் காரணமாக தலைநகருக்குத் தனது செயற்பாட்டை மாற்றியது.

உலகமே இன்று சுருங்கி வருகின்றது. உலகப் பார்வையே இன்று நடு முற்றத்திற்கு வந்து விட்டது.

இந்த நிலையில் மல்லிகையும் தனது இலக்கியப் பார்வையையும் வீச்சையும் இன்னும் இன்னும் ஆழப்படுத்துவதும், அகலப்படுத்துவதும் அத்தியாவசிய தேவையாக இன்று கருதப்படுகின்றது.

இந்த அடிப்படைப் பார்வை மாற்றத்தை உள்நோக்கமாகக் கொண்டு, மல்லிகையின் உள்ளடக்கத்தையும், தெளிவான பார்வையையும் இன்னுமின்னும் கூர்மைப்படுத்த ஆயத்தங்கள் செய்ய எத்தனிக்கின்றோம்.

இந்த மாத இதழில் இருந்து அதனது உள்ளடக்க மாற்றத்தை ஆழமான இரசிகர்கள் புரிந்துகொள்வார்கள் என நம்புகின்றோம். தொடர்ந்தும் புதுப் புது அம்சங்களை மல்லிகை தனது உள்ளடக்கமாகக் கொண்டு வெளிவரும் என, மல்லிகையைக் கடந்த அரை நூற்றாண்டுக் காலமாக ஆதரித்துச் சுவைத்து வரும் இலக்கிய நண்பர்களினது கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டைப்படம் :

# கவிமணி நீலா பாலன்

- பாலமுனை பாறூக்

***பசியொடு உலவிடும் மனிதனின் துயரினைப்***
***பாடுகின்ற பாடகன்***
***இதுவொரு தனிவிதி எனவொரு புதிவிதி***
***எழுதுகிற பாவலன்***

என்று தனது படைப்பிலக்கை, இலக்கியச் செல் நெறியை அழுத்தமாக உச்சரிக்கின்ற ஆரோக்கியமான படைப்பாளர் நீலாபாலன்.

தமிழ்க் கவிதை இலக்கியப் பரப்பில் கடந்த நான்கு தசாப்தங்களாகப் பேசப்பட்டு வருகின்ற கவிஞர் கல்முனைப் பூபால்தான் நீலாபாலன்.

இவர், கல்முனைப் பிரதேசத்தின் கவிதை முன்னோடியாகக் கருதப்படுகின்ற அமர கவிஞர் நீலாவணனின் நேரடி வாரிசோ என்று எண்ணத் தகுந்தவாறு, பல்வேறு கவிதை நடைகளையும் கையாண்டு எழுதத்தக்க வல்லமை படைத்தவர்.

புதிது, புதிதான விடயத் தேடல், அருமையாகவும், அழகாகவும் சொல்லுகிற சொல் ஆட்சி, படித்தவுடன் புரிந்துகொள்ளக் கூடிய விளக்கமான படிமங்கள், உணர்ந்த பின் பிரமிக்க வைக்கும் குறியீடுகள், எல்லோரும் விரும்புகிற, எல்லோரும் விரும்பி, விருப்பமாகப் படிக்கப்படுகிற கவிதைகளை அகழ்ந்து தரும் படைப்பாளர் நீலா பாலன்.

அவருடைய ஒவ்வொரு கவிதையிலும் உயிரிருக்கும், ஒவ்வொரு வரியிலும் பொருளிருக்கும். செய்யுள் நடையில் எழுதினாலும், அல்லது புதிதாகப் பிரசவித்தாலும்... இவர் எழுதுவதுக் கவிதை, அது... கட்புலனுக்குரியதாக, செவிப்புலனுக்குரியதாக மாத்திரமல்லாது, ஆழ்மன உணர்வுகளையும் தொட்டுப் பார்க்கும் ஆற்றலுடையவை.

இயற்கையான, வலிந்து நிரப்பப்படாத படிமச் சிறப்பும், உவமை, உருவகங்களும், ஓசை அழகுமே இவருடைய கவித்துவ வளம் எனலாம்.

கல்முனைப் பூபால் என்ற நீலா பாலனைப் பற்றி எழுத முனையும் போது, ஏனோ எழுபதுகாலப் பகுதி நினைவுக்கு வந்து விடுகிறது. பள்ளிக்கூடத்தில் ஓ.எல் - ஏ.எல் முடித்த கையோடு கவிதை இலக்கியமென்று ஓடித் திரிந்த காலம். கல்முனைப் பூபால், நான், அன்புடீன், முல்லை வீரக்குட்டி, பாண்டியூர் தட்சணா (மாவட்ட நீதிபதி) ஆகியோர் சேர்ந்து எடுத்த இலக்கிய முயற்சிகள் நினைவுக்கு வருகின்றன.



இந்திய **வானம்பாடிகள்** கவிதா மண்டலம் போல, கல்முனையில் நாங்கள் **புதிய பறவைகள்** கவிதா மண்டலத்தை உருவாக்கியது,

***இந்த யுகத்தின் இருள்கள் இறக்க***
***எங்கும் இனிய வசந்தம் பிறக்க***
***எங்கள் உழைப்பே எருவாய் அமைக***

என்ற கோட்பாட்டு அடிப்படையிலே இவ்வரிகளையும் கல்முனைப் பூபாலே எழுதினார். கவிதையின் வடிவத்திலும், பொருளிலும் மாற்றத்தை ஏற்படுத்த முனைப்புக் காட்டியது, கவியரங்குகள், இலக்கிய அமர்வுகளை நடாத்தியது, கொள்கைப் பிரகடனங்களைச் செய்து துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டது போன்ற இலக்கியச் செயற்பாடுகளை இவ்வமைப்பின் மூலம் செயற்படுத்தினோம்.

கல்முனைப் புதிய பறவைகள் கவிதா மண்டலத்தின் முதல்வராகவும், முக்கிய செயற்பாட்டாளராகவும் பூபால் இருந்ததனால், எதையும் எதிர்கொள்ள நாம் தயாராகவிருந்தோம். இலக்கியம், கவிதை பற்றிய தெளிவும், திறனுமுடையவராக கல்முனைப் பூபால் இருந்தது எமக்குப் பெரிய பலமாகவிருந்தது.

பொருத்தமான படிமங்களோடு, மயக்கம் தராத குறியீட்டில், கவிதை மொழியினைப் புரிந்துகொண்டு உணர்வுபூர்வமான கவிதைகளைப் படைப்பது கைகூடப் பெற்ற நீலாபாலன், கவிதை பொழிவதிலும் ஆற்றலும், ஆளுமையும் கொண்டிருந்தார். பல கவியரங்குகள் இவரின் தலைமைக் கவிப்பொழிவுகளால் களை கட்டியிருந்தன. பாடு பொருளை மக்களிடமிருந்தே தேர்ந்து கொண்டு, அவர்களுக்கு அந்நியமாகாத மொழியில் ஓசை நயத்தோடு, அங்கதச் சுவை இழையோடப் பாடி, கைதட்டல்களைப் பெறுவது அவருக்குச் சாத்தியமாகி இருந்தது.

கலை இலக்கியத்துறையில், பன்முகத் திறமையாளராக இவர் பரிணமிக்கிறார். சிறுகதை, குறுங்கதைகளை எழுதியுள்ள இவர், நாடகாசிரியனாக இதுவரை 15 நாடகங்களை எழுதி, மேடையேற்றி, பரிசுகளும் பெற்றிருக்கிறார்.

இலங்கை வானொலியில் அவர் தொகுத்து வழங்கிய **கவிதைக் கலசம்** நிகழ்ச்சி விதந்துரைக்கத் தக்கது. 90களிலிருந்து 97 வரை வானொலி கவிதைக் கலசத்தினூடாக இன்று பிரபலங்களாயிருக்கிற பல கவிஞர்களை அறிமுகப் படுத்தியவர், இவர்.

இன்னும், **முத்துப் பந்தல்** என்ற நிகழ்ச்சியினூடாக பல சிரேஷ்ட இலக்கிய வியலாளர்களை அறிமுகப்படுத்தி, அடையாளப்படுத்தியது மறக்க முடியாத இலக்கியச் சேவையாகும்.

மலையகப் பெருந்தோட்டத்துறையில் உத்தியோகம் பெற்று, மலையகத்தையே புகுந்தகமாகவும் ஆக்கிக் கொண்டு நீலா பாலனாகத் தொடர்ந்து எழுதிவரும் இவரது பதிவுகள் இவர் பெயரை இலக்கியத்தில் நிலைக்க வைக்கும்.

***அப்பன் உரம்போட***
***ஆயி கொழுந்தெடுப்பாள்***
***அதுதானே இதுவரை எம் சரித்திரம்***
***ஆண்டு முழுதும் உடல் ஆடி***
***உழைத்தாலும் என்ன***
**அடுக்களையில் படுத்திருக்கே தரித்திரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***உழைப்பவன் வியர்வை***
***நிலத்தில் விழுந்தால்...***
***விளைகிற பயிர்க்கது உரமாகும்***
***உழைப்பவர் உழைப்பைச்***
***சுரண்டிச் சுகிப்பவர்***
***தினந்தினம் குளிப்பது நெருப்பாகும்...***

என்ற வரிகள் மலையகம் சம்பந்தமான இவரது பதிவுகள். இலக்கியமென்பது அடையாளப்படுத்துவது. நீலா பாலன் தனது அயலை அடையாளப்படுத்துவதில் சமர்த்தர்.

நாற்பது ஆண்டுகளாக எழுத்துப் பரிச்சயமுள்ள இவர், மலையகத்திலே, பண்டாரவளையில் கவிதைக்குப் பெருவிழாவெடுத்து, பல படைப்பாளர்களைப் பாராட்டிக் கௌரவித்தார். இவரது பல்வேறு படைப்புகள் இலங்கை, இந்திய, மலேசிய ஏடுகளில் வெளியாகி, தனி இடத்தைப் பெற்றிருக்கின்றன.

75 கவியரங்குகளுக்கு மேல் பங்குபற்றியுள்ள நீலாபாலன் 50 அரங்குகளுக்கு மேல் தலைமை தாங்கி நடாத்தியுள்ளார். வானொலியில் மட்டும் 15 கவியரங்குகளுக்குத் தலைமை தாங்கியுள்ளார்.

2000 கவிதைகளுக்கு மேல் எழுதியுள்ள நீலா பாலனது முதலாவது நூல், **இலந்தைப் பழத்துப் புழுக்கள்** என்ற பெயரில் புரவலர் புத்தகப் பூங்காவின் வெள்ளிவிழா வெளியீடாக 2010இல் வெளியானது. பெறுமானமுள்ள இவரது ஆரம்பகாலக் கவிதைகள் சில இடம்பெற்றிருந்தால்... இன்னும் இத்தொகுதியின் கனமும், காத்திரமும் மேம்பட்டிருக்கும் என்பது இலக்கியவியலாளர்கள் கருத்து.

இலக்கியம், எழுத்துத் தொடர்பான அனுபவமும், தேர்ச்சியும், ஆளுமையும், தேடலும் நிரம்பப் பெற்றிருக்கின்ற நீலா பாலன், திறனாய்வு, நூல் அறிமுகம், இலக்கியக் கட்டுரைகளை கவிவலன், மனோஜ், பறவை போன்ற பல புனைப் பெயர்களில் அவ்வப்போது எழுதி வந்துள்ளார்.

ஆங்கில அறிவு நிறையப் பெற்றுள்ளதாலும், புதிய சிந்தனைகளும், போக்குகளும் உள்வாங்கப் படுவதாலும், பெறுமானமுள்ள ஆக்கங்களினூடாகத் தமிழ் இலக்கியத்தில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமென்ற வேட்கையோடு எழுதி வருபவர், இவர்.

பட்டங்கள், பரிசுகள் என்று நிறையவே அவரை வந்தடைந்திருக்கின்றன. பாவரசு, கவிமணி, கவிதை வித்தகர், தமிழ்மணி, கவிமாமணி, கவிதைப் பரிதி, சாமஸ்ரீ கலைத்திலகம், கலாபூஷணம் என்பவை அவற்றுள் சில.

ஊவா தமிழ்ச் சங்கத் தலைவராக இலக்கியப் பணியாற்றி வருகின்ற இவர் சேமித்து வைத்திருக்கின்ற ஆக்கங்கள்... நூலுருப் பெறும்போது... ஈழத்து இலக்கிய உலகில் நீலாபாலனுடைய கனமும், காத்திரமும், இடமும் துலங்கும்.

இவர் நீண்ட ஆயுளைப் பெற வேண்டுமென்பதும், ஆக்கங்களெல்லாம் நூலுருப் பெறவேண்டுமென்பதும் இலக்கிய நெஞ்சங்களின் பிரார்த்தனையும், எதிர்பார்ப்புமாகும்.

கவிஞன் காலத்தின் எழுதுகோல்.



**கவிதை :**

# இடுக்கினுள் உயிர்த்தல்

**- தில்லைநாதன் பவித்ரன்**

வன்மங்களின் மத்தியில் உயிர்ப்புகள்
இன்னும் சிறப்பாகப் படிமங்களால்
உயிரூட்டப்படுகின்றன.
தேவைகளை அணைத்தபடி
அசைத்துப் பிடுங்க முடியாத
ஆழ்ந்த ஈடுபாட்டினுள் பயணித்தபடி.

பிறத்தலும் பிறந்தபின் இறத்தலும்
இறந்தபின் உயிர்த்தலும்
ஒருமுறை அல்ல - மீண்டும் மீண்டும்
இடுக்கினுள் இருந்து ஆரம்பிக்கின்றன
ஏக்கங்களிலும், விம்மல்களிலும்
நோய்மைகளிலும் மேலோங்கியவாறே.

பயங்கரமாய்த் தோன்றும்
பதட்டங்களோடு
ஒரு குறிப்பைச் சொல்ல - ஓராயிரம்
கொலைகளைச் செய்பவனைப்
போலவும்
பல குறிப்புகளுக்காக - ஒரு சில
வரிகளை செய்பவனைப் போலவும்.

வகுக்கப்பட்ட இந்தப் பிரயத்தனங்கள்
கதிர்கள் செல்ல முடியாத வெளிகளில்
யாசிப்பதற்கு எவருமற்ற ஊனங்களாய்
வழிகின்றன.

குரலோங்கிய காலத்தில்
மலர்சாலைகளில்
குரலறுத்த காலத்தில்
மயானச் சாலைகளில்
தரித்தும் விழித்தும்
சலனம் கடக்கும்
உயிர்ப்புக்கள்.

மீண்டுமொரு காட்டிலோ
மீண்டுமொரு கடலிலோ
மீண்டுமொரு
நதிக்கரையிலோ
மீண்டுமொரு
கரு வழியாகவோ
உயிர்த்தலின் ஈடுபாட்டில்
இடுக்கினுள் நுழைகின்றன
ஒருமுறை அல்ல
மீண்டும் மீண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# சுட்ட பழம், சுடாத பழம்

- கே.எஸ்.சுதாகர் -

ஜெகதீசன் அவுஸ்திரேலியாவுக்குப் புலம் பெயர்ந்து 15 வருடங்கள் ஆகிவிட்டன. இந்தப் பதினைந்து வருடத்தில் அவர் கண்ட 'தேட்டம்' இதோ உங்கள் முன்னாலே நிற்கும் இந்த 'வசந்த மாளிகை' தான்.

வசந்தமாளிகை மூன்று மாடிகள் கொண்டது. அடித்தளம் நிலமட்டத்திற்கும் கீழே இருப்பதால் சிலர் அதை, "உது இரண்டு மாடிகள் தான்'' என்று சீண்டுவார்கள். அவரது காணித் துண்டைச் 'சரிவு நிலம்' என்று யாராவது சொன்னால் ஜெகதீசனுக்குக் கோபம் வரும். 'சிலோப் லாண்ட்' என்று திருத்திச் சொல்லுவான். பேஸ்மன்றில் (basement) றம்பஸ் றூமும் (rhombus room) ஸ்ரோர் றூமும் (store room) உண்டு. அவரது வீடு பெயருக்குத் தக்கமாதிரி வசந்த மாளிகை தான்.

வேலையால் வந்த ஜெகதீசனுக்குப் பிளேட்டில் உணவைக் கொடுத்து விட்டு, அறைக்குள் சென்று உடுப்பு மாற்றத் தொடங்கினாள் மனைவி வனிதா மணி. பெண்பிள்ளைகள் இருவரும் ஏற்கனவே ஆடை அணிந்து மணம் கமிழும் சென்ற் வாசனைகளுடன் ரி.வி.க்கு முன்னால் இருந்தார்கள்.

ஜெகதீசனின் பள்ளி நண்பன் ரவிச்சந்திரன் புற்ஸ்கிறே என்னுமிடத்தில் தொடர்மாடி ஒன்றில் வாடகைக்கு இருக்கின்றான். அவன் சமீபத்தில்தான் நாட்டிற்கு வந்திருந்தான். அவனது தாயாருக்குச் சுகமில்லை என்று தகவல் அறிந்ததும் மனைவி பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு இலங்கைக்குப் போய்விட்டான். அவனது வீட்டிற்குச் சென்று, லெட்டர் பொக்ஸ்ஷிற்குள் கிடக்கும் கடிதங்கள் மற்றும் இதர துண்டுப் பிரசுரங்களை எடுத்து வைக்கும் பொறுப்பு இவனிடம் வந்தது. அவனது வீடு அந்தக் கட்டடத்தில் இரண்டாவது மாடியில் இருந்தது. வீட்டின் குறுகிய நிலாமுற்றத்தில் சில பூச் சாடிகள் வைத்திருந்தான். அதற்கு நீரும் விடவேண்டும். வாரத்தில் வியாழக் கிழமையும் சனி அல்லது ஞாயிற்றுக்கிழமையும் சென்று வருவான்.



சாப்பாட்டு மேசையிலிருந்து ருசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஜெகதீசனைத் திடீரென்று அந்த எறும்புக் கூட்டம் திசை திருப்பியது. அதிர்ந்து விட்டான் ஜெகதீசன். அவனது நெற்றிக்கண் பார்வையை அசட்டை செய்த படி, பளபளக்கும் மொசைக்தரை மீது ஊர்கோலம் போயின அந்தக் கூத் தாடி எறும்புகள். நாலாபுறத்திலிமிருந்து புறப்படும் வீதிகள் ஒரு சந்தியை அடைவது போல அவை குசினியை முற்றுகையிட்டன. உணவுத் தட்டை மேசை மீது அதிரும்படி வைத்து விட்டு, குசினிக்குள்ளிருந்த அலுமாரியைத் திறந்து பார்த்தான். உள்ளே ஒரு பிஸ்கெற் பெட்டியை சம்ஹாரம் செய்து கொண்டிருந்தன அவை.

''வீடு மணக்கப்படாது எண்டு தான் செப்பறேற்றா இன்னொரு குசினி கட்டித் தந்தனான். இப்ப இந்த எறும்புக் கூட்டம் என்னெண்டு வீட்டுக்குள்ளை நுழைஞ்சது?'' கத்திய படியே பிஸ்கெற் பெட்டியைத் தூக்கி எறிந்தான். அது ரி.வி. பார்த்துக் கொண்டிருந்த பெண்களின் தலைக்கு மேலால் பறந்து சென்று பேகோலாவிற்குள் விழுந்தது. பிஸ்கெற் பெட்டி பறப்பை மேற்கொண்டிருக்கும் போதே எறும்புகள் பொலபொல வென்று உதிர்ந்து விழுந்தன.

"உது சிட்னியிலையிருந்து போன கிழமை விஜயன் வரேக்கை கொண்டு வந்தது. எக்ஸ்பென்ஷிவ் பிஸ்கெற் பெட்டியப்பா! இன்னும் உடைக்கேல்லை. அப்பிடியே புதுசாக் கிடந்தது.'' மாஸ்டர் பெட்றூமிற்குள் இருந்து குரல் வந்தது. எக்ஸ்பென்ஷிவ் என்ற சொல்லுக்கு எதிர்க் குரலாக, "வீட்டை விடவா?'' என்ற கேள்வி வந்தது.

''நான் போய்க் காருக்கை இருக்கிறன். வெளிக்கிட்டு முடிய வாங்கோ.''

''உந்தாளுக்கு இனி கொதி கிழம்பி விட்டுது.''

காரிற்குள் ஏறிய வனிதாமணி நுனி சீற்றில் இருந்தாள். இனி வனிதா மணிக்கு கொஞ்ச நேரம் டென்ஷன். கார் சிலவேளைகளில் றெட் லைற்றில் நிற்காது. வேகம் கூடிக் குறையும். எல்லாவற்றையும் வனிதாமணி தான் பார்க்க வேண்டும். காரிற்குள் பாட்டு ஒலிக்கும்போது தான் அவனது கொதி அடங்கிவிட்டது என்பதைப் அறிவார்கள்.

'முதல் வணக்கம் எங்கள் முருகனுக்கே' என்று தொடங்க, "அப்பா ஹைப்பொயின்ற் ஷொப்பிங் சென்ரர்'' என்று பின்னால் இருந்து ஒரு பெண் குரல் கொடுத்தாள். இரண்டு பெண்களும் ஒருபோதும் ரவிச்சந்திரனின் வீட்டிற்குப் போனதில்லை. ரவிச்சந்திரனது வீட்டு மணம் அவர்களுக்கு அலர்ஜி. மணம் மாத்திரம் ஒவ்வாமையைக் கொடுக்கும் என்பதல்ல. சில நேரங்களில் சில மனிதர்களும். அதனால் அவர்கள் இருவரையும் Highpoint shopping center



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல் இறக்கிவிட்டுப் போவார்கள். திரும்ப வரும்போது ஏற்றி வருவார்கள்.

ஹைப்பொயின்ற் வந்தது. பெண்கள் இருவரும் இறங்கிக் கொண்டார்கள். இனி ரவிச்சந்திரனுடைய வீடு தான். தூரத்தே வரும்போதே அழகான காட்சி தெரிகிறது. தொடர் மாடியிலுள்ள பன்னிரண்டு தபால் பெட்டிகளில் ஒன்றைத் தவிர மிகுதி எல்லாவற்றிலும் வழித்துத் துடைத்து விடப்பட்டிருந்தன. ரவிச்சந்திரனது லெட்டர் பொக்ஸ் தெருவில் சின்னாபின்னமாக இறந்து கிடக்கும் மிருகமொன்றை நினைவூட்டியது.

"காரை ஸ்லோ பண்ணுங்கோ. நான் எல்லாத்தையும் எடுத்து வாறன்." இறங்கிக் கொண்ட வனிதாமணி, பறந்தது போக இருந்ததில் முக்கியமான கடிதங்களைப் பத்திரப்படுத்திக் கொண்டாள். இரண்டாவது மாடிக்குச் செல்லும் வாசலில் பழைய ஃபிரிஜ் ஒன்று வாய் திறந்தபடி இருந்தது. இரண்டொரு தலையணைகளும் வெளிறிய குசன்களும் சிதறிக் கிடந்தன.

"நீங்கள் வேலையாலை களைச்சுப் போய் வந்தனியள். உந்த ஈசிச் செயரிலை படுத்திருங்கோ. நான் பூச்சாடிகளுக்கு தண்ணி விட்டிட்டு வாறன்." துரிதகதியில் காரியத்தில் இறங்கினாள் வனிதாமணி.

ஈசிச் செயரிற்குள் சரிந்த ஜெகதீசன் அதன் துணியை இழுத்துப் பார்த்து அதன் பலத்தைப் பரீட்சித்துக் கொண்டான். பலம் பார்க்கக் குனிந்தவனுக்கு அதிர்ச்சி எறும்பு ரூபத்தில் காத்திருந்தது. ஒன்றையுமே காணாதவன் போலத் தனது இரண்டு கால்களையும் ஈசிச்செயரின் சட்டகத்தில் தூக்கிப் போட்டுக் கொண்டான். வனிதாமணி தனது கடைக்கண் பார்வையை அவனை நோக்கி எறிந்து விட்டு தனது வேலையைத் தொடர்ந்தாள்.

வேலை முடிந்ததும் எறும்புகள் செல்லும் தடத்தின் வழியே நடந்து சென்றாள். ஆதி எங்கே என்று தெரியாவிட்டாலும், அதன் அந்தம் பெரும்பாலும் குசினிதான் என்று குழந்தைப் பிள்ளைக்கும் தெரியும். அந்தம் இருந்த இடம் ஒரு மலிபன் மாறி பிஸ்கெற் ரின். அதை எடுத்து தூர எறியும் நோக்கில் ஒரு ஷொப்பிங் பாக்கிற்குள் போட்டு இறுகக் கட்டினாள். வீட்டிற்கு முன்னால் உள்ள வேஸ்ற்பின்னிற்குள் போடுவதற்காகப் படிகளில் இறங்கினாள்.

"மணி! எங்கை போகிறீர்?"

"பிஸ்கெற் எல்லாம் எறும்பு. தூர எறிஞ்சு போட்டு வாறன்."

"இஞ்சை கொண்டு வாரும். ஊதிப்போட்டு சாப்பிடலாம்!"

"நிறைய எறும்பாக் கிடக்கு!"

"அதனாலென்ன? எறும்பு சாப்பிட்டா கண் பார்வை நல்லா வரும் எண்டு விஞ்ஞானிகளும் சொல்லுறான்கள்!" ——

"......"



நிகழ்வுகளின் அவதானங்கள்

# மூவினப் படைப்பாளிகளைக் கௌரவித்த விழா

மூவினப் படைப்பாளிகளைக் கௌரவிக்கும் முகமாகக் கடந்த 26.05.2012 ஆம் திகதி கொடகே சகோதர புத்தக வெளியீட்டு நிறுவனத்தின் அனுசரணையுடனும், சிங்கள தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டிலும் திரு. திருமதி. சிறிசுமன கொடகே தம்பதிகளின் முன்னிலையிலும், தேசிய நூலக சேவைகள் ஆவணமாக்கல் சபை கூடத்தில் விழாவொன்று நடைபெற்றது. இவ்விழாவில் திரு. கமல் பெரேரா, திரு. மேமன்கவி ஆகியோர் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

சிங்கள எழுத்தாளர் எஸ்.ஜீ.புஞ்சிஹேவா, பேராசிரியர் சபா ஜெயராசா, கலாநிதி எம்.எஸ்.மொஹமட் அனஸ் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் இன ஐக்கியத்துடனும், முற்போக்குச் சிந்தனையுடனும் செயற்பட்டு வரும் திருமதி. பத்மா சோமகாந்தன், திரு. தெனகம சிறிவர்தன, திரு.திக்குவல்லை கமால் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

இவ்விழாவில் திரு. தெனகம சிறிவர்தன அவர்களைப் பற்றி திரு. எஸ்.ஜீ.புஞ்சிஹேவா அவர்களும், திருமதி. பத்மா சோமகாந்தனைப் பற்றி பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களும், திரு. திக்குவல்லை கமாலைப் பற்றி கலாநிதி எம்.எஸ்.மொஹமட் அனஸ் அவர்களும் சிறப்புரைகள் ஆற்றினார்கள்.

இவ்விழாவில் திரு. தெனகம சிறிவர்தன அவர்களின் நூல் ஒன்று ராகுக் அவர்களின் மொழிபெயர்ப்பில் தமிழிலும், திருமதி. பத்மா சோமகாந்தனின் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகள் திரு. உபாலி லீலாரட்ன அவர்களினால் சிங்களத்திலும், திரு. திக்குவல்லை கமாலின் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகள் ஹேமச்சந்திர பத்திரன அவர்களின் மொழிபெயர்ப்பில் சிங்களத்திலும் நூல்களாக வெளியிடப்பட்டன. அத்தோடு கௌரவிக்கப்பட்ட மூவினப் படைப்பாளிகளுக்கும் கௌரவ விருதுகள் வழங்கப்பட்டன.

சிங்களத் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் சஞ்சிகையான 'தீபம்' சிறப்பு மலரும் இவ்விழாவில் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் அவர்கள் இன ஐக்கியத்தை எடுத்துக்காட்டும் சிறப்பான ஓர் உரையை நிகழ்த்தினார்.

இறுதியாக திரு. அமரசிங்க குடகல் ஆர, திரு அந்தனி ஜீவா ஆகியோர் நன்றியுரை ஆற்றினார்கள்.




மூவினதைச் சேர்ந்த கணிசமான படைப்பாளிகள் இவ்விழாவில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.









இவ்விழாவில் கௌரவிக்கப் பட்ட மூவினப் படைப்பாளி களிடம் இவ்விழாவைப் பற்றி கேட்ட பொழுது,

**பத்மா சோமகாந்தன் :**

மூவினப் படைப்பாளிகள் கௌரவிக்கப்படுதல் இன ஐக்கியத்திற்கான ஒரு குறியீடாகும். இப்பணி எங்களோடு முடிந்து விடாது மேலும் தொடர வேண்டிய ஒரு பணியாகும்.












**தெனகம சிறிவர்தன :**

இலக்கியம் இதயத்தின் மொழி. இதயத்தால் பேசுகின்ற, இதயங்களோடு பேசுகின்ற படைப்பாளிகளைக் கௌரவிப்பது என்பது வெறும் விழாவிற்கு அப்பாலான ஒரு சமூகப் பெறுமானம் மிக்க நிகழ்வு எனலாம்.

**திக்குவல்லை கமால் :**

இது எங்கள் மூவருக்கான விழாவல்ல. இந்த நாட்டில் இன ஐக்கியத்தைப் பற்றி மானசீகமாக யோசிக்கும் எல்லாப் படைப்பாளிகளுக்கும் பொருத்தமான விழா இதுவாகும்.



# புரவலர் புத்தகப் பூங்காவின் இரு நூல்களின் வெளியீட்டு விழா

16.07.2012 சனிக்கிழமை அன்று கொழும்பு தமிழ்ச்சங்கம் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் புரவலர் புத்தகப் பூங்காவின் 29, 30 ஆவது நூல்களின் புத்தக வெளியீட்டு விழா நடைபெற்றது. ஈழத்து கலை இலக்கியத்துறையில் நீண்டகாலம் பணியாற்றிய பன்பாலாவின் **'நாளைய தீர்ப்புகள்'** எனும் சிறுகதைத் தொகுப்பும், 30ஆவது வெளியீடாக மிக ஆர்வத்துடன் சமீப காலத்தில் ஈழத்து கலை இலக்கியத் தளத்தில் இயங்கிவரும் தியத்தலாவ எச்.எப்.ரிஸ்னாவின் **'இன்னும் உன் குரல் கேட்கிறது'** எனும் கவிதைத் தொகுதியும் வெளியிடப்பட்டன.

மல்லிகையின் ஆசியரியர் டொமினிக் ஜீவாவின் தலைமையிலும், புரவலர் ஹாசிம் உமர் முன்னிலையிலும் நடைபெற்ற இவ்விழா புரவலர் புத்தகப் பூங்காவின் உறுப்பினரும், ஊடகவியலாளருமான கே.பொன்னுத்துரையின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகியது. இவ்விழாவின் நூல்களின் வெளியீட்டுரையை ஞானம் ஆசிரியர் தி.ஞானசேகரன் நிகழ்த்தினார். ஏற்புரைகளை நூலாசிரியர்களான பன்பாலா அவர்களும், தியத்தலாவ எச்.எஸ்.ரிஸ்னாவும் நிகழ்த்தினார்கள்.

ஊடகவியலாளர் கலாபூஷணம் எப்.எம்.பைரூஸ் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். இவ்விழாவில் வெளியிடப்பட்ட நூல்களின் ஆசிரியர்களின் அபிமானிகளும், பல கலை இலக்கியவாதிகளும் கலந்துகொண்டார்கள். இவ்விழாவில் பார்வையாளர்களாகக் கலந்துகொண்ட சிலரிடம் இவ்விழாவைப் பற்றிய கருத்துக்களைக் கேட்ட பொழுது,

**தம்பு சிவா :** புரவலர் புத்தகப் பூங்காவின் வெளியீட்டு விழா கண்டேன். முதுபெரும் எழுத்தாளர் டொமினிக் ஜீவா தலைமையுரையில் அவரின் ஆதங்கம் முன்வைக்கப்பட்டது. உரையில் தொடர்ந்தும் ஆதங்கம் வேண்டாம். வளரும் படைப்பாளிகளைப் போற்றினால் போதும் ஐயா! கவிதைகளில் காதல் இருப்பது இன்பந்தானே? ஞானம் ஐயா இளசுகளைக் காதலிக்க விடுங்கள்! உங்கள் அறிமுகவுரை - வெளியீட்டுரையாகுமா? புரவலர் ஹாசிம் உமர் அவர்களே! 100வது புத்தக வெளியீட்டு விழா வைப்பீர்களா? டொமினிக் ஜீவாவின் ஆதங்கம் நிறைவேறுமா? பொறுத்திருப்போம். காலம் வரும்.

**மாவனல்லை எம்.எம்.மன்ஸூர் :** இளம் எழுத்தாளர்களதும், முதிய எழுத்தாளர்களதும் படைப்புகளைப் புத்தகமாய் கொண்டுவரும் புரவலர் புத்தகப் பூங்காவிற்குப் புத்தூக்கம் அளித்துவரும் புரவலருக்கு நன்றி. பொருத்தமான தொடக்கவுரை நிகழ்த்திய மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்களதும், பன்பாலாவின் நூலுக்கும், ரிஸ்னாவின் கவிதைத் தொகுதிக்கும் நயமான நயவுரை தந்த ஞானம் ஆசிரியர் திரு. தி.ஞானசேகரன் அவர்களதும் கருத்துக்கள் அவைக்குப் பயன்மிக்கது. மொத்தத்தில் குறுகிய நேரத்தில் நடந்து முடிந்த பெறுமதி மிக்க ஒரு புத்தக வெளியீட்டை எண்ணி மகிழ்ந்தேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**W.M.வஸீர் :** புரவலர் புத்தகப் பூங்கா நிறுவனம் இளம் எழுத்தாளர்களுக்குக் கரம் கொடுத்து உதவுவது அவர்களுக்குப் பெரும்பலமாக அமைகின்றது.

## சம்ஸியா கலீலின் ஓவியக் கண்காட்சி

ஜூலை மாதம் 14ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை கொழும்பு கலாபவனத்தில் Nature's Odyssey என்னும் தலைப்பின் கீழ் திருமதி. சம்ஸியா கலீலின் ஓவியக் கண் காட்சி நடைபெற்றது. முற்றும் முழுதாக இயற்கைக் காட்சிகளை தன் தூரிகை வழியாக ஓவியங்களாக வெளிக் கொணர்ந்துள்ளார் திருமதி. சம்ஸியா கலீல் அவர்கள். இலங்கை வாழ் முஸ்லிம் சமூகத்தின் பெண்கள் பரவ லாக சமீபகாலமாக கல்வித்துறையிலும், கலை இலக்கியத் துறை யிலும் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தி வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அந்தவகையில் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிட மாகவும், தற்போது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டுள்ள இவரின் ஓவியக் காட்சியும் நமது கவனத்தை ஈர்த்தது.





சிறுவயது முதலே ஓவியத்தில் ஆர்வம் மிக்க சம்ஸியாவுக்கு, சிறு வயதிலேயே அவரின் தந்தையார் கொடுத்த ஊக்கத்தின் காரணமாக கொழும்பு கலாபவனத்தில் Mr. Pulasthi Ediriweera அவர்களிடம் முறையாக ஓவியத்தைக் கற்றுக்கொண்டார். இவர் பல ஓவியப் போட்டிகளில் பல சிறப்புப் பரிசில்களை பெற்றுள்ளார். இக்கண்காட்சியில் இயற்கைக் காட்சிகளை சித்திரிக்கும் ஓவியங்கள் இடம்பெற்றமை இயற்கை மீதான இவரது தீவிரமான பிடிப்பை வெளிப் படுத்தியது. இவ் ஓவியக் கண்காட்சியைப் பார்வையிட்ட ஓவிய ஆர்வலர் சிலரிடம் இருந்து பெறப்பட்டக் கருத்துக்கள்.

**முல்லை முஸ்ரிபா :** ஓவியத்தைச் சார்ந்த செய்நேர்த்தித் திறன் சம்ஸியா கலீல் அவர் களின் இயற்கைசார் ஓவியங்களின் வர்ணங்களின் தெரிவுகளின் வழியாக இயற்கை நம் வசமாகின்றது. கூர்ப்பு அடையும் தேடல் தன் இருப்பின் நகர்வுடன் இயற்கையை இணைக்கும் பொழுது இவரிடமிருந்து இன்னும் சிறப்பான இயற்கை சார்ந்த ஓவியங்கள் நமக்கு கிடைக்கும் என்று நம்புகின்றேன்.

**மேமன்கவி :** ஒரு சிருஷ்டிகர்த்தா தனது ஆக்க சிருஷ்டியில் வெறுமனே உள்ளதை உள்ளபடி சித்தரிப்பதில்லை. அதற்கு அப்பால் அந்த உள்ளதில் உள்ளபடியே ஒளிந்திருக் கும் சமூக இயக்கத்துடன் உரசும் தரிசனங்களை தனது ஆக்கங்களில் வெளிப்படுத்துவதே சிறந்த ஆக்க சிருஷ்டி ஆகிறது. திருமதி. சம்ஸியா கலீலும் தனது இயற்கை சார்ந்த பார்வையை தன் புற யதார்த்தத்துடன் (பெண்ணியம் சார்ந்த சிந்தனை உட்பட) உரசிப் பார்க்கும் போக்கில் தன்னை இணைக்கும் பொழுதுதான் இயற்கையைப் பற்றி பேசுகின்ற நல்லதொரு ஓவியராகப் பரிமாணம் பெறுவார் என்பது மறுப்பதற்கில்லை.

தொகுப்பு : கே.பொன்னுத்துரை






# 'மொழியைச் செழுமையாக்குவது படைப்பிலக்கியம்'

## – முருகேசு ரவீந்திரன்

- எம்பியெஸ்

'படைப்பாளியாக இருந்து கொண்டு விமர்சனம் செய்வது கஷ்டம். படைப்பாற்றலைத் தவமென்பர். இப்போ வாசிப்பது குறைவு. அதேபோல் வானொலி யைக் கேட்பதும் குறைவு. இணையத்தில் வருப வைகளை வாசிப்பதும் மிகக் குறைவு. பத்திரிகை களின் முன்பக்கத்தில் அரசியல் செய்திகள் வரு கின்றன. ஆக்க இலக்கியங்கள் வெளிவருவது குறைவு. *'காலமாம் வனம்'* சிறுகதைத் தொகுப்புக் கதைகளில் நீண்டகாலத்துப் பிரச்சினைகள் திருப்பித் தரப்பட்டுள்ளன. அவை களை இன்று படிக்கும் போது சலிப்புத்தான் ஏற்படுகிறது. இதை வசந்தி தயாபரனின் முதலா வது தொகுப்பாகக் கருத முடியவில்லை. வாசித்த பின் முழு மனநிறைவைத் தந்தது.'

கொழும்பு திருமறைக் கலாமன்ற நோன்மதி இலக்கியப் பாசறையில் கலந்து கொண்டு, *'தகவம்'* வசந்தி தயாபரனின் சிறுகதைத் தொகுப்புக்கு அறிமுக உரை நிகழ்த்துகையில்; பிரபல விமர்சகரும், வானொலி அறிவிப்பாளருமான முருகேசு ரவீந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஓய்வு பெற்ற பிரதி பரீட்சை ஆணையாளர் போல் அன்ரனி தலைமை வகித்த இந் நிகழ்வு 03.07.2012 ஆந் திகதி, கொழும்பு 13, புனித ஆசீர்வாதப்பர் வீதியில் அமைந்துள்ள மன்றத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

திருமறைக் கலாமன்றத் தீவிர செயற்பாட்டாளர்களாகவிருந்து அமரர்களான மறை ஞான தீபம் அருள் கே. இராஜேந்திரம், குயின்ரஸ் ஆகியோருக்கு இரு நிமிட மௌனாஞ்சலி செலுத்தப்பட்டது. திருமதி. ரஞ்சனி நாகராஜ் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடினார்.

**முருகேசு ரவீந்திரன் தொடர்ந்து கூறியதாவது :-** இன்று போர் அவலங்கள் பற்றிய உணர்ச்சி பூர்வமான சிறுகதைகளே ஈழத்துப் படைப்பாளிகளால் படைக்கப்படுகின்றன. இவை வெறும் புலம்பல்களாகவே இருக்கின்றன. தொகுப்பின் சில சிறுகதைகள் மூலமாக வசந்தி தயாபரன் ஒரு பெண்ணியவாதியாகவே இனங் காணப்படுகிறார். கதைகள் வெளிப்படுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யதார்த்தம் அவைக்குச் சிறப்பளிக்கின்றது. படைப்பாளிக்குப் போதிய சுதந்திரம் இருக்க வேண்டும். ஈழத்தில் சிறுகதைகளை விமர்சிப்பதுக்கு பாரம்பரிய அளவுகோல்களையே வைத்திருக்கின்றனர். இன்று சில எழுத்தாளர்களால் கட்டுடைத்தல் செய்யப்படுகின்றது. இதற்கும் சுதந்திரம் அவசியமாகின்றது. எழுத்தாளர் எல்லாவற்றையும், எதையும் எழுதலாம். சிறுகதையொன்றை உணர்வு ரீதியாகச் சொல்ல வேண்டும். தீர்வொன்று படைப்பில் இருக்க வேண்டும். அது எதிர்பார்க்கவும் படுகிறது. ஈழத்துப் படைப்பாளிகள் வைத்திருக்கும் கருத்தியல்களை மாற்ற வேண்டும். தொனிப் பொருளைத் தேர்ந்தெடுப்பதில் அருவருப்பு இருக்கக் கூடாது. தமிழகத்து எழுத்தாளரொருவர் *'பீ'* என்ற தலைப்பில் படைப்பொன்றைத் தந்துள்ளார்.

*'காலமாம் வனம்'* தொகுப்பில் பன்னிரண்டு சிறுகதைகள் உண்டு. *'புதியதோர் உலகு செய்வோம்', 'உயிர்க்கூடு'* சிறப்பானவையாக இருக்கின்றன. மொழிநடைச் சிறப்புண்டு. தொகுப்புக் கதைகளில் எழுத்துப் பிழைகள் இல்லாதிருப்பது மெச்சக் கூடிய விடயமாகும். வடிவமைப்பும் நல்லதாக இருக்கின்றது. பெண்ணியம் மேலோங்கியிருக்கிறது. வசந்தி தயாபரனின் எழுத்தாளுமையைக் காணமுடிகின்றது. *'பாத்திர மறிந்து...'* என்ற சிறுகதையும் சிறப்பானது. பெண்களே பெண்ணடிமைத்தனத்துக்கு உடந்தையாகும் போக்கை வெளிப்படுத்துகிறது. கொடுக்கப்பட்டுள்ள தீர்வு சரியா? பிழையா? என்பது விவாதத்துக்குரியதாகும். சிறுகதையொன்றில் ஆசிரியர் வலிந்து முடிவைத் திணிக்கும் போது அது சிறுகதையைச் சிதைக்கும். போர்ச் சூழலை எழுதியிருப்பவர், வாழ்வியலை எழுத அச்சப்பட்டுள்ளார். காதல், குடும்பச் சிக்கல்களை எழுதுவதில் எழுத்தாளர்கள் இப்போ தயக்கம் காட்டுகிறார்கள். எதிர்ப்புகளுக்கு முகம் கொடுக்கும் துணிச்சல் இன்றைய எழுத்தாளர்களிடம் இல்லை. படைப்பாளிகள் விமர்சகர்களாக மாறும் போக்கு இன்று வலுக்கின்றது. எஸ்.பொன்னுத்துரை (எஸ்.பொ) மிகத் துணிச்சலான எழுத்தாளர். துணிச்சலாக எழுதினார். அழகு சுப்பிரமணியம் *'அவளுக்கு வயது வந்து விட்டது'* என்ற நாவலைத் தயங்காது வெளியிட்டார். இயல்பான விடயங்களைப் படைப்புகளில் காட்டினால் பிரச்சினை எழும் என்ற தயக்கம் எமது எழுத்தாளருக்குண்டு. ஈழத்து எழுத்தாளர்களது படைப்புகள் பெரும்பாலும் ஒழுக்கம் சார்ந்தவையாகவே இருக்கின்றன. இது சம்பந்தமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். உண்மை வெளிவர வேண்டும். மு.பொன்னம்பல (மு.பொ)த்தின் *'வேட்டை'* என்ற சிறுகதை மிகச் சிறப்பானது. அதில் பாலியல் பிரச்சினையை மிக நாசுக்காகச் சொல்லியுள்ளார். தாம் சார்ந்த அமைப்புகளின் இலட்சிய நோக்கில் படைப்பாளிகள் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். அழகியலைக் கவனிக்காது செய்திகளுக்கு முக்கியத்துவம் காட்டுகின்றனர். வசந்தி தயாபரனின் சிறுகதைகளிலும் செய்தியே முதன்மையாகின்றது. *'காலமாம் வனம்'* சிறுகதையும் சிறப்பானது. நெஞ்சில் பதியத்தக்கது. தொகுப்புகளின் வெளியீட்டால் எழுத்தாளர்கள் பண இலாபத்தைப் பெற முடியாது. பெரும் வலியோடுதான் தொகுப்புகளைக் கொண்டு வருகின்றனர். மொழி செழுமையாவதுக்கு படைப்பிலக்கியம் முக்கியமானது. வெளிநாடுகளில் எழுத்தாளர்கள் மதிக்கப்படுகின்றனர். அங்கு அரசியல்வாதிகள் எழுத்தாளரின்



படைப்புகளை ஆழமாகப் படித்தே கொள்கைகளை வகுக்கின்றனர். எனவே எழுத்தாளனின் படைப்பு மிக முக்கியமானது.

**தலைமை உரை : ஜி.போல் அன்ரனி** (ஓய்வு பெற்ற பிரதி பரீட்சை ஆணையாளர்)

கொட்டாஞ்சேனை பல கலைஞர்களை உருவாக்கியுள்ளது. விவேகானந்த மண்டபம், முருகன் தியேட்டர் என்பனவற்றில் பல கலை நிகழ்ச்சிகள் அன்று நடந்தன. வ.இராசையா மாஸ்டர் குடும்பத்தை சென். லூசியஸ் வீதியில் இருந்த அவர்களது இல்லத்தில் சந்தித்ததுண்டு. மாஸ்டர் இராசையா எனது வானொலி ஆசான். அவரது மகளே வசந்தி தயாபரன். வானொலி இளைஞர் மன்ற நிகழ்ச்சியில் அடிக்கடி கலந்து மாஸ்டரிடம் தமிழைக் கற்று வளர்ந்தேன். பிரபல ஒலிபரப்பாளர், தேசங் கடந்தும் பேசப்படும் பி.எச்.அப்துல் ஹமீட்டும் இராசையா மாஸ்டரால் உருவாக்கப்பட்டவர்தான். இலக்கியச் செழுமை உடையவர். தமிழர் கதைஞர் வட்டம் என்ற தகவத்தை அமைத்து இலக்கியப் பணி செய்தார். அந்தக் காலத்தில் இளைஞர் மன்ற நிகழ்ச்சியின் நாடகங்களுக்கு அவர் வீட்டுக்குச் சென்றபோது வசந்தி தயாபரன் சிறுமியாக இருந்தார். *'வசந்திக்கு இலக்கியமும் படைப்பாக்கத் திறனும் முதுசொம்'* எனப் பிரபல எழுத்தாளர் கோகிலா மகேந்திரன் புகழ்ந்துள்ளார். வசந்தி தயாபரனின் மென்மையான சுபாவம் அவரது தந்தையிடமிருந்து வந்த பொக்கிஷம். இராசையா மாஸ்டர் கோபிக்க மாட்டார். தமிழில் பிழை கண்டால் அவருக்கு உச்சமான கோபம் ஏற்படும். அத்தகைய பண்பான ஆசானின் சீடனாக இருந்ததில் பெருமை கொள்கிறேன். *'காலமாம் வனம்'* தொகுப்பில் மூன்று சிறுகதைகளில் கொட்டாஞ்சேனைச் சூழல் படம் பிடிக்கப்பட்டுள்ளது. அத்தகைய சூழலை இப்போ காணமுடியாது. அன்றாடம் காண்கின்ற பெண் பாத்திரங்கள் கதைகளில் வருகின்றன. பாத்திர வார்ப்பு அற்புதமாக இருக்கின்றது. மனிதநேயம், சமூக நோக்குக் கதைகளில் தெறிக்கின்றன. எந்தவொரு சிறுகதையும் பால் உணர்வைத் தூண்டவில்லை.

**நினைவுரை : 'மறைஞான தீபம் அருள் மா.இராஜேந்திரம்' உரைஞர் : எம்.தாசியஸ்**

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

அருள் மா.இராஜேந்திரம் காலமாகி இரண்டு ஆண்டுகளாகி விட்டன. தவிர்க்க முடியாத காரணத்தால் சென்ற ஆண்டைப் போல் இவ்வாண்டும் சுடரொளி, வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் அவரை நினைவு கூர்ந்து கட்டுரை எழுத முடியாது போய் விட்டது. வருந்துகிறேன். அவர் இறந்தது நேற்றுப் போல்தான் இருக்கின்றது. ஆனால் இரண்டு ஆண்டுகளாகி விட்டது. திருமறைக் கலாமன்றத்தோடு மிகவும் நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்தார். வழிகாட்டியாக இருந்தார். திருப்பாடுகளின் காட்சி நடத்துவதற்கு உறுதுணையாக உதவினார். அவரிடம் ஆழ்ந்த தமிழ்ப் பற்று இருந்தது. கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர். தமிழ்ச் சங்கம் பாராட்டு விழா வைத்தது. பொது நலத்தை விரும்புபவர். அடக்கம், அமைதி அவரது பண்புகள். 1952 லிருந்து எழுத்துப் பணி செய்தார். சமூகம், சமயம் சார்ந்தவைகளை எழுதினார். இறை இரக்கப் பக்திக் குழுவில் சிவப்பிரகாசம் மரியதாசோடு சேர்ந்து உற்சாகமாக இயங்கினார். தனது கருத்துக்களைத் துணிவாக வெளியிட்டார். Sun, Daily Mirror, Observer, Daily Newa ஆகிய ஆங்கிலப் பத்திரிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலும் ஆங்கிலத்தில் எழுதினார். எயிட்ஸ், இளைஞர் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுத்து எழுதினார். ஆங்கிலத்தில் சிறந்த புலமையுண்டு. மொழிபெயர்ப்பில் விற்பன்னர். வெளிநாட்டுப் பத்திரிகைக் கட்டுரைகளைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். தேடிச் சென்று பழகினேன். தனது கடைசிக் காலத்தைப் பிறந்த மண்ணில் கழிக்க ஆசை கொண்டார். கொழும்பில் நண்பர்களிடமிருந்து விடைபெற்று வசாவிளான் சென்றவர் திரும்பி வரவில்லை. அருள் மா.இராஜேந்திரம் மறக்க முடியாத பெரியார்.

### கருத்துரை : எஸ்.லோஷன்

வசந்தி தயாபரனின் *'காலமாம் வனம்'* தொகுப்பை வாசித்தேன். சிறுவருக்கும் புரியும் படியான எளிமையான நடையில் சிறுகதைகளை எழுதியுள்ளார். யதார்த்தமான மனக் காட்சிகளைத் தருகின்றன. தொகுப்பின் சிறுகதைகள் 2002 - 2011 காலப் பிரிவில் வெளியானவை. கூடுதலாக 'மல்லிகை' சஞ்சிகையில் வெளிவந்த சிறுகதைகள். சிறுகதையொன்றைப் படைப்பதென்பது இலேசுபட்ட காரியமல்ல. நெடுங்காலத்தையும் எடுக்கும். வெளிநாட்டைப் போல் எமது நாட்டில் எழுத்தாளர்கள் ஊக்குவிக்கப்படுவதில்லை. பால் வாங்க பணமற்றிருந்த றோலிங் என்ற அமெரிக்கப் படைப்பாளி இன்று உலகின் கோடீஸ்வரர்களில் ஒருவர். இன்று மிகவும் பிரபலத்தைப் பெற்றிருக்கும் கரிபொட்டார் நூல்களின் படைப்பாளி இவர்தான். வசந்தி தயாபரனின் முதல் சிறுகதைத் தொகுப்பு இந் நூல். இணையத்தளங்களில் வாசிப்பவர்கள் படைப்பிலக்கியத்துக்குள் நுழைய மாட்டார்கள். தமிழ்ச் சமூகம் விழிப்படைய வேண்டும். சிறுகதைகளைச் சொந்த அநுபவங்களா? கற்பனையா? என்றெல்லாம் கிண்டிக் கிளறுகிறோம். ஈழத்து நூல்கள் 300 பிரதிகள் விற்பதே பெரிய விடயம். இருந்தும் சம காலத்தில் இங்கு நூல்கள் வெளிவந்து கொண்டிருப்பது பாராட்டத்தக்கதாகும்.

### ஏற்புரை : வசந்தி தயாபரன்

நானொரு பெண்ணியவாதி அல்ல. மகா கவி சுப்ரமணிய பாரதியாரிடம் எனக்கு நம்பிக்கை உண்டு. ஆணும் பெண்ணும் சமமென்பதில் இணக்கப்பாடுண்டு. பெண்ணுக்கு அநீதி இழைத்தலை, காயப்படுத்தலை, ஒடுக்கப்படுதலை எழுத்தாளர்கள் எழுத வேண்டும். அதையே நான் செய்கிறேன். கருத்தைச் சொல்லச் சுதந்திர முண்டு. தங்கு தடையின்றி கருத்துகள் வரும். நிறைவான முடிவைப் படைப்பில் கொடுக்க வேண்டும். சமுதாயத்தை மாற்ற எழுச்சியை ஏற்படுத்த வேண்டும். இலக்கில்லாமல் இலக்கியம் இல்லை. சிறுகதையின் முடிவை வாசகரில் திணிக்கக் கூடாது. ஈழத்து எழுத்தாளர்கள் சளைத்தவர்களல்ல. கொழும்பு 13, நல்லாயன் கல்லூரியில் கற்றேன். சமரச சன்மார்க்கத்தை அறிந்திருக்கிறேன். எனது சிறுகதைகளில் மனித நேயம் உண்டென்பதில் அர்த்தமுண்டு. எனது எழுத்துகளில் அகநிலைப் போராட்டத்தைச் செய்கிறேன். சமூக மாற்றத்தை ஏற்படுத்தி எதிர்காலச் சந்ததிக்கு நல்லதோர் சமுதாயத்தை ஒப்படைக்க வேண்டும். எழுதுவதற்கு வாழ்விலிருந்து தெறிக்கும் ஒரு சிறு பொறி போதும். எனது சிறுகதைத் தொகுப்பு வாசகர்களாகிய உங்கள் கைக்கு வந்து விட்டது. அது தசாப்தங்கள் கடந்தும் பேசப்படுமா? மறக்கப்படுமா? என்பது எனக்குத் தெரியாது. இன்று இந்நூல் நான் பிறந்த மண்ணான கொட்டாஞ்சேனையில் அறிமுகம் செய்யப்படுவது உணர்வு ரீதியான மகிழ்ச்சியை எனக்குத் தருகிறது.

கொழும்பு திருமறைக் கலாமன்ற 'நதி நூலகம்' பற்றி நியூற்றன் பேசினார். மன்ற இணைப்பாளர் அம்புறோஸ் பீற்றர் (ஜே.பி) நன்றியுரை கூறினார்.



**கவிதை :**

# வரும்ம்ம்... ஆனா வராது

- கொற்றை பி.கிருஷ்ணானந்தன்

வட்டமிடும் வல்லூறுகள்
வாய்ப்புக்காகக் காத்திருக்கின்றன.
இன்றோ நாளையோ
இறங்குவதற்கு ஏற்ற தருணத்திற்காய்
ஏங்குகின்றன.

பெரிய மிருகங்கள் மிதிக்க - உதைக்கச்
சிறிய மிருகங்கள் சிதறி ஓடுகின்றன.

அவனருளாலே அவன்தாழ் வணங்க
இடி இடித்தது
மின்னல் மின்னியது
மழை பொழியவில்லை
எப்படியோ பயிர்கள் அழிந்தன.

பெரியவனுக்கும் மனமில்லை
சின்னவனுக்கும் வழியில்லை
ஆனாலும்..........
அயலானிடம் சரணாகதி
ஆபத்தென்ற அறிவுமில்லை.

புதிய மேய்ப்பர்கள்
அவ்வப்போது வந்து போவர்
மந்தைகளின் நலனில்
மேய்ப்பர்களுக்கு இஷ்டமில்லை.

இங்கும் அங்கும் எங்கும்
கூடுவர் கதைப்பர்
திட்டம் போடுவர்
தீர்வு..........?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# *School Bag* (ஸ்கூல் பாக்)

- கெகிறாவ ஸஹானா

**மா**ணவர்கள் அணிவகுத்து நிற்கிறார்கள். தமிழ் மொழித் தினப் போட்டிகளுக்காக - வலய மட்டத்தில் போட்டியிடுவதற்காக - ஏழு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள இன்னொரு பாடசாலைக்குப் போகிறார்கள். மொத்தம் பத்துப் பேர். வான் வந்து நுழைவாயிலில் நிற்கிறது.

ஷெரீபா டீச்சரும், மஹ்ரூப் ஆசிரியரும் அவர்களைக் கூட்டிச் செல்வதற்காக முன்னால் வந்து நிற்கிறார்கள். போகுமுன்னால் அலுவலகத்தில் ஏதோ எழுதிக் கையொப்பமிடுகிறார்கள். அவர்களுள் ஷெரீபா டீச்சர் ரொம்ப பழக்கமுள்ளவர். நிறையப் போட்டிகளுக்கு மாணவர்களை அழைத்துச் சென்றிருக்கிறார். வெற்றி பெற்றிருக்கிறார்.

ஆயிற்று.

எல்லா மாணவர்களையும் வானில் ஏற்றியாயிற்று. அனைத்து மாணவர்களும் நீலம் பளீரிடும், வெள்ளைச் சீருடையில் ரொம்ப அழகாக இருக்கிறார்கள்.

வான் விரைந்து சென்று புதிய பாடசாலை முன்னால் நிற்கிறது. இன்னும் பல வாகனங்கள் பாடசாலை நுழைவாயிலுக்கு வந்து மாணவர்களை இறக்கிச் செல்வதும் போவதுமாக இருக்கின்றன.

வானை விட்டு அனைவரும் இறங்கிய பின்னர் ஆசிரியர் ஏதோ கூறி வானை அனுப்பத் தயாராகிறார். பேசிவிட்டுத் திரும்பியவர் எதிரே அணிவகுத்து நிற்கின்ற மாணவர்களைப் பார்க்கிறார். வரிசையில் மூன்றாவதாக நிற்கின்ற கபீரைக் காணுகின்றார்.



"கபீர், இது என்ன ஸ்கூலுக்குப் போற மாதிரி வந்திருக்க? இன்டைக்கு போட்டீன்டு தெரியாதா?"

அவன் மலங்க மலங்க விழிக்கிறான்.

"பாருங்க டீச்சர், உம்மா பெரிய்ய டீச்சர். இதுகூட தெரியாது. புள்ளய அனுப்பியிருக்கிற மாதிரியப் பாருங்க."

"ஏன் வாப்பா, சாப்பாட்ட மட்டும் எடுத்துட்டு வாங்கன்டு தானே சொன்னோம்? புத்தகங்கள் தேவையில்லையே..." டீச்சரின் மெல்லிய குரல்.

"சரி சரி. இப்ப பேசிட்டிருக்க வேணாம். வேன்ல அந்த பேக்க போட்டுடுங்க. நானா, இதக் கொண்டு போய் ஆறாம் வகுப்புல குடுத்துருங்க."

ஆசிரியரே பேக்கைத் தூக்கி வேனில் போடுகிறார். வேன் புறப்படுகின்றது.

ஆரம்ப கூட்டம் நடைபெறுகின்றது. பின்னர் மாணவர்கள் போட்டியிடங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். அனைத்து மாணவர்களும் தங்களது புகைப்படங்களைக் காட்டித் தங்களை அத்தாட்சிப்படுத்திக் கொள்கிறார்கள். அப்போதுதான் கபீருக்கு நினைவு வருகின்றது, அவனது புகைப்படம் பேக்கோடு திரும்பப் போய்விட்டது.

மெதுவாக வந்து டீச்சரிடம் முணுமுணுப்பாகச் சொல்கிறான். ஆசிரியரிடம் பேசப் பயம்.

டீச்சர் பதறிப் போகிறார். புகைப்படம் இல்லாவிட்டால் போட்டியில் கலந்து கொள்ள முடியாது! இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டு வந்தது கூட வேஸ்டாகிவிடும். ஐயோ! அந்த பேக்கை அவர் ஏன் திரும்ப அனுப்பினார்? தன்னுள் சிறிது நேரம் குமைகிறார். பிறகு ஆசிரியரிடம் போய்ச் சொல்லுகிறார்.

ஆசிரியரும் ஒருகணம் திகைத்துப் போகிறார். மறுகணம் சட்டென்று போனை எடுக்கிறார்.

"கொஞ்சம் இருங்க டீச்சர். கோல் பண்ணிப் பாப்பம்..." முயற்சிக்கிறார்.

அதற்குள் பேக் பாடசாலையைப் போய்ச் சேர்ந்து விடுகிறது. அதை உரிய வகுப்பில் தேடிக்கொடுக்கும் அளவிற்கெல்லாம் சாரதியிடம் பொறுமையில்லை. கண்ணில் பட்ட ஒரு மாணவனிடம் கொடுத்து விடுகிறார். அது யாருடையது, எங்கிருந்து வந்தது? யாருக்கும் புலப்படவில்லை.

ஏழாம் வகுப்புக்கு பாடம் எடுப்பதற்காக வந்த உம்முகுல்தூம் டீச்சர் தற்செயலாகப் பேக்கைப் பார்க்கிறார். 'இது கபீர்ட பேக் போல இருக்கே.' அவர் உள்ளம் குறுகுறுக்கிறது. ஏனோ கைகால்கள் நடுங்கத் தொடங்குகின்றன. 'ஐயோ, இது மகன்டதானா? போனவனுக்கு ஏதும்?'

யோசித்துக் கொண்டே அருகே வந்து பேக்கை வாங்கித் திறந்து பார்க்கிறார். 'இது மகனுடையதுதான். சந்தேகமில்லை.'

'ஏன் வந்தது? மகன் எங்க? போன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்க எல்லாம் எங்க? என்ன நடந்திருக்கும்? குழம்பித் தவித்து சிலையாக நிற்கிறார். பேக் ஏறக்குறைய கையிலிருந்து நழுவ...'

அவசரமாக ஒரு மாணவன் ஓடி வருகிறான். “கபீர்ட பேக்க அனுப்பட்டாம். அதுல போட்டோ இருக்காம்.”

எச்சிலைக் கூட்டி விழுங்கியபடி “யார் சொன்னது?” என்று மெதுவாகக் கேட்கிறார்.

“ப்ரின்ஸிபல் மேடம் சொன்னாங்க.”

ஓட்டமும் நடையுமாக அலுவலகத்திற்குச் செல்கிறார். மூச்சிரைக்கின்றது. நா உலர்கின்றது. “ஆண்டவனே, ஏன்ட புள்ளைக்கி அப்புடி ஏதும் நடந்திருக்கக் கூடாது. யா அல்லா.”

அலுவலகம் முன்னால் வந்து அசையாமல் நிற்கிறார். அவரைக் கண்ட அதிபர் புன்னகைக்கிறார்.

“கபீர்ட பேக்க தவறி அனுப்பிட்டாங்களாம். அதுல அவன்ட போட்டோ இருக்காம். தேடி அனுப்பட்டாம். மஹ்ரூப் கோல் பண்ணினாரு.”

அப்போதுதான் உயிர் வருகிறது உம்முகுல்தூம் டீச்சருக்கு. ஆசுவாசமாக அமர்ந்து ஒவ்வொரு புத்தகமாகத் திறந்து புகைப்படத்தைத் தேடத் தொடங்குகிறார். மனதுக்குள் கேள்வி சுழன்று கொண்டிருக்கிறது. “போட்டோ இதுக்குள்ள இருக்கே. ஏன் இத திருப்பி அனுப்பினாங்க?“

தேடிய புகைப்படத்தை அதிபரிடம் நீட்டுகிறார். அதை மீண்டும் எப்படி அனுப்பவதென்று யோசித்த அதிபர், பின்னர் முகமலர்ந்து “இமாமுல்லாவக் கூட்டிட்டு வாங்க” என்கிறார்.

இமாமுல்லா வந்து நிற்கிறான். பதினோராம் வகுப்பு மாணவன். இவ்வருடம் பரீட்சையை எதிர்நோக்கியிருப்பவன்.

“மகன்... ஒங்கட ஊர்ல உள்ள தமிழ் ஸ்கூல்ல இன்னக்கி போட்டி நடக்குது இல்லையா? அங்க போய் கபீர்ட இந்த போட்டோவ ஷெரீபா டீச்சர்கிட்ட குடுக்கணும்.”

அவன் ஏழு கிலோமீட்டர் கடந்து அவ்வூரில் படிப்பு சரியில்லையென்று இந்தப் பாடசாலைக்குப் பஸ்ஸில் வருபவன். சிறிது சிந்திக்கிறான்.

“நீங்க அப்படியே வீட்டுக்குப் போகலாம். திரும்ப வரத் தேவையில்ல...”

அவன் நிமிர்ந்து எதிரே மாட்டியிருந்த கடிகாரத்தைப் பார்க்கிறான். பாடசாலை விடுவதற்கு இன்னும் முழுசாக மூன்று மணித்தியாலங்கள். எனினும், ஒன்றும் செய்வதற்கில்லை. அதிபர் அல்லவா சொல்கிறார்? நேரத்தோடு போனா ஆத்துல கொஞ்ச நேரம் நீச்சலடிக்கலாம். அந்தியில கிளாஸ் இருக்கு. அதனால பரவாயில்ல. நீச்சலுக்கு நெறைய நேரம் ஒதுக்கலாம். சம்மதமெனத் தலையசைத்தான்.

இருபது நிமிடங்களில் கபீருக்கருகே நின்று தவித்துக்கொண்டிருந்த ஷெரீபா டீச்சரிடம் புகைப்படத்தைச் சேர்ப்பித்து விடுகிறான். டீச்சருக்கு



அப்போதுதான் மூச்சு வருகிறது.

கபீரைக் கூட்டிக்கொண்டு போட்டி நடக்கும் இடத்தில் சேர்ப்பித்து விடுகிறார். ஆனாலும் கபீர் சோபிக்கவில்லை. அவனுக்கு போட்டியில் இடம் கிடைக்கவில்லை.

அடுத்தநாள் இரண்டு ஆசிரியைகளும் சந்தித்துக் கொள்கிறார்கள்.

“கபீருக்கு ஒரு ப்ளேஸும் இல்லயாமே?” உம்முகுல்தூம் விசாரிக்கிறார்.

“ம்...”

“அவன்ட பேக்க ஏன் திருப்பி அனுப்பினீங்க?”

ஷெரீபா நிமிர்ந்து பார்க்கிறார். அவர் முகத்தில் வாட்டம். மௌனம்.

“அந்த பேக்க கண்டு நா பட்டபாடு எனக்குத்தான் தெரியும்...ஹும்.”

“அதுதான் டீச்சர். பெரிய மிஸ்டேக் நடந்துருச்சி... மன்னிச்சிருங்க... அந்த பேக்க எங்கயாவது ஒரு ஓரத்துலகூட வச்சிருக்கலாம். அதுட பாட்டுல அது இருந்திருக்கும். அவசரப்பட்டதால எல்லாம் பிழையாயிருச்சி...”

அந்த மென்மையான பதில் உம்முகுல்தூமை சாந்தம் கொள்ள வைக்கிறது.

“அதுசரி.. ஏன் அந்த பேக்கோட அவன போட்டிக்கு அனுப்பினீங்க?” ஷெரீபா கேட்கிறார்.

“அதுதான் பாருங்க டீச்சர். அவன் காலைல எனக்கு முந்தியே ரெடியாகி ஸ்கூலுக்கு வந்துட்டான். நானும் பேக்க கொண்டு போகாதன்டு சொல்ல மறந்துட்டேன். நா வாசலுக்கு வந்து பாத்தா அவனக் காணல்ல. இல்லாட்டி நா அதக் கவனிச்சி இருக்க மாட்டனா?”


## மல்லிகை விளம்பர விபரம்

| | | |
|---|---|---|
| பின் அட்டை (கலர்) | - | 10.000/- |
| பின் உள் அட்டை (கலர்) | - | 5.000/- |
| முன் உள் அட்டை (கலர்) | - | 5.000/- |
| பின் உள் அட்டை (கறுப்பு/வெள்ளை) | - | 4.000/- |
| முன் உள் அட்டை (கறுப்பு/வெள்ளை) | - | 4.000/- |
| உள் முழு பக்கம் கறுப்பு வெள்ளை | - | 1500/- |
| உள் அரைப் பக்கம் கறுப்பு வெள்ளை | - | 750/- |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கட்டுரை :**

# நவீன தமிழ் இலக்கியத்தில் பெண்களின் வகிபங்கு

## (ஈழத்துப் பெண் சிறுகதை எழுத்தாளர்களை முன்னிறுத்தி)

**- ச.முருகானந்தன்**

**ந**வீன இலக்கிய உருவாக்கத்தில் பெண்கள் பரவலாக ஈடுபடாமைக்கும் அவர்களது கல்வி வாய்ப்பின்மைக்கும் நேரடித் தொடர்பு இருந்தது. எனினும் சங்க காலம் தொட்டு, பக்தி இலக்கிய காலத்திலும் ஔவையார், காரைக்கால் அம்மையார், திலகவதியார் எனச் சில பெண்களிடம் படைப்பாக்கல் திறன் இருந்திருக்கிறது. பெண், பின்நிலைப்படுத்தப்பட்டு, வீட்டுக்குள் முடக்கப்பட்டு, அவளுக்கான கல்வி மறுக்கப்பட்டு, பெண்ணடிமைத்தனம் ஏற்பட்ட பின், அவளது இலக்கியப் பிரவேசம் தடைப்பட்டது எனலாம். மேலோர் வட்டப் பெண்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டளவு கல்வி வாய்ப்பு கிட்டிய அதே வேளை சமான்ய நிலையிலிருந்த பெண்களுக்கான இலக்கியப் பரிச்சயம் நாட்டுப் பாடல்களிலும், கூத்துக்களிலுமே கிட்டியது.

அச்சுப் பதிப்பின் வருகை பரந்து பட்டளவில் கல்வியைப் பரவலாக்கிய போதுகூட பெண்களில் வெகு சிலருக்காக அதன் பரிச்சயம் கிடைத்தது. மேலைத் தேசத்தவர்களின் வருகையோடு கிறிஸ்தவ மத போதகர்களின் வருகை நேரடியாகவும், மறைமுகமாகவும் கல்வி அபிவிருத்திக்கு வித்திட்டது. எமது மத, பண்பாட்டு அம்சங்கள் பெண்களை வீட்டுக்குள் முடக்கி வைத்தமையால் வெளிச் சென்று கல்வி பெறும் வாய்ப்பு தொடர்ந்தும் மறுக்கப்பட்டது. மத மாற்றத்தினால் சாதக பாதகமான பல அம்சங்கள் ஏற்பட்ட போதிலும், பெண் கல்வியைப் பொறுத்தவரை முன்னேற்றகரமான நகர்வுக்கான கதவுகள் திறக்கப்பட்டன. இதன் பின்னரே பெண்கள் நவீன இலக்கியப் பரிச்சயம் பெறவும், பின்னர் படைப்பாளிகளாக உருவாகவும் வாய்ப்புக் கிட்டியது. பெண்களின் குடும்பச் சுமை காரணமாகவும், ஆணாதிக்க அடக்குமுறை காரணமாகவும் இது ஆர்முடுகலின்றி மந்தகதியிலேயே இடம்பெற்றது எனலாம். வாசிப்புத் திறன் அதிகரித்த அளவுக்குப் படைப்பாக்கத் திறன் அதிகரிக்கவில்லை. ஒரு வாசகி என்ற நிலையிலிருந்து, நவீன கலை இலக்கிய வளர்ச்சிக்கு பெண்கள், தொலைக்காட்சி அறிமுகமான காலம் வரை பங்காற்றினார்கள். கூடவே இடையில் படைப்பாளிகளாகவும் உருவெடுத்தனர்.

நவீன இலக்கிய உருவாக்கத் துறையில், தமிழகத்தில் கல்கி, ஆனந்தவிகடன் முதலான ஜனரஞ்சகச் சஞ்சிகைகளில் பெண்கள் சிறுகதை, நாவல் முதலானவற்றை



எழுத ஆரம்பித்த பின்னர், ஈழத்திலும் சிறுகதையாக்க முயற்சிகளில் பெண்கள் காலடி எடுத்து வைத்தனர். குறமகள், பாலேஸ்வரி, பத்மா சோமகாந்தன், கோகுலம் சுப்பையா, தமிழன்னை உள்ளிட்ட பெண் படைப்பாளிகள் ஈழத்து இலக்கியப் படைப்பாளிகளாக வலம்வர ஆரம்பித்தனர்.

இந்தியாவில் **மணிக்கொடி** காலத்தில் சிறுகதைத்துறை ஏற்றம் கண்ட காலத்தை ஒட்டி இங்கு **மறுமலர்ச்சி** காலகட்டத்தில் பெண்களின் பங்களிப்புப் பெரிதாக இருக்கவில்லை. இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையிலான காலப்பகுதியில் படைப்புச் செயற்பாடுகளில் பெண்களின் பங்களிப்பு மிக அரிதாக இருந்த போதிலும் பெண் பாத்திரங்கள் கதைகளில் பிரதானமாக மையப்படுத்தப்பட்டன. பெண்களின் வாசிப்பு நிலை படிப்படியாக அதிகரித்து வந்த நிலையில் அவர்கள் மத்தியில் படைப்பார்வமும் துளிர்விட்டது. அவ் ஆர்வம் வளர்ந்து வந்த பரிணாமத்தினூடே பெண்களின் எழுதுகோல்களும் அசைய ஆரம்பித்தன. இந்த வீச்சத்தினால் அடுத்த பத்தாண்டுகளில் பெண்கள் எழுத்துலகில் இயங்க ஆரம்பித்த போது, அவர்களது பார்வையில் பெண்ணின் மன உணர்வுகள் வெளிப்படலாயின.

எமது பண்பாடுகள் 'மத' கலாச்சார அம்சங்களினால் பேணப்பட்டு வந்த நிலையில் பெண்களின் எழுத்துக்கள் பெண்ணின் பெருமை பற்றியும், அவள் வாழ வேண்டிய முறை பற்றியும், அன்பு - பாசம் - தியாகம் என்பவற்றுடன் தனது குடும்பத்திற்காக அயராது உழைப்பது பற்றியும் வெறும் ஆணாதிக்கப் பார்வையின் பிரதிபலிப்பாக வந்த இந்தப் படைப்புகள் பெண்ணை விழிப்புற வைத்திட முயலவில்லை. பெண் என்றால் இப்படிக் கட்டுப்பெட்டியாக, கட்டுப்பாடுகளுக்குள் அடங்கி இல்லப் பதுமைகளாகவே வாழவேண்டும் என்பதான பார்வையே பலரது படைப்புகளில் மிளிர்ந்தன. பாரதி, ஈ.வெ.ரா. பெரியார் ஏற்றி வைத்த ஒளியில் பெண் எழுத்தாளர்களால் மேலெழுந்துவர முடியாமல், ஆணாதிக்க மேலாதிக்கம் தடை விதித்திருந்தது. எனினும் புதுமைகளை விரும்பிய சில பெண்கள் எமது பண்டைய இலக்கியங்கள் சிலவற்றில் பெண்ணுக்கிருந்த சில சிறப்புகளையும், வலிமைகளையும் உணர்ந்தும், மேலைத்தேச எழுத்துக்களின் பரிச்சயத்தினாலும் பெண்ணைப் புதியதொரு கோணத்தில் வெளிப்படுத்த ஆரம்பித்தனர். குறமகள் மற்றும் பத்மா சோமகாந்தனின் படைப்புகளில் அதைத் தரிசிக்க முடிந்தாலும் கூட, பெண்ணியம் தொடர்பான முழுமையான சிந்தனைகள் காலதாமதமாகவே எழுத்துருப் பெற ஆரம்பித்தன. சமூகத்தையும் அதை இயக்கி நிற்கும் பல்வேறு கூறுகளையும் உள்ளடக்கிப் பிரதிபலிக்கும் நோக்குடனான இலக்கியங்களின் தோற்றமும், பரவலும் பெண் எழுத்தாளர்களை ஈர்த்தது. இவர்களது படைப்புகளில், தாம் வாழும் சமூகத்தில் நிகழ்ந்து வரும் பண்பாட்டு மாற்றங்கள் மற்றும் பிரச்சினைகள் என்பன கருப்பொருளாகின.

மேலை இலக்கியப் புலமையின் பெறுபேறுகளுடன், எமது பண்டைய இலக்கியப் பாரம்பரியங்களும் இணைந்து மாறுபட்ட நோக்குடனான சிறுகதைகள் வெளிவர ஆரம்பித்தன. இலக்கியத்தை ஒரு சமூகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்பாட்டுச் சாதனமாகக் கருதிச் செயற்பட்ட நிலை, பரிணாமம் பெற்று சமூக மாற்றங்கள் பற்றி அதிக அக்கறை செலுத்தியதோடு, தமது சுய அனுபவங்களையும் முன்னிறுத்தி எழுதினர். நவீனத்துவ வருகையோடு வலுப்பட்ட அழகியல் சிந்தனைகளுடன் மார்க்சிய சிந்தனைகளின் பரம்பல், இலக்கியப் போக்குகளிலும் செல்வாக்குச் செலுத்த ஆரம்பித்தது. மேலோர் வட்டத்தை, அவர்கள் வாழ்வு முறையை முன்னிலைப்படுத்திய எழுத்துக்கள் பின்தள்ளப்பட்டு, சாதாரண மனிதனின் கதைகள் புனையப்பட்டன. உழைக்கும் பாட்டாளி மக்களின் வாழ்வு சார்ந்த படைப்புகள், சமூக விழிப்புணர்வுக்கும், மேம்பாட்டுக்கும் வித்திட்டன. ஏழை எளியவர்களின் வாழ்வின் துன்ப துயரங்களும், அவர்களது சமூக விடுதலை பற்றியும் எழுதப்பட்டன. ஆரம்பத்தில் பெண்களின் பங்களிப்பு இப்புதிய மாற்றத்தினூடே வெளியான படைப்புகளில் குறைவாகவே காணப்பட்டாலும், அவர்களும் வர்க்கம், விடுதலை பற்றி எழுத ஆரம்பித்தனர். ஈழத்தில் இனவிடுதலை, தீண்டாமை ஒழிப்பு முதலானவை பேசுபொருளாகிய போது பெண்களின் எழுத்துக்களிலும் சமூக முன்னேற்றச் சிந்தனைகள் மிளிர ஆரம்பித்தன.

கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் பெண்ணியம் பற்றிய சிந்தனைகள் மேலெழுந்த போது பெண்கள் பலரும் பேனா ஏந்த ஆரம்பித்தனர். பேனா ஒரு கூரிய ஆயுதம் என்ற எண்ணமும் உருவானதால், பெண்கள் தமது பிரச்சினைகள் பற்றி எழுத ஆரம்பித்தனர். விழிப்புணர்வு, பெண் விடுதலை, பெண்ணின மேம்பாடு பற்றிய சிந்தனைகளுடனான பெண்ணியப் படைப்புகளை எழுத ஆரம்பித்தனர். கல்வியில் கண்ட எழுச்சி பெண்களின் வருவாயையும், இருப்பையும் உயர்த்திய போது பால் சமத்துவம் பற்றிய சிந்தனைகள் எழுத்துருவாகின. கண்டுகொள்ளப்படாதிருந்த பாரதியின் பெண் விடுதலைச் சிந்தனைகளும், பெரியாரின் கருத்துகளும் பட்டி தொட்டியெங்கும் ஒலித்தன. பெண்ணிய எழுத்துகளுடன் இணைந்து பெண் விடுதலை அமைப்புகளும் உருவாகின. ஔவை முதலானோரின் கவிதைகளில் ஓங்கி ஒலித்த பெண்ணிய அம்சங்கள் சிறுகதைகளிலும் கருப்பொருளாகின. மேலைத்தேச பெண்ணியம் சார்ந்த வாதங்கள் இங்குள்ள பெண்களையும் ஈர்த்தன. சிறுகதையின் உயிர்ப்பான அம்சமாக சமூகத்தின் அனைத்து இயங்கு நிலைகளையும் உள்ளடக்கிய சமூக யதார்த்த வாதம் ஏற்புடையதான போது அது பெண்ணியத்திற்கும் ஏற்புடையதாக இருந்தமையினால் பெண்களின் எழுத்துக்கள் துலங்க ஆரம்பித்தன. அத்துடன் சிறுகதைக்குரிய பின்புலமாக அமைந்த சமுதாய மாற்ற நிலை அதற்கேற்ப உருவான படைப்புத்தள மாறுதல்களை ஒட்டிய அனுபவ அம்சங்கள் மற்றும் அவற்றைப் பதிவு செய்வதற்கான மொழிநடை என்பன தொடர்பான தெளிவு பெண் எழுத்தாளர்கள் மத்தியில் மேலோங்கின. தமிழகத்தில் லக்ஷ்மி, சூடாமணி போன்ற பெண் எழுத்தாளர்களின் பிரபல்யம் எமது பெண் எழுத்தாளர்களுக்கு நம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஊட்டின. பெண் எழுத்துக்கள் தடை தாண்டிப் பீறீட்டெழுந்தன.

மரபின் செம்மையான அம்சங்களை மீட்டெடுக்கும் பணிகளிலேயும், பண்பாட்டுக் காவலராகவும் முதலில் கவனம் செலுத்திய



பெண் எழுத்தாளர்களில் சிலர், அவற்றை உடைத்துக் கொண்டு எழுத ஆரம்பித்தனர். பெண் பற்றிய மாயையை உடைப்பனவாகவும், சமுதாயத்தில் அதுவரை வாசகர்கள் பார்க்காதவற்றையும், படைப்பாளிகள் காட்ட முயலாதவற்றையும் தம் எழுத்தில் பதித்தனர். இதனால் ஆண் எழுத்தாளர்களில் ஒரு சிலரும் வாசகர்களில் ஒரு பகுதியினரும் இவ்வெழுத்துக்களை நிராகரித்து எதிர்ப்பலைகளை வீசினர். பெண்கள் பற்றிய சமுதாய விழுமியங்களை இவ் எழுத்துக்கள் கேள்விக்குள்ளாக்கியதுடன், பெண் விழிப்புணர்வு பெறவும், விடுதலை பற்றியும், பால் சமத்துவம் பற்றியும் சிந்திக்க வழிவகுத்தன. பெண்களின் மனதில் உறைந்திருந்த சிக்கலான அனுபவங்களையும், அபிலாசைகளையும் இவ் எழுத்துக்கள் தரிசனமாக்கின. குடும்ப உறவுகளின் அடிநாதமான உணர்வோட்டங்களுடன் பெண் மனம் சார்ந்த அவசங்கள், ஆசைகள் என்பவற்றையும் பெண்ணின் பார்வையூடாகத் தரிசிக்க வைத்தார்கள்.

தமக்கு முற்பட்ட மரபுகள், நம்பிக்கைகள், தாம் மாறிலியாகப் பேணி வந்த பண்பாட்டு அம்சங்கள் என்பவற்றிலிருந்து விலகி, அவற்றைக் கேள்விக்குள்ளாக்கி, பெண் பற்றிய புதிய நோக்கினை இவர்களது எழுத்து பிரதிபலித்தன. கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் சிறுகதை இலக்கியத்தில் பெண் பற்றிய சிந்தனைகள் விரிவடைந்தன. இதே காலப்பகுதியில் பெண்களைப் பெரும் நெருக்கடிக்குள்ளாக்கிய கொடுநாச யுத்தமும், பெண்களின் பங்களிப்பும் என எமது பெண்களின் வாழ்வுக் கோலத்தில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தின. உன்னால் முடியும் பெண்ணே! என உரத்தொலித்த இந்தக் காலகட்டத்தில் இடப்பெயர்வு, புலம்பெயர்வு, அகதி வாழ்க்கை எனப் பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்த பெண்கள், தமது அனுபவங்களைத் தமது படைப்புகளிலும் பதிவு செய்தனர். கவிதையை அடுத்துச் சிறுகதைகளில் பெண்ணின் அவலங்கள் பதிவாகின.

ஆரம்பத்தில் சமுதாயத்தில் பெண்கள் அனுபவித்து வந்த ஆணாதிக்கக் கொடுமைகள், சமத்துவமின்மை, சீதனப் பிரச்சினைகள் பற்றி எழுதி வந்தவர்கள், பெண்ணின விடுதலை பற்றிய சிந்தனைகளையும், வழிகளையும் தமது படைப்புகளில் தரிசனமாக்கினர். இதே காலகட்டத்தில் ஆண் எழுத்தாளர்கள் சிலரும் பெண்ணியம் சார்பான சிறுகதைகளை எழுதினர். போர் முனைப்புப் பெற்ற தேசத்தில், ஏனைய அம்சங்கள் யாவும் பின்தள்ளப்பட்டு, போரைக் குவிமையப்படுத்திய படைப்புக்களை எல்லா எழுத்தாளர்களும் எழுதிய போது பெண்களும் சமூக நோக்குடன் இதர அனைத்துப் பிரச்சினைகளையும் எழுத ஆரம்பித்தனர். மனக்காட்சியிலிருந்தும் அனுபவ அம்சங்களிலிருந்தும் போர்க்கால இலக்கியம் ஊற்றெடுக்க ஆரம்பித்தது.

வாழ்க்கைக்கும் இலக்கியத்துக்கும் உள்ள உறவு பற்றிய சிந்தனைத் தெளிவுடனும், ஒன்றிலிருந்து மற்றது எப்படிப் பிறக்கிறது என்பதான புரிதலுடனும் சிறுகதை இலக்கியம் வளர்ச்சியுற்ற நிலையில், சிறுகதையின் அழகியல் பரிமாணங்களையும் தெரிந்து கொண்டு ஈழத்துப் படைப்பாளிகளில் கணிசமானோர் படைப்பாக்கம் செய்தபோது பெண்களும் முத்திரை பதித்தனர். ஒரு படைப்பாளியால் ஒருபோதும் தீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைத் திணிக்க முடியாது என்ற தெளிவினாலோ என்னவோ, பெண்களின் போர்க்கால படைப்புகள் கலைநயத்துடனான பதிவுகளாகத் தரிசனமாகின. குறிப்பாகப் போரினால் பெண்கள் எதிர்கொள்கின்ற சிரமங்கள் பற்றியும், அவற்றிலிருந்து மீண்டெழ முடியாத அவலங்கள் பற்றியும் பேசிய அளவுக்கு அவர்கள் மீண்டெழுதல் பற்றி பேசவில்லை. அவ்வாறு கூற முற்பட்டிருப்பினும், அவை சரியாக இருக்கும் என்றும் கூற முடியாதுள்ளது. ஒரு கலைப் படைப்பானது தனது சொந்தக் கலையாக்க விதிகளாலேயே தீர்மானிக்கப்பட வேண்டியது என்பதை இன்றைய எழுத்தாளர்கள் புரிந்திருக்கிறார்கள். எந்த ஒரு பிரச்சினைக்குமான தீர்வு வெளியே இல்லை. அதனைத் தாண்டி அகநிலை குண வேறுபாடுகளைக் களைவதானதாக மனிதச் சிந்தனையில் மாற்றம் ஏற்பட வேண்டும். இன்றைய தேசிய இனப் பிரச்சினையாயினும் சரி, பெண்ணிலை வாதம் தொடர்பாயினும் சரி இது பொருந்தும். ஆம்! இன்றைய தேவை மனித மனங்களிலான மாற்றமே!

இவை பற்றிய புரிதலுடன் அனுபவம் மிக்க பெண் எழுத்தாளர்கள் எழுதியபோது, இளையவர்களும் தாம் அதற்குச் சளைத்தவர்கள் அல்ல என்பது போல் சிறப்பான சிறுகதைகளை வடித்தனர்.

ஈழத்தின் மூத்த பெண் படைப்பாளிகள் தொடக்கம் இன்றைய தலைமுறைப் பெண் படைப்பாளிகள் வரை நூற்றுக்குக் குறைவானோரே சிறுகதைத் துறையில் ஆழ வேரூன்றியுள்ளனர். இன்னும் சிலர் ஒரு சில படைப்புகளுடன் காணாமல் போயுள்ளனர். புதிய நூற்றாண்டில் நூற்றுக் கணக்கான பெண்கள் கவிதை, சிறுகதைத் துறையில் கால் பதித்து வருகின்றமை ஆரோக்கியமான விடயமாகும். வடகிழக்கு, தலைநகர் என்று மட்டுப்படுத்தப்பட்டிருந்த நிலை மாறி, நாடளாவிய ரீதியில் பெண் எழுத்தாளர்கள் பரவலாகியுள்ளனர். பெண் கல்வியின் முன்னேற்றத்தினால் இஸ்லாமிய மற்றும் மலையகப் பெண்கள் பலர் எழுத்துத்துறையில் காலடி எடுத்து வைத்துள்ளனர். புலம்பெயர் நாடுகளிலிருந்தும் பெண்கள் தொடர்ந்தும் எழுதி வருகின்றனர். சிறுகதைக்கான களம் விரிவடைந்துள்ளது. இவர்களில் பலரது படைப்புக்கள் நெஞ்சுக்கு நெருக்கமாக உள்ளன.

அறுபது ஆண்டுகளுக்கு முன்பாகவே இலங்கையில் பெண் எழுத்தாளர்கள் சிறுகதை எழுத ஆரம்பித்து விட்டனர். மனித வாழ்வின் பல்வேறு துறைகளிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்த காலகட்டத்தில் பெண்களின் எழுச்சி பற்றியும், சமுதாயத்தின் சிந்தனை மாற்றங்கள் மனித வாழ்வில் ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றியும் தமது எழுத்தில் பதிய வைப்பதில் குறமகள், தமிழன்னை, பத்மா சோமகாந்தன், பாலேஸ்வரி போன்ற பெண் எழுத்தாளர்கள் முகிழ்ந்தெழுந்தனர். பெண்ணின் பெருமை, கற்பு, ஒழுக்கம், தியாகம், அர்ப்பணிப்பு முதலான அம்சங்களை எழுதியதுடன் மட்டும் நின்று விடாமல், பெண்ணின் பிற்படுத்தப்பட்ட நிலை பற்றியும், சீதனக் கொடுமைகள் பற்றியும், பெண் கல்வியின் அவசியம் பற்றியும் கூட இவர்கள் எழுதினார்கள். ஈழத்தின் ஆரம்பகால பெண்ணெழுத்தாளர்கள் பெண்ணின் தாழ்வான நிலை பற்றி எழுதத் தவறவில்லை. பவானி ஆழ்வாப்பிள்ளை, சிதம்பரபத்தினி, அன்னலட்சுமி இராஜதுரை, நயீமா சித்தீக், மண்டூர்



அசோகா, ரூபராணி ஜோசெப், கோகுலம் சுப்பையா, ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், கமலா தம்பிராஜா, யோகா பாலச்சந்திரன், ரஹீமா, ஜூனைதா ஷெரீப் உள்ளிட்ட எண்ணக்கூடிய பெண்களே சிறுகதைகள் படைத்தனர்.

அடுத்த வந்த தலைமுறையினர் இவர்கள் காட்டிய வழியில் பெண்களின் பிரச்சினைகள் பற்றி இன்னமும் ஆழமாக எழுத ஆரம்பித்தனர். கோகிலா மகேந்திரன், தாமரைச்செல்வி, யோகேஸ்வரி சிவப்பிரகாசம், சந்திரா தியாகராஜா, மண்டைதீவு கலைச்செல்வி, சித்திரா, லஹீனா ஏ ஹக், குந்தவை, அக்னஸ் சவரிமுத்து, பாலரஞ்சனி, ரோகிணி முத்தையா, சுகந்தி வெள்ளைச்சாமி, கெக்கிராவை ஸஹானா, லோகேஸ்வரி கிருஷ்ணமூர்த்தி, சௌமினி, அருண் விஜயராணி, அனுராதா பாக்கியராஜா, மாலினி அரவிந்தன், சுகுணா, ஆனந்தி, மலைமகள், காந்தராஜ், தமிழ்ப்பிரியா, எஸ்.ராஜம், கங்கா மங்கை, அங்கவை, தமிழ்ப்புதல்வி, நோ.இராசம்மா, ஆமினா பேகம், புஸ்பவனம், பாலாதேவி, ஞானசக்தி கந்தையா, கணேசாள், பிரோஸா ஹூசைன் உள்ளிட்ட ஒரு நீண்ட பட்டியல் தொடர்கிறது. எனது கவனிப்புக்கு அப்பால் இன்னும் சில பெண் படைப்பாளிகள் உள்ளனர். இவர்களில் பலர் ஆண்களுக்கு நிகராக எழுதி சாகித்திய விருது உட்பட பல பரிசில்கள் பெற்றுள்ளனர். இப்பட்டியல் முழுமையாக்கப்பட வேண்டும்.

வீட்டுக்குள் முடங்கியிருந்த பெண்களுக்குக் கல்வி, பட்டம், பதவி தந்த எழுச்சிகளினால் வெளியுலகத் தொடர்பு ஏற்படலாயிற்று. இதுகால வரை வெறும் பதுமைகளாக நோக்கப்பட்ட பெண்கள் இனவிடுதலைப் போரில் பங்காளிகளாகி ஆயுதம் ஏந்தப் புறப்பட்ட பின்னர் பெண்கள் மத்தியில் விழிப்புடன் தற்துணிவும் ஏற்பட்டது. இதன் பிரதிபலிப்பு இலக்கிய உலகிலும் தரிசனமாகியது. கடந்த நூற்றாண்டின் இறுதிக்கட்டத்தில் சர்வதேச ரீதியில் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்த பெண்ணியமும், பெண்களின் எழுத்தார்வத்தை முடுக்கி விட்டதுடன் செழுமைப்படுத்தியது. புதிய மிலேனியத்திற்கு முந்தைய பத்தாண்டுகளிலும், அடுத்த பத்தாண்டுகளிலுமான இரண்டு தசாப்த காலத்துள் பெரும் எண்ணிக்கையிலான பெண்கள் சிறுகதைத் துறையில் பிரவேசித்தனர். ஏற்கெனவே எழுதிக்கொண்டிருந்தவர்களும் தீவிரமாக எழுத ஆரம்பித்தனர். போர்க்கால அனுபவங்களும், புலப்பெயர்வும் புதிய களங்களை தரிசிக்க வைத்தன. கணனியின் வரவும், பதிப்பித்தலில் ஏற்பட்ட இலகுத்தன்மையும், இணையத்தளங்களும் பல புத்தாக்கங்கள் வெளிவர உதவின.

இந்தத் தலைமுறையின் பெண் படைப்பாளிகளைப் பட்டியலிடுவது இலேசான காரியமல்ல. பலரது பெயர்கள் தவறவிடப்படலாம். இவர்களில் பலரும் பெண்ணியம் சார்ந்த படைப்புக்களை முனைப்புடன் எழுதியதுடன், போர்க்காலத்தில் பெண்கள் அனுபவித்த அவலங்கள் பற்றியும் நிறையவே எழுதினர். போரில் கணவனை இழந்த பெண்கள், குடும்பங்களின் தலைமைப் பொறுப்பை ஏற்று எழுச்சியுறும் வண்ணம் சிலரது படைப்புகள் அமைந்திருந்தன. பெண்கள் சார்ந்த பிரச்சினைகளுக்கு அப்பால் சமூகத்தின் சகல பிரச்சினைகளையும் தொட்டு எழுதும் வல்லமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலருக்கு இருந்தது. மூத்த படைப்பாளிகள் தொடர்ந்து தீர்க்கமான பார்வையுடன் எழுதி பதியவர்களுக்கு உத்வேகமளித்தனர். பெண் பற்றிய பிரக்ஞையுடன் பெண்களின் புற உலகை மட்டுமன்றி அகவுலகையும் புதிய எழுத்துக்கள் வெளிக்கொண்டு வந்தன. பெண்ணியச் சிந்தனைகள் சார்ந்த புனைவுகளுக்கு அப்பால் புதிய உலகில் பல பரிமாணங்களையும், பிரச்சினைகளையும் தொட்டு எழுதிய பெண் எழுத்தாளர் என்றில்லாமல் 'எழுத்தாளர்' என்ற பொது அந்தஸ்தைப் பெண் எழுத்தாளர்களும் எட்டியமை சிறப்பம்சமாகும்.

பின்னைய தலைமுறையில் வந்த சிறுகதை எழுத்தாளர்களில் தாட்சாயினி, பவானி சிவகுமாரன், சந்திரகாந்தா முருகானந்தன், கமலினி சிவநாதன், ஆத்மநாதன் றூத் சந்திரிக்கா, மாதுமை, ராணி சீதரன், சாரங்கா, பிரமிளா பிரதீபன், கார்த்தி காயினி, சாம்பவி உள்ளிட்ட சிலர் குறுகிய காலத்தில் கவன ஈர்ப்பைப் பெற்றனர். பவானி தேவதாஸ், கெக்கிராவை ஸூலைகா, ஸ்ரீதேவி, ரதி, பேராதனை ஷாபுரிசா, புசல்லாவை ஸ்மாலிகா, பதுளை சரஸ்வதி, புனிதகலா, சரோவர்ணன், கவிதா, குகநாயகி, அ.விஜயலட்சுமி, ஸ்ரீப்பிரியா, தியத்தலாவ ரிஸ்னா, கே.சுகுணா, புர்க்கான் பீபீ இப்திக்கார், ஜெயந்தி ஜெயசங்கர், சுமதி ரூபன், இரா சர்மிளா தேவி, சுலைமா, வாசுகி குணரத்தினம், விஜிதா மகேஸ்வரன், நளாயினி சுப்பையா, சீதா கணேஸ், யோகா யோகேந்திரன், குகநந்தினி, திருமதி.புண்ணியாமீன், ரிம்சா முகமத், இஸ்மத், ஜரீனா முஸ்தபா, சுஹைறதா ஏகசீம், நிஸ்வா ஸலாம், பாயிஸா கைஸ், தர்காநகர் றம்சியா என இன்னும் பலர் எழுத்துலகில் காலடி பதித்து சிறுகதைத் துறையில் தடம் பதித்துள்ளனர். என் கவனிப்புக்குள் வராத படைப்பாளிகள் மன்னிப்பார்களாக.

இன்று இலங்கையில் வெளிவரும் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் பெண் படைப்பாளிகளுக்கு களம் அமைத்துத் தருவதில் பின்னிற்பதில்லை. புரவலர் ஹாசீம் உமர் அவர்களின் புரவலர் புத்தகப் பூங்கா மூலம் பல பெண் எழுத்தாளர்களும் புத்தகங்களை வெளியிடும் வாய்ப்பு கிட்டியுள்ளது. ஆரம்பகால எழுத்தாளர்கள் அவசரப் படைப்புகளை வெளியிடுவதைத் தவிர்த்து தமது படைப்புகளைப் பிரசுரத்திற்கு முன்னர் பிறருடன் கலந்துரையாடி செவ்வி தாக்கம் செய்து வெளியிடுதல் நன்று. இது எல்லா எழுத்தாளர்களுக்கும் பொருந்தும். எழுத்துக்கு இணையத்தளங்களைப் பாவிப்பவர்களும் இதைக் கவனத்தில் எடுக்கவும்.

ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது இன்று பெண் படைப்பாளிகள் சிறுகதைத் துறையில் சாதித்துள்ளார்கள் என்றே கூறவேண்டும். சர்வதேச ரீதியிலும் இதை அவதானிக்க முடிகிறது. வளர்முக நாடுகளிலும் சில துணிச்சலான பெண்கள் காத்திரமான படைப்புகளை வெளியிட்டுள்ளனர். ஈழத்துப் பெண் சிறுகதைப் படைப்பாளிகளும் சளைத்தவர்களல்ல. உங்களாலும் முடியும் என்று உறுதியுடன் எழுதுங்கள். குடும்பச் சுமைகள் இருப்பினும் எழுத்திற்கு நேரம் ஒதுக்கிச் சிறு கதைகள், கவிதைகள், நாவல்கள் எழுதுங்கள். இன்றைய உலகம் உங்கள் கைகளில்.



# இறைவன் சிரிக்கிறார்

## சிரிப்பு - 6

**- யோகேஸ்வரி சிவப்பிரகாசம்**

பேரவலத்தில் அந்தரித்துக் கொண்டிருந்த அந்த இடத்தை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். நிகழ்வு பற்றி அறிந்தவர்கள் அருகிலும் அறியாதவர்கள் பூமியிலுமாய்த் தத்தமது மனதிற் பட்டதைப் பேசிக்கொண்டிருந்தார்கள். உடலுடன் இருந்த காலத்தில் பெற்றிராத அனுபவத்தைச் சிந்தனையோடு அனுபவித்துக் கொண்டிருந்தேன்.

ரமணனும் வெளிக்கிட்டிட்டான்.

பக்கத்திலிருந்து ஒரு முணுமுணுப்பு, ஏனையோரது பேச்சினின்றும் வித்தியாசப்பட்டதாக, என் காதுகளை உரசுகிறது. முணுமுணுப்பு எழுந்து வந்த இடத்தைத் திரும்பிப் பார்த்தேன்.

வெடிகுண்டாகிச் சற்று முன் வெடித்து இங்கு வந்து சேர்ந்திருப்பவனிடமிருந்து அந்த முணுமுணுப்பு புறப்பட்டிருந்தது. அவனது பார்வை மேய்ந்த பக்கம் என் கண்களும் ஓடின.

அங்கே ஒரு சிறுவன் சற்றுமுன் இவன் சென்றது போலவே உடலெங்கும் வெடி பொருட்களைச் சுமந்து கொண்டு கொத்து மரணங்களைக் குவிப்பதற்காய் நடந்து கொண்டிருந்தான்.

ஆனால் இவன் நடந்து வந்தபோது இவனுள் கொழுந்து விட்டுச் சுவாலித்த தீப்பிழம்பு அவனுள் முளைவிடாததை என்னால் அவதானிக்க முடிகிறது. அவனது மன உணர்வுகளை, எண்ணங்களை அவனைப் பார்க்கும் போதே என்னால் அறிந்துணர முடிகிறது.

அவனுள் நெஞ்சு முட்டித் திணறும் படபடப்பு. வளைந்தெரியும் நெருப்பின் நடுவே தூக்கி வீசப்பட்டுவிட்டு ஜந்துவாக ஏதோவொன்று உள்ளே துடித்துத் துடித்துச் சுருண்டு நெளிகிறது.

ஊட்டப்பட்டவை செரிமானமடையாது, உடலின் நரம்புகளைச் சென்றடைந்து செறியாது போய் முறுக்கேற்றத் தவறிவிட, மனதில் ஏற்றப்பட்ட உத்வேக உறைநிலை கொதி நீரில் விழுந்த பனிக்கட்டியாக, தளர்வு பரவி விரவ...

இவனைப் போல் மரணங்களைக் குவித்து விடுவது அவனுக்கு அசாத்தியம் என்பதை என்னால் அனுமானிக்க முடிகிறது.

அந்தக் கணத்தில் அவனை அணுகக் கூடாதனவான பழைய பாச நினைவுகள் அவன் மனதில் தெற்றிக் கொள்வதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

மகனின் எதிர்காலம் பற்றிய ஆயிர மாயிரம் கற்பனைகளோடு அவனைப் பாடசாலைக்கு அனுப்பிய அன்னையின் முகம் ரமணனின் மனதிற்குள் வந்து வந்து செல்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனின் கல்வி தொடர வேண்டுமென்ற ஆவல் ஒருபுறம், படையணி சேர்ப் போரிடம் சிக்கி விடுவானோ என்ற ஏக்கம் மறுபுறம், குண்டுகள், ஷெல்கள், துப்பாக்கிச் சன்னங்கள் என்பவை அவனது உயிரைப் பறித்து விடுமோவென்ற பயம் வேறொரு பக்கம் அவனை அலைத்து நிற்க, பக்குவம் சொல்லி அனுப்பி வைத்த அன்னை முகம்...

பாடசாலை செல்லும் வழியில் தங்கள் கொள்கை விளக்கங்களைக் கொட்டி, அவர்கள் அவனை அள்ளிச் சென்ற பின் அந்த அருமைத் தாயை அவன் சந்திக்க முடியவில்லை.

ஒருமுறை அம்மாவைப் பார்த்து அவள் கையால் போடும் உணவைச் சுவைத்தால் எப்படியிருக்கும்?

இனி அந்தப் பேறு அவனுக்கில்லை.

அன்னையைச் சந்திக்க வேண்டுமென்ற அவனது இறுதி வேண்டுகோளும் நிராகரிக்கப்பட்டு விட்டது. அவனுடைய உணர்வுகளை அவர்கள் எடைபோட்டு விட்டார்கள் போலும். சந்தர்ப்பம் மறுக்கப்பட்டு அந்த ஆசையோடு இறுதிக் கணங்களை எதிர்நோக்கி அவன் பயணிக்க வைக்கப் பட்டிருக்கிறான்.

தம் வாழ்வில் நிகழ்ந்த கோரச் சம்பவங்களை, தீவிரமான பகை மனதில் கொதிக்க கொதிக்க அவனுடனிருந்த தோழர்கள் எடுத்துக் கூறியும் அவனால் அவர்களைப் போல் மாற முடியவில்லை. ஆனால் அவனும் அவர்களின் வழியிலே சென்றேயாக வேண்டுமென்று நிர்ப்பந்தப் பட்டிருக்கிறான். அவனுடைய இலக்கு அதோ அந்தக் கூட்டத்தில் உள்ளவர்கள். இன்னும் சிறிது தூரந்தானிருக்கிறது.

முதலில் ஒரு கட்டிடத்தைத்தான் குறிப்பிட்டார்கள். அதனுள் நுழைவது இலகுவல்ல. என்ன நினைத்தார்களோ? பின்னர் இந்தச் சந்தையைத் தேர்ந்தெடுத்தார்கள். அந்த இலக்கை நோக்கித்தான் இப்பொழுது அவன் பயணிக்கிறான்.

அந்த இடத்தை அண்மிக்க அண்மிக்க அங்கே நின்ற மனிதர்கள் கண்களில் படப்பட ஈரப்பதன் இதயத்துள் புகுந்து திவலைகளாகத் திரண்டது. அவனுள் சொல்லிச் சொல்லி ஊட்டியவற்றை நினைவிற்குக் கொண்டுவந்து அக்கினிக் கொழுந்தை வளர்க்க முயன்றான்.

ஈரமும் வெம்மையும்...

வெம்மையும் ஈரமும்...

அவனெடுத்த சத்தியப்பிரமாணம் கண்முன் விரிகிறது.

ஆம். அந்தக் கணம் முதல் அதற்குக் கட்டுப்பட்டவன்.

அவன் விரைந்து செயற்பட வேண்டும். இலக்கை நெருங்கி விட்டான்.

ஒரு பலவீனம் உடலெங்கும் வியாபிக்கும் உணர்வு...

படார்... ரமணன் என்னடா இப்பிடிச் செய்து போட்டாய்? முதலாவது வெடி குண்டின் வினா.

நான் திரும்புகிறேன்.

ஓ! ரமணனும் இங்கே வந்துவிட்டான். அவனுடன் இருவர்தான் வந்திருக்கிறார்கள். கொத்துக் கொலைகள் நிகழ்த்த அவன் தவறிவிட்டதற்காகத்தான் இப்படி யொரு நயவுரை.

அத்தனையையும் அவதானித்துக் கொண்டிருந்த இறைவன் சிரித்தார்.






**விமர்சனம் :**

# அன்புடீனின் நெருப்பு வாசல்

**- திக்குவல்லை கமால்**

இது ஆசுகவி அன்புடீனின் சிறுகதைத் தொகுதி. ஒரு புனைகதையாளனின் கவிதைகளை விட, ஒரு கவிஞனின் சிறுகதைகளென்றால், வாசகர் மட்டத்தில் ஒரு விசேட எதிர்பார்ப்புண்டு. அப்படியொரு எதிர்பார்ப்புடன் தான் நானும் புத்தகத்தைப் புரட்டினேன்.

இதில் 'விலகல்' என்ற தலைப்பிட்டு சண்முகம் சிவலிங்கம் ஒரு நீண்ட அணிந்துரையை வழங்கியுள்ளார். அன்புடீனின் பதினொரு சிறுகதைகளையும் இரண்டு வகைப்பாட்டுக்குள் கொண்டு வருகிறார். வழமையான கதைகள், அதிலிருந்து வித்தியாசப் பட்டு நிற்கும் கதைகள் என்று அவரது பகுப்புச் சரியானதே.

'மாமூலான கதைகளிலிருந்து சற்று வித்தியாசமான முறையில் சிறுகதையைச் சுதந்திரமாக எழுத வேண்டுமென்ற தேவையை உணர்ந்திருக்கிறார்' என்று வேறு ச.சிவலிங்கம் குறிப்பிடுகிறார்.

ஒரு படைப்பாளியிடத்தே கருத்து மாற்றங்களோ அமைப்பு மாற்றங்களோ வரக்கூடாதென்றில்லை. அந்த மாற்றம் எதற்காக என்பதில் தான் பிரச்சினையிருக்கின்றது.

சரஸ்வதி, தாமரை போன்ற சிற்றிதழ்களில், அடிநிலை மக்களின் யதார்த்தத்தை வர்க்கப் பார்வையில் எழுதிய ஜெயகாந்தனும் சுந்தர ராமசாமியும் நினைவுக்கு வருகிறார்கள். சுந்தர ராமசாமி கலை முதன்மையாளராக மாறிச் சென்றார். ஜெயகாந்தன் ஜனரஞ்சக பெரும் சஞ்சிகைகளின் படைப்பாளியானார். பிற்பாடு ஆன்மீக யதார்த்தவாதம் என்றொரு நிலைக்கும் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே ஒரு காலப் பிரிகோட்டைக் காணமுடியுமென்பதே முக்கியமானது. மீண்டும் பழைய நிலைக்குச் செல்ல வில்லை. தடுமாறவில்லை; தமது நிலைப் பாட்டில் தெளிவாகவிருந்தனர்.

இந்தக் கண்ணோட்டத்துடன் அன்பு டீனின் கதைகளைப் பார்த்தபோது எந்தப் பிரிகோட்டையும் காணமுடியவில்லை. வெளிவந்த கால வரிசைப்படி பார்த்தால் எல்லாம் முன் பின்னாகக் கலந்தே காணப் படுகின்றன. எனவே சில கதைகள் வித்தி யாசமாக அமைந்தபோதும் அன்புடீனின் கருத்துநிலை மாற்றத்திற்குள்ளாகி படைப் பாக்கம் செய்யவில்லை என்பது தெளிவா கிறது. வழமைபோல் தன்போக்கில் இயல் பாக எழுதியுள்ளார் என்பதே உண்மை.

படைப்பாளிக்கு எந்தக் குறுக்கீடும் இருக்கக் கூடாது; அவன் சுதந்திரமாக எழுத வேண்டும் என்றெல்லாம் இன்று சொல்லப்படுவதுண்டு. இந்தச் சொல்லாடல் களின் பின்னால் நவீன மேற்கத்தேய கோட்பாடுகள் செல்வாக்குச் செலுத்துவதை அவதானிக்கலாம். வாசகர் ரசனை மாறி விட்டது. யதார்த்தம் செத்து விட்டது. மாயாஜால யதார்த்தமே இனிப் பொருந்தும் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. மொத்தத் தில் 'கலை கலைக்காக' என்ற கருத்தி யலின் மீளுருவாக்கமாகவே இது காணப் படுகிறது.

சிறுகதை ஆக்கத்துறையில் புதுமை வரக்கூடாதென்பது நோக்கமல்ல. அந்த புதுமை எந்தளவுக்கு எமக்குப் பொருந்து மென்பதே முக்கியமானது.

எமது வாழ்வு, எமது வளம், மொழி,... இலக்கிய, கலாசாரப் பின்புலம், பன்முகத் தன்மை, வாசிப்புச் சூழல், கல்வி நிலை இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டே, மக்கள் மேம்பாடு கருதி புதிய வரவுகள் உள்வாங்கப்பட வேண்டும்.

அன்புடீன் 1975 - 2004 வரையில் எழுதிய பதினொரு சிறுகதைகளை இத் தொகுப்பில் சேர்த்துள்ளார். அனைத்துக் கதைகளிலும் யதார்த்தமும் மண்வாசனை யும் முற்போக்குக் கொண்ட பொதுத் தன்மையே காணப்படுகின்றது. அவரது பிரதேச வாழ்வியல் கலாசாரத்தை மிக நேர்த்தியாக வெளிக்கொணர்ந்துள்ளார்.

மாதாந்தச் சம்பளம் பெறும் அரச ஊழி யனின் வாழ்க்கைப் போராட்டம், பெண் உழைப்பில் வாழும் ஏழைக் குடும்பம், கடல் தொழிலாளர்கள் இணைந்து தோணி வாங்கல், மிருக வெறிக்குப் பலியாகாத அபலைப் பெண்ணின் பரிதாப நிலை, மாற்றுமத மாப்பிள்ளை, சீதனப் பிரச்சினை யால் நிகழும் தற்கொலை, சந்தர்ப்ப வசத்தால் விபச்சாரியாகும் பெண்... இப்படி யாக நாளாந்த சமூக வாழ்வில் பரவலாக நடந்துகொண்டிருக்கும் விடயங்களைப் பின்னியே அன்புடீன் கதை படைத் துள்ளார்.

எல்லாக் கதைகளிலுமே வர்க்க ரீதி யான கண்ணோட்டம் இழையோடுகிறது. மேலாதிக்கச் சக்திகளின் சுயநலம் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்படுகிறது. தொழிலாளர் வர்க்கத்தின் ஐக்கியமும் போர்க்குணமும் வெளிப்படுகிறது.

'உள்ளத்தில் உண்மையொளி உண் டாயின்...' வித்தியாசப்பட்டு நிற்கும் கதை. வானொலி நிகழ்ச்சிக்கான அழைப்பு, ரயில் பயணம், வாய்க்கும் கணவனைப்



பொறுத்தே எழுத்தின் எதிர்காலம் என்று கூறும் பெண் படைப்பாளி, ஒரு ரசிகையின் புத்தகம், மனைவியுடன் சம்பளச் சண்டை இப்படிப் பல்வேறு சம்பவங்களே தொகுக்கப் பட்டுள்ளது. தெளிவான கரு காணப்பட வில்லை. கரு காணப்படாவிட்டாலும் கூட, குறித்த கதை ஒரு 'செய்தி'யை வெளிப் படுத்த வேண்டியது முக்கியமானதே. அந்த வகையில் இக்கதையில் காணப்படும் சம்ப வங்கள் ஒவ்வொன்றும் எழுப்பும் செய்தி களின் தொகுப்பே கதையின் தலைப்பாகி விடுகின்றது.

'சலனம், சபலம், சபதம்' இன்னொரு குறிப்பிடத்தக்க கதை. சப்பாத்து வாங்கித் தராமல் பாடசாலைக்குப் போகமாட்டேன் என்ற சபதத்தை தனது தந்தை மூலம் நிறைவேற்றிக் கொள்ளவே இடம்பெறும் கதை. சபதத்தில் ஆரம்பித்து நிறைவேற்றப் படுவதில் முற்றுப் பெறுகிறது. ஆனால் இதற்கு அப்பால் இன்னும் சிலர் வந்து போவது மட்டுமன்றி அவர்கள் மனதில் இடம்பிடித்துவிடும் கதாபாத்திரங்களாகவும் அமைந்து விடுவதே இக்கதையின் சிறப்பு. செல்லாச்சிக் கிழவி, டாக்டர் சிவஞான சுந்தரம், அழகிய டீச்சர், மனைவியாகிவிட்ட வாசகி... இவர்களை எப்படி மறக்க முடியும்?

தலைப்புக் கதையான 'நெருப்பு' சமூக அவலங்களை உரத்துப் பேசுகின்ற ஒரு கதை.

இஸ்மாயில் வாத்தியாருக்கு மூன்று குமர்கள். முப்பது வயது தாண்டிய மூத்த வளுக்கு மாப்பிள்ளை தேடிக் களைத்துப் போகிறார். இறுதியில் அவரைப் பற்றி நன்கறிந்த மாற்றுமத மாணவன் ஒருவன் சீதனமின்றி முடிக்க முன்வருகிறான். இதைத் தனது மனைவியிடம் சொன்ன போது அவள் சாதி... சனம்... உற்றார்... உறவினர் என்று பேச ஆரம்பிக்கிறாள்.

ஆசிரியரின் சீற்றம் இவ்வாறு அமை கிறது.

''என்னடி சாதி சமயம்? ஆருடி உற்றார் உறவினர்? முப்பது வருஷம் பக்கு வப்பட்ட பருவக் குமரை வீட்டுக்குள்ளே பூட்டி வச்சி காவல் இருக்கிறம். நீ பெரிசா மதிக்கிற சாதி சமயத்திலே இருந்து ஒருவ னாவது சீதனம் இல்லாமல் உன்ட மகளை கட்டிக்கிறதுக்கு முன்வரல்லே... சீதனம் குடுக்க நமக்கிட்டே வழி இல்லே என்கிறே காரணத்துக்காகவே உன்ட சொந்தச் சகோ தரனே அவன்ட மகனை நம்மட மகளுக்கு தர விரும்பல்லே... இப்படியான சாதி சமயத்துக்கும் உற்றார் உறவினருக்குமா நீ பயப்படுகிறாய்...?'' இந்தப் போலிகளுக் கும் வேலிகளுக்கும் பயப்பட நான் தயாராக இல்லே.''

இந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்பாராத வித மாக மகள் குறுக்கிட்டுத் தனது சம்மதத்தை தெரிவித்தமை விறுவிறுப்பான நாடகக் காட்சி போல் அமைந்துள்ளது.

இருந்தும் அவளது நீண்ட பிரசங்கம் அவளது தகுதிக்கு அப்பாற்பட்டதாகத் தெரிகிறது. பாத்திரத்திற்கூடாக கதாசிரியர் அத்துமீறிப் பிரவேசித்து விட்டாரா? என்று கேட்கத் தோன்றுகிறது.

சமூகம் பற்றிய ஆக்ரோஷமான கருத்துக்களை முன்வைக்கும் கிராமத்தின் முதல் வாத்தியார், பெண் பிள்ளைகள் பக்கு வப்பட்டதும் பாடசாலைக்கு அனுப்பாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவதும், பாடசாலைக்கு அனுப்பாத குமர்ப்பிள்ளையை நெசவுக்கு அனுப்பு வதும், ஜோசியத்தில் நம்பிக்கை வைப்பதும் ஏனென்று தான் தெரியவில்லை.

எவ்வாறாயினும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது அன்புடீன் ஒரு சிறப்பான பணியை ஆற்றியுள்ளமை கண்கூடு. அண்மைக் காலத்தில் கிழக்கிலங்கையி லிருந்து வெளிவந்த ஒரு சிறப்பான சிறு கதைத் தொகுதியாக 'நெருப்பு வாசல்', அமைகிறது. வித்தை காட்டி இடம்பிடிக்க முயலாமல், தனது சமூகக் கடப்பாட்டை இலக்கியமாக்கி இலங்கை சிறுகதை எழுத் தாளர் வரிசையில் தனக்கென்றொரு நாற் காலியை போட்டுக் கொண்டுள்ளார்.

எதிர்பார்த்ததுபோலவே ஒரு கவிஞன் எழுதிய கதைகள் என்றவகையில், அதற் கான அடையாளங்கள் தொகுப்பு முழு வதும் விரவிக் காணப்படுகின்றது.

ஏற்கனவே முகங்கள், ஐந்து தூண் கள், சாமரையில் மொழி கலந்து, மரண மல்ல ஜனனம் ஆகிய கவிதைத் தொகுதி களை வெளியிட்டுள்ளார்.

பெருவெளி பதிப்பான 'நெருப்பு வாசல்' இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி. அன்புடீனின் சிறுகதை வாசல் இனி என்றுமே மூடப்படக்கூடாதென்பதே எமது எதிர்பார்ப்பு. அன்பான வேண்டுகோளும் அதுவேதான்.

## கொடகே சாஹித்திய விருது


வருடந்தோறும் கொடகே புத்தக வெளியீட்டு நிறுவத்தினரினால் வழங்கப்படும் கொடகே சாஹித்திய விருது விழா வருகின்ற செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் தமிழில் வெளிவந்த நாவல், சிறுகதை, கவிதை நூல்களுக் கான கொடகே சாஹித்திய விருது வழங்கப்படவுள்ளது. கடந்த காலங்களில் சிங்கள, தமிழ் நாவல்களுக்குப் பரிசுத் தொகையாக வழங்கப்பட்டு வரும் தொகை இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் சிங்கள, தமிழ் நாவல் களுக்கு ரூபா ஒரு லட்சம் வழங்கப்படும்.

மேலும் இன ஐக்கியத்தை ஊக்குவிக்கும் முகமாக இன ஐக்கிய மொழி பெயர்ப்பு நூலுக்கான புதிய விருது ஒன்றையும் அறிமுகப்படுத்தவுள்ளார்கள். அதன்படி சிங்களத்தில் இருந்து தமிழிலும், தமிழில் இருந்து சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்ட ஒரு சிறந்த நூலுக்கும் விருது வழங்கப்படவுள்ளது.



## கிடைக்கப் பெற்றவைகள் :





திருமதி. அன்னலட்சுமி இராஜதுரையின் **'நினைவுப் பெருவெளி'** ஒரு பெண் பத்திரிகையாளரின் மனப் பதிவுகள். வீரகேசரி வெளியீடு





திரு. முருகேசு ரவீந்திரனின் **'வாழ்க்கைப் பயணம்'** சிறுகதைத் தொகுதி நண்பர்கள் வெளியீடு





மூவினப் படைப்பாளிகளின் கௌரவச் சிறப்பு மலர் **'தீபம்'** சிங்களத் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்




திரு. அன்புடீனின் **'நெருப்பு வாசல்'** சிறுகதைத் தொகுதி




தியத்தலாவ எச்.எப். றிஸ்னாவின் **'இன்னும் உன் குரல் கேட்கிறது'** கவிதைத் தொகுதி புரவலர் புத்தகப் பூங்கா




திரு. அநாதரட்சகனின் **'நிமிர்வு'** சிறுகதைத் தொகுதி கொடகே வெளியீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. பன். பாலாவின்

**'நாளைய தீர்ப்புகள்'**

சிறுகதைத் தொகுதி

புரவலர் புத்தகப் பூங்கா




சுமதி குகதாசனின்

**'தளிர்களின் சுமைகள்'**

கவிதைத் தொகுதி

இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம்




திரு. உ.நிஷாரின்

**'நல்ல தங்காள்'**

சிறுவர் பாடல்கள்

பானு பதிப்பகம்




பாலமுனை பாறூக்கின்

**'தோட்டுப்பாய் மூத்தம்மா'**

குறுங்காவியம்

பர்ஹாத் வெளியீட்டகம்




திருமதி. வசந்தி தயாபரனின்

**'காலமாம் வனம்'**

சிறுகதைத் தொகுதி




திரு. ஞானசேகரன்

**'ஞானம்'**

கலை இலக்கியச் சஞ்சிகை

ஜூலை 2012



**மலைநாட்டு எழுத்தாளர் மன்றம், கனடா தாய்வீடு சஞ்சிகை இணைந்து நடாத்தும் *அமரர் என்.எஸ்.எம்.ராமையா* நினைவு**

**சிறுகதை / கவிதைப் போட்டி**

**புதிய செல்நெறி நோக்கி...**

மலையாக எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் சிறுகதை மற்றும் கவிதைப் போட்டிகளை வருடாந்தம் நடாத்த மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் தீர்மானித்துள்ளது. இப்போட்டி வருடாந்த நிகழ்வாகவும், அமரத்துவம் பெற்ற மலையக எழுத்தாளர்களை நினைவு கூர்ந்து கௌரவிப்பதாகவும் அமையும்.

**போட்டிக்கான நிபந்தனைகள்**

1. இலங்கையில் எப்பக்கத்திலும் வசிக்கும் மலையக எழுத்தாளர்கள் போட்டியில் பங்கு பற்றலாம்.
2. ஒருவன் ஒன்றுக்கு மேற்பட்ட ஆக்கங்களை அனுப்பலாம். ஆனால் தெரிவு செய்யப்படும் ஏதேனும் ஓர் ஆக்கத்துக்கு மட்டுமே பரிசு வழங்கப்படும்.
3. படைப்புக்கள் மலையக வாழ்வியலை மையமாகக் கொண்டிருக்க வேண்டும்.
4. கவிதைப் போட்டி மரபுக் கவிதை, புதுக்கவிதை என எந்த வடிவிலும் அமையலாம். கவிதைகள் 40 முதல் 60 வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.
5. ஆக்கங்கள் தாளின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதப்படுதல் வேண்டும்.
6. 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டும் பங்குபற்றலாம்.

**சிறுகதை**

முதல் பரிசு : 10,000/-, இரண்டாம் பரிசு : 7,500/-, மூன்றாம் பரிசு : 5,000/-.

**கவிதை**

முதல் பரிசு : 5,000/-, இரண்டாம் பரிசு : 4,500/-, மூன்றாம் பரிசு : 3,000/-.

மேலும் 10 கவிதைகளுக்கு தலா 1,000 ரூபா வீதம் ஆறுதல் பரிசு.

**முடிவுத் திகதி : 2012 ஆகஸ்ட் 31**

**ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி :**

செயலாளர், மலைநாட்டு எழுத்தாளர் மன்றம்,152, 1/5, ஹல்ஸ்டோப் வீதி, கொழும்பு - 12.

மின் அஞ்சல் : memmandram@yahoo.com

மேலதிக விபரங்களுக்கு : இணைச்செயலாளர்கள் இரா சடகோபன் - 0777 679231, ஜி.சேனாதிராஜா - 0777 708948



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோருக்கும் எல்லார் முகங்களும் பிடிப்பதில்லை!

**- ஏ.எஸ்.எம்.நவாஸ்**

இறைவனால் படைக்கப்பட்ட இனங்களிலேயே மனித இனம் மேன்மையானது என்று சொல்லப்படுகிறது. மனிதனின் குண இயல்புகள், முகத் தோற்றங்கள் வேறு உயிரினங்களுக்கு இல்லை. உதாரணமாக பறவையினத்தையோ, மிருக இனத்தையோ எடுத்துக் கொண்டால், அவற்றின் முகங்கள் ஒரே மாதிரியாகவே இருப்பது இயல்பு. எனினும் கோடானு கோடி மனித இனங்களிலே குறிப்பாக மனித முகங்களில் ஏறத்தாழ நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன. மரபு ரீதியாகத் தந்தையைப் போல மகனோ, தாயைப் போல் மகளோ இருக்க முடியும். இருந்தாலும் இந்த முகங்களுக்கு வித்தியாசம் இருப்பதுண்டு. அபூர்வமாகச் சகோதரர்களில் இரட்டைப் பிறவிகள் இருப்பதும், ஒரே மாதிரியான முகத்தோற்றங்கள் அமைவதும் மரபணு சார்ந்த விடயங்களாகும். இது தவிர்த்துத் தூரத்து உறவுகள், சொந்தமற்ற வர்கள் என்று முழு மனித முகங்களையும் நோக்கினால் பல வித்தியாங்களை உணரலாம்.

மனித முகங்களுக்குப் பல அடையாளங்கள் உண்டு. அழைப்பதற்கு அம்முகங் களுக்கு ஒவ்வொரு பெயர்களும் உண்டு. மனிதனால் சிரிக்கவும் முடியும். அழவும் முடியும். கோபம், சாந்தம், வெறுப்பு என நவரசங்களையும் மனித முகங்களால் மட்டுமே வெளிப்படுத்த முடியும். சில முகங்கள் சிலருக்குப் பிடிப்பதில்லை. சிலருக்குத் தம் சொந்த முகங்களையே பிடிப்பதில்லை. கண்ணாடியில் நின்றபடி தன் முகத்தைப் பார்க்கும்போது ச்சீ... என்ன முகம் இது? கொஞ்சம் அழகாய் இருந்திருக்கலாமோ? என்று எண்ணத் தோன்றும். சில முகங்கள் தம் முக அழகை ரசித்தவர்களாக தன்னைவிட அழகானவர் இல்லை என்ற அககர்வம் அவர்களுக்குத் தலை தூக்கு வதும் உண்டு. மொத்தத்தில் எல்லோருக்கும் எல்லா முகங்களும் பிடிப்பதில்லை.



சில முகங்கள் சில முகங்களைக் கண்டால் ஓடி ஒளிந்து கொள்ளும். அவை கடன் வாங்கிய முகங்கள். கடனற்ற முகங்கள் எந்த முகங்களுக்கும் அஞ் சாது நிமிர்ந்து செல்லும். மனமகிழ்ச்சி மிகைத்து களிப்பில் ஆழ்கின்ற மனம் அதை நேரடியாக முகத்தில் தெரிவிக்கும் போது அங்கே சிரிப்போசை எழுகின்றது. சில முகங்கள் சிரித்திருந்தால் சில முகங் களுக்குப் பிடிப்பதில்லை. ஒரு முகம் தாழும்போது மறுமுகம் சிரிக்கிறது. ஒரு முகம் ஏறும்போது மறுமுகம் வெறுக் கின்றது. நேரிடையாகச் சந்தித்துக்கொள் கின்ற நட்பு முகங்கள் சந்தோஷ மிகுதி யால் கைகளையும் குலுக்கிக் கொள்கின்றது. மனம் இருளடையும் போது முகம் அதை வெட்ட வெளிச்ச மாகக் கட்டுகிறது. 'Face is index of the mind' என ஆங்கிலத்தில் இதைச் சொல் வார்கள். தமிழிலும் 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பார்கள்.

இவ்வாறு சூழ்நிலைக்கேற்பப் பல வாறு முகங்கள் தன் உணர்வுகளைக் காட்டுகிறது. வீரமிக்க முகம் கோழை முகத்தை சட்டை செய்வதில்லை. குற்ற வாளிகளின் முகங்கள் மிகக் கோரமாக இருக்கும். சட்டத்தின் முன்னால் பயந்து விழிக்கும் இந்த முகங்களுக்கு நீதி கிட்டும்வரை சந்தோஷம் கிடைப்ப தில்லை. பெண்கள் - ஆண்கள் என்ற முகங்களுக்கிடையில் பல வித்தியாசங் கள் இருப்பதுண்டு. பெண்களுக்கு மீசை முளைப்பதோ, தாடி முளைப்பதோ கிடை யாது. அது அந்த ஆண் வர்க்கத்துக்கே இறைவனிட்ட வரம் எனச் சொல்லலாம்.

காதல் முகங்கள் களித்திருப்பது இந்த வித்தியாங்களைக் கொண்டுதான். இந்த முகங்களிடையே ஜாதி, குலம் தெரிவதில்லை. ஏனெனில் காதல் எல்லையில்லாச் சுகத்தின் முன் அடை யாளம். இக்காதல் இல்லையெனில் இத்தனைக் கோடி முகங்களையும் இவ் வுலகம் பெற்றிருக்கவே முடியாது!

குழந்தைகளின் முகங்கள் குதூ கலத்துக்குரியது. கொஞ்சும் முகங்கள் பல. எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய முகம் குழந்தை முகம். இம்முகத் துடன் தொடர்பு கொண்ட எவரும் வெறுத் ததில்லை. கொஞ்சி அணைப்பதற்கும் தூர நிற்பதில்லை. முகங்களில் இவன் என்ன ஜாதி என்று தெரிந்துகொள்ள முடி யாது. பொட்டு வைத்துக் கொள்வதாலோ, மதத் தொப்பி அணிந்து கொள்வதாலோ இவர் எந்தச் சமூகத்தை உடையவர் என மட்டும் தெரிந்துகொள்வது சுலபம். எனி னும் எல்லா முகங்களும் ஒரே இனம். மத வேலிகள் இம்முகங்களை தன்னிடையே பிரித்துக்கொள்வதால் ஏற்றத்தாழ்வுகள் மனித சமூகத்திடையே பரவலாக ஏற்படு கிறது. ஒரே மதக் கொள்கையை எல் லோரும் ஏற்றுக்கொள்ளும் நாளில் இம் முகங்களுக்கு நிரந்தரமான நிம்மதி சூழ்ந்து கொள்ளும் என்பதில் ஐயமே இல்லை. முகங்கள் நெருங்கும் போது புன்னகைத்தால் சண்டைகள் கைகட்டி நிற்கும். அந்தச் சமாதானத்தை எல்லா முகங்களும் ஏற்றுக்கொள்ளுமா? ஏற்றுக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை :

# ஞாபகப் பிரதி

- எல். வஸீம் அக்ரம்

வெள்ளைத் தாளில்
எழுதிக் குவிக்கப்பட்ட
கிறுக்குக் கவிதைகளைப் போல்
காதல் விரசங்களை
நக்கித் திரிந்த
கட்டிளமைப் பருவத்தின்
நாட்களைப் பாடுகிறேன்.

தனிமையின் பெரும் புயல் வீசிக்கொண்டிருக்க
உனது நேசக் குறுந்தகவல்களை
மாயக் காதல் கொண்டு வாசிக்க
வாழ்வே வசந்தப் பூங்காற்றால் மூழ்கடிக்கப்படுகின்றதாய்
எனக்குள் கற்பனை செய்தேன்.

ஒவ்வொரு குறுந்தகவல்களையும்
கவிதையாக்கிப்
பாடலாக்கினேன்.
மகிழ்ந்தேன்.

எனக்குள் மலர்ந்த
காவியச் சினிமாக்களை
விசர் பிடித்தவனாய்
பார்க்கத் துவங்கினேன்.

இரவுகளைக் கடன் கொடுத்து
நனவுகளைக் கறந்தேன்.

கண்ணாடி பிம்பங்களிடம்
நானே சரணடைந்தேன்.
மேக்கப் முகங்களை மணந்தேன்.

வாழ்க்கைச் சுமை பற்றி
வழக்கெழுதிய வாப்பாவுக்கே
ஆப்பு வைத்தேன்.
உம்மாவை முறைத்தேன்.
உறவுகளை முறித்தேன்.

புளகாகிந்த எச்சங்களைத் தேடி
தெருக்களில் தடம் பதித்தேன்.
தரணியின் தொங்களில்
தொலைந்தேன்.
வரன்களை மறுத்தேன்.
வயதானதன் பின் விழித்தேன்.

வாழ்வே மாயச் சணலினால்
இறுக்கப் பூட்டப்பட்டுள்ள
யதார்த்த வாச(க)ங்களை
பிந்தியே வாசித்தேன்.
அறியாமை இளைஞர்களைப் பற்றி
கண்ணீருடன் யோசித்தேன்.


Happy Photo

Excellent Photographers
Modern Computerized Photography
For
Wedding Portraits
&
Child Sittings

Photo Copies of
Identity Cards (NIC),
Passport &
Driving Licences
Within 15 Minutes

300, Modera Street,
Colombo - 15.
Tel : 2526345





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆமினாவுக்கு வயதாகிறது...

- சாரணா கையூம்

"ஆமினா, உங்கள கண்ட நாளும் நெனவில்ல. எப்படி இரிக்கிறீங்க. இங்கே, எங்கே?"

"சல்மா, நான் இங்கே வந்து ரெண்டு மூனு வருசமாகுது. பாத்திமா வூட்டுல தான் இரிக்கிறேன்."

"ஆமினா, பிள்ளையல விட்டுப் போட்டு, பொறத்தியார் வூட்டுலே இருந்தா நல்லா இரிக்கிமா?"

"சல்மா, என் நஸீபு இப்படி ஆயிட்டு. பிள்ளையல முடிச்சு கொடுத்திட்டு, மகனோட இருந்தேன். அவன் சொல் கேக்காத சோம்பேறி. வூட்ட எழுதச் சொல்லித் தொந்தரவு பண்ணினான். பொறுக்க முடியாம அவன் பேருக்கு வூட்ட எழுதிக் கொடுத்திட்டேன். கொஞ்ச நாள்ள வீட்டை வித்துப் போட்டு, எங்கேயோ ஓடிப்போயிட்டான். மகள்மார் இதக்கேட்டு, என்ட உறவை முறிச்சுக் கொண்டாங்க. நான் தெருவுக்கு வந்திட்டேன். எனக்கு ஒன்டும் விளங்கல்ல. எனக்குத் தெரிந்த பாத்திமாதான் நெனவுக்கு வந்தது. அவதான் எனக்கு இடம் கொடுத்தா. வந்து இவ்வளவு நாளாகியும் என்னப் பத்தி பிள்ளைகள் ஒருவரும் விசாரிக்கவும் இல்ல; தேடவும் இல்ல. அப்படியே மறந்து போனாங்க."

"வருத்தப்படாதீங்க ஆமினா. அல்லாட ஏற்பாடு யாரால் தடுக்க முடியும்? அவன் எழுதினதுதான் நடக்கும். எப்பவாவது பிள்ளையலுக்கு நெனவு வரும்."

"சல்மா, இப்ப எங்க போகப் போறீங்க. வாங்க பாத்திமா வூட்டுக்குப் போவோம்."

"இப்ப நேரமில்ல. இன்னொரு நாளைக்கிப் பாப்போம்" என்று விடைபெற்றாள் சல்மா.

## 2

"கதீஜா, குருத்தலாவ போயிருந்தேன். அங்கே உங்கட உம்மா, ஆமினாவைச் சந்திச்சேன். பாத்திமா வூட்டுலே இரிக்கிறாங்களாம்."

"சல்மா, உம்மா செஞ்ச வேலைக்கி பட்டு மாய்றாங்க. இதெல்லாம்



வேணுமா? ஆம்புள பிள்ளை என்டு செல்லம் கொடுத்தா இப்படித் தான் நடக்கும். அதுக்கு நாங்க என்ன செய்ய?"

"அப்படி சொல்ல வேணாம் கதீஜா. எதையோ நெனச்சி எழுதிக் கொடுத்திட்டாங்க. அதப் பத்திப் பேசி என்ன நடக்கப் போவுது. இப்ப ஆமினாவுக்கு வயதாகிறது. பிள்ளைகளோட இருந்தா சந்தோசமா இரிக்கிம் தானே. நாளைக்கி 'ஹயாத்து' மௌத்து இரிக்கி. நல்ல நேரம் பாத்திமா வூட்டுக்குப் போனா. அவ நல்ல மனசுள்ளவ. இல்லாட்டி, ஆமினா அநாத மடத்துக்குத்தான் போயிருப்பா. பிள்ளையளாலே கைவிடப் பட்டவங்களுக்கு அதுதானே கடைசி இடம். ஒருவரும் பாக்க கேக்க இல்லாட்டி, மௌத்தா போனா, எங்கேயாவது கொண்டுபோய் பொதச்சிப் போடுவாங்க. இப்படியான நிலை யாருக்கும் வரப்படாது. யோசிச்சிப் பார். பிள்ளை மனம் கல்லாய் இருப்பது நல்லமா?"

கதீஜாவின் கண்கள் பனித்தன. கல் கரைவது போல மனங் கரைந்தது.

## 3

"என்னங்க! சல்மாவப் பாத்தேன். அவங்க என் உம்மாவ குருத்தலாவயில் கண்டாங்களாம். பேசினாங்களாம். என் மனம் உருகிப் போச்சி. பெத்தவங்களுக்கு செய்ய வேண்டிய கடமைய நான் செய்யல்ல. அவங்க செஞ்ச தவறச் சொல்லிக் காட்டி, உறவ முறிச்சிக் கொண்டேன்."

"கதீஜா, உங்கட உம்மா ஏதோ தெரியாத்தனமா செய்ததுக்குப் பழி வாங்க நெனக்கிறது சரியில்ல. இப்பவாவது உங்களுக்குப் புத்தி வந்ததே. அல்ஹம்துலில்லாஹ். எங்களுக்கு வசதி இரிக்கி. அல்லாட கிருபையாலே ஒரு கொறையும் இல்ல. இப்ப நீங்க என்ன செய்யப் போறீங்க?" என்று கதீஜாவின் கணவர் ரபீக் கேட்டார்.

"உம்மாவ கூட்டிக்கொண்டு வர ஆசைப்படுகிறேன். கடைசிக் காலத்தில அவங்களுக்கு நிம்மதி கிடைக்க வேணும்; அவங்கட துஆ கிடைக்க வேணும். உங்கட விருப்பம் எப்படி?"

"கதீஜா, இத எனக்கிட்டே ஏன் கேக்கிறீங்க? உங்கட உம்மா எனக்கும் உம்மா மாதிரிதானே. தடை சொல்ல என்ட 'கல்பு' என்ன கல்லா? எனக்கு உம்மா வாப்பா இல்ல. அவங்களுக்கு என்னாலே ஏதும் செய்ய முடியாம போச்சி. அதுக்காக நான் எவ்வளவு வருத்தப்படுகிறேன் தெரியுமா? அவங்க பத்து மாதம் சுமந்து, உயிரோடே போராடிப் பெத்தவங்க. அதுக்கு எங்களாலே கைமாறு செய்ய முடியுமா? அவங்கட 'கல்ப' நோவினை செஞ்சா, அல்லாட கோபம் வராம போகுமா? அவங்கள 'சீ' என்டு கூட சொல்லப்படாது என்டு அல்லா சொல்கிறான். இதுக்கெல்லாம் எப்படி தௌபா செய்யிறது?"

"போதும், என்ன வருத்தாதீங்க. நான் செய்த தவறுக்கு உம்மாகிட்டே மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். பெத்த மனம் இரங்காமலா போகும்?" என்றாள் கதீஜா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒரு நூலும் ஒரு கவிதையும் :**

# அநாதரட்சகனின் 'நிமிர்வு' — சிறுகதைத் தொகுதியும் தாரிக்கின் 'பாரதி அக்கா' — ஒரு கவிதையும்

**- மேமன்கவி**

## I. அநாதரட்சகனின் – 'நிமிர்வு' கடந்த நிஜத்தின் சமகால அறிக்கை.

கொடகே வெளியீடாக வெளிவந்திருக்கும் **அநாதரட்சகனின் 'நிமிர்வு'** சிறுகதைத் தொகுப்பான ஆக்கப் பிரதிகளை எனது வாசக அனுவத்திற்கு உட்படுத்தியபொழுது பின்வரும் குறித்த பிரச்சினைகளை அடிக்கடி சந்திக்க வேண்டி இருக்கிறது.

சமீப கால ஈழத்து ஆக்க இலக்கியப் பிரதிகளை வாசக விமர்சனத்திற்கு உட்படுத்தும்பொழுது என்னால் எதிர்கொள்ளப்படும் இரண்டு விடயங்கள் பெரும் அவதானத்திற்கு ஆட்படுகின்றன. ஒன்று – போருக்கு பின்னான ஆக்க இலக்கியங்களின் உள்ளடக்கம் பற்றிய அவதானம். இரண்டாவது பெண்ணினத்தின் மீதான அக்கறை கொண்ட ஆண் – பெண் இருபாலாரான படைப்பாளிகளின் ஆக்கப் பிரதிகளில் பெண்ணியச் சிந்தனைக்கு முரணாக முடிந்து விடுகின்ற அபத்தம் சார்ந்தது.

ஆனாலும், அநாதரட்சகனின் 'நிமிர்வு' தொகுப்புக் கதைகளை நான் நான்கு பிரிவுகளாகப் பிரித்துப் பார்க்க விழைகின்றேன்.

1. **இத்தொகுப்பில் அவர் சேர்த்திருக்கக் கூடாத கதைகள்**
2. **பெண்ணினத்தின் மீதான அக்கறை கொண்ட கதைகள்**
3. **ஆசிரிய – மாணவ உறவு சித்திரிக்கின்ற கதைகள்**
4. **இத்தொகுப்பில் இடம் பிடித்துள்ள சிறந்த கதைகள்.**

அநாதரட்சகன் இடதுசாரி சிந்தனையாளர். கல்வித்துறையில் பணியாற்றுபவர். கடந்து போன போர்ச் சூழல் காரணமாக குடும்ப ரீதியாக அவர் எதிர்கொண்ட இழப்புக்கு எந்தவொரு வார்த்தையும் ஈடாகாது என்பதை ஒத்துக் கொண்டும், அதே சூழலின் காரணமாகப் பல படைப்புகளை இழந்த நிலையில் இத்தொகுப்பு



வெளிவருகிறது என்பதை அறிவோம். அவ்விரு இழப்புகளின் தாக்கம் இத் தொகுப்பின் கதைகளின் உள்ளடக்கத்திலும், தேர்விலும் தெரிகிறது.

இனி இத்தொகுப்பில் சேர்த்திருக்கக் கூடாத கதைகள் என்று நாம் குறிப்பிடும் கதைகளாக பின்வரும் கதைகளைச் சொல்லலாம்.

1. **வைராக்கியம்**
2. **விகற்பம்**
3. **மனச்சிறை**

இதில் **வைராக்கியம்** வெறுமனே மலையகச் சூழலில் சாதிய உணர்வின் பின்னணியில் நடக்கின்ற ஒரு காதல் கதையாக முடிந்து விடுகிறது. **விகற்பம்** என்ற பிரதியோ முழுமையாக வடிவம் பெறாத நிலையில் முடிந்து விடுகிறது. **மனச்சிறை** என்ற கதைப் பிரதியும் அக் கதை உள்ளடக்க அறிமுகத்துடன் முடிந்து விடுகிறது. அது இன்னும் வளர்தெடுத்துச் செல்ல வேண்டிய கதைப் பிரதி என்பது என் அபிப்பிராயம். (ஆனால் அக்கதைப் பிரதி பின்னால் நாம் பேசப் போகும் இத்தொகுப்பிலுள்ள பெண்ணியப் பிரதிகள் சம்பந்தமாகப் பேசும் பொழுது தேவைப்படும் ஒரு பிரதியாகும்.)

இனி, பெண்ணினத்தின் மீது அக்கறை கொண்ட கதைகள் என பார்தோமேயானால் பின்வரும் கதைப் பிரதிகளைச் சொல்லலாம்.

1. **நிமிர்வு**
2. **சபலம்**
3. **பசித்த மனம்**

அத்தோடு மேலே குறிப்பிட்ட **மனச்சிறை** என்ற கதைப் பிரதியையும் சேர்த்துக் கொள்ளலாம்.

**நிமிர்வு** ஒரு பெண் ஆசிரிய நியமனத்திற்காக எதிர்கொள்ளும் போராட்டத்தைச் சித்தரிக்கின்றது. அரச ஊழியர்களின் சுயநல நடவடிக்கையினால் ஏற்படும் பாதிப்பையும், ஆணியச் சமூக கட்டமைப்பில் அவ்வினத்தின் ஆதிக்கத் தன்மையை அழகாகச் சித்தரிக்கின்றது என்ற வகையிலும், சமூகப் பிரக்ஞை கொண்ட நல்லதொரு பிரிதியாக வெளிப்பட்டாலும், பெண்ணியச் சிந்தனையின் அடிப்படையில் பார்க்குமிடத்து அக்கதை முடிவில் அப்பெண் வெளிப்படுத்தும் எதிர்வினையில் போராட்ட உணர்வின் போதாமையை உணர்கிறோம்.

அநாதரட்சகன் பெண்ணினத்தின் அக்கறையுடன் எழுதப்பட்ட கதைப் பிரதிகளாக நாம் அடையாளப்படுத்தும் **நிமிர்வு, சபலம், பசித்த மனம், மனச்சிறை** ஆகிய எல்லாக் கதைகளும் பெண்ணின் இயலாமையுடன் முடிந்து விடுகின்றன என்பதுதான் குறையாக இருக்கிறது.

**சபலம** கதையை எடுத்துக்கொண்டோமானால், ஆணினத்தின் சபலத்தை, வக்கிரத்தை எடுத்துக் காட்டுகின்றது என்பது என்னவோ உண்மைதான். ஆனால், இக்கதையில்வரும் இராசாத்தி என்ற பெண் மீது அக்கதையில் அவன் கொண்டிருப்பது அனுதாபம் என்பதை படைப்பாளி சொல்ல முயற்சி செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதும், அவன் இராசத்தி மீது கொண்டிருப்பது வக்கிரமான சபலமாக அக்கதைப் பிரதியில் இராசத்தி சம்பந்தமாகக் கையாளப்பட்டிருக்கும் ஆணிய மொழி வாசிக்க வைத்து விடுகின்றது. உதாரணமாக அவளது உடல்வெளி பற்றிய வர்ணனை மூலம், அவளது கவர்ச்சி பற்றிய அதிக அளவான பிரஸ்தாபிப்பு, அவளது நடத்தை பற்றிய குறிப்புக்கள் (பிழையாகப் பேசிக்கொண்டார்கள் என்ற மாதிரியான சொல்லாடல்கள்) போன்றவை அக்கதாநாயகன் அவள் மீது கொண்டிருப்பது அனுதாபமா? சுயலாபமா? என்ற கேள்வியினை தவிர்க்க முடியாமல் எழுப்பி விடுகிறது.

இனி **பசித்த மனம்** என்ற கதைப் பிரதியினை எடுத்துக் கொண்டோமானால் விதவை ஒருத்திக்கு சபல புத்தியுடன் ஓர் ஆண் செய்யும் உதவியைக் காதல் என்று எண்ணி ஏமாற்றம் அடைவதைச் சொல்லுகின்றது. இப்பிரதியும் ஆணின் வக்கிரப் புத்தியினை எடுத்துக் காட்டினாலும், அப்பிரதியில் கையாளப்பட்டிருக்கும் ஆணிய வகை சொல்லாடல்கள் அப்பெண்ணைப் பற்றி ஒரு மோசமான எண்ணத்தை உருவாக்குகிறது. உதாரனணமாக இக்கதையின் தலைப்பே அத்தகைய ஒரு சொல்லாடலாகவே இருக்கிறது. அதாவது அவளது ஏக்கத்தைச் சொல்ல முனையும் பொழுது அவள் காமப் பசிக்காரி என்ற அர்த்தத்தை ஒரு வாசகன் மனதில் உருவாக்கின்ற ஆபத்தினை அப்பிரதி சந்திக்கின்றது.

**மனச்சிறை** கதைப் பிரிதியை எடுத்துக் கொண்டோமானால், அது மிக ஆழமாகப் பெண்ணின் மனசை சொல்ல வரும் கதையாக இருக்கின்றது. மாமியாரின் கடுமையான பேச்சுக்கு எதிராக அவள் வெளிப்பாட விடினும், அவள் மௌனமாக இருத்தல் என்பதும், தன் பிள்ளையின் அணைப்பில் காலமாய் போன தன் கணவனை காணுதல் என்பதும், மாமியாரின் **சனியன் புடிச்சவள்** என்ற அந்த வசையை நிகாரிக்கப் பயன்படும் தன்மை வெளிப்படுகின்றது. மேலே இக்கதையைப் பற்றி சொன்ன குறையை மீறியும் பெண்ணியப் பிரதியாகத் தன்னை தக்க வைத்துக் கொள்கிறது.

இவ்வாறாக பெண்ணின் மீதான அனுதாபம், அக்கறையுடன் எழுதப்பட்ட அநாதரட்கனின் பெரும்பாலான பிரதிகள், அப்பிரதிகளில் கையாளப்பட்டு இருக்கும் ஆண் மைய மொழியாடல்களின் காரணமாக, அப்பிரிதகளில் பெண்களைப் பற்றிய எதிர்மறையான கருத்துக்களை முன்வைத்து விடுகின்றன. இது அநாதரட்கனின் தவறு என்று நான் சொல்ல மாட்டேன். இன்றைய சூழலில் தனியாக அடையாளம் காட்டப்படும் பெண் மொழியைப் பற்றி புரிதலும், தமது மொழிக் கலாசாரத்தில் செயற்படும் ஆண் ஆதிக்கத்தையும் பற்றிய தெளிவும் தம்மிடையே பரவலாக இல்லாமல் இருப்பதுமே காரணமாகுகிறது.

அடுத்து, அநாதரட்சகனின் கதைப் பிரிதிகளில் ஆசிரிய – மாணவ உறவினை சித்திரிக்கும் கதைகள்.

அநாதரட்சகன் கல்வித்துறை சார்ந்தவராக இருப்பதனால் மிக அழ



காக ஆசிரிய மாணவ உறவை உணர்வுப் பூர்வமாக அவரால் சித்தரிக்க முடிந்திருக்கிறது. அத்தோடு இன்றைய கல்விச் சூழலில் ஆசிரியர்களின் நடத்தை மீதான அவதானத்தையும் இக்கதைப் பிரதிகள் நமக்குள் உண்டாக்கி விடுகின்றன.

**நிமிர்வு** – இத்தொகுப்பில் ஆசிரிய – மாணவ உறவை சித்திரிக்கின்ற கதைப் பிரதிகளாக

1. **சீருடை**
2. **இழப்பு**

**சீருடை** என்ற கதை பாடசாலையில் வழங்கப்பட்ட சீருடையை அணிந்து வராத மாணவனை கடுமையாகத் தண்டித்து, பிறகு அம்மாணவன் சீருடையை அணிந்து வ்ராத காரணத்தை அறிந்த பின் வருந்தி உதவும் ஒரு ஆசிரியரைச் சித்தரிக்கும் கதை. இக்கதையின் உச்சம் சிறப்பாக இருக்கிறது. ஆனால் அநாதரட்சகனின் இக்கதை மட்டுமல்லாமல், நான் பயின்ற ஆசிரிய – மாணவ உறவை சித்திரிக்கின்ற கதைகளை மறுவாசிப்பு செய்யும் பொழுது ( அன்று படிக்கக் கிடைத்த டொமினிக் ஜீவாவின் **நடுப்பகலில் கோடை மழை** முதற் கொண்டு, சமீபத்தில் படிக்க கிடைத்த மன்னார் எஸ்.ஏ. உதயனின் **குண்டுசேர்** வரையிலான கதைகள்) சில கேள்விகள் எனக்குள் எழுகின்றன. ஆசிரியர் பயிற்சியின் பொழுது அவர்களுக்குப் போதிக்கப்படும் சிறுவர் உளவியல், இன்றைய கல்வி கற்பிக்கும் முறைமையில் மாணவர்களை அடித்தல் என்பதையிட்ட கருத்து நிலை போன்றவைகளை அறிந்த ஆசிரியர்கள், இவ்வளவு கடுமையாக ஏன் நடந்து கொள்கிறார்கள்? (கதைகளின் முடிவுகளில் அவர்கள் எல்லோரும் கருணை மிக்கவர்களாக மாறுவது என்பது வேறு விடயம்.)

**சீருடை** எனும் கதையில்

**"நன்றாக அடித்து விட்டேன்."**

**"அதுவும் சற்றுக் கடுமையாக"**

**"அவனைத் தண்டிக்க வேண்டும் போல் மனம் இறுகிக் கொண்டது."**

**"மேசையில் கிடந்த தடியினால் வீசி வீசி நன்றாக அடித்து விட்டேன். போதாதற்கு மேசையில் ஏற்றியும் விட்டேன்.''**

இது இன்றைய கல்வி சார் உலகின் ஆசிரியர்களின் யதார்த்த வார்ப்பா? அல்லது ஆசிரிய – மாணவ உலகை சித்திரிக்க முனைக்கின்ற படைப்பாளிகள் வார்க்கும் ஆசிரியர்கள் என்ற பாத்திரங்களைச் சரியாக பராமரிக்காமல் விடுவதனால் எழுகின்ற நிலையா?

ஆனால் இத்தொகுப்பில் **இழப்பு** என்ற கதையில் வரும் ஆசிரியரின் கதாபாத்திரம் மிக செம்மையாக செதுக்கப்பட்டுள்ளதாக நான் கருதுகிறேன். சருடையில் வரும் ஆசிரியர் போல் அல்லாது மாணவ சமூகத்தின் மீது பிரியம் கொண்ட, அவர் தம் நலனில் அக்கறை கொண்ட ஓர் ஆசிரியராக **இழப்பு** கதையில் வரும் ஆசிரியர் திகழ்கிறார். நல்ல ஆற்றல் மிக்க ஒரு மாணவி வறுமையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக படிப்பை இடையில் நிறுத்தி விடுவதை கண்டு, அந்த ஆசிரியர் படும் மன அவஸ்தையை நல்ல நடை ஓட்டத்துடன் நமக்கு எடுத்துக் காட்டுகிறது. இவ்விடத்தில் ஒன்றைச் சொல்ல வேண்டும். இலக்கியப் பிரதியாக்கம் என்பது முற்று முழுதாக மொழியிலே தங்கி இருக்கிறது. இன்றைய சூழலில் மொழியாடல்களில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களை (இதில் ஆண் மொழி – பெண் மொழி என்பதும் அடங்கும்) பற்றிய ஓர் அவதானம், ஓர் அறிதல் இருக்க வேண்டும். ஓர் இலக்கியப் பிரதியில் சொல்லப் போகும் விடயம் தாக்கபூர்வமாக அமைவதற்கும் அதற்காக தேர்ந்தெடுக்கப் படும் சொற்கள் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றன. அதேவேளை சரியாக தேர்வு செய்யப்படாத சொற்களால், புனைகதை போன்ற பிரதிகளில் பாத்திர வார்ப்பு என வரும் பொழுது அப்பாத்திரத்தை பற்றிய எதிர்மறையான கருத்துக்கு வாசகன் வருகின்ற ஆபத்தும் இருக்கின்றது.

உதாரணத்திற்கு **நிமிர்வு** எனும் இத்தொகுப்பில் அமைந்துள்ள பாத்திர வார்ப்பிலும் சரி, நடையிலும் சரி சிறந்த கதையாக விளங்குகின்ற **இழப்பு** இக்கதையில் அந்த மாணவி பாடசாலைக்கு வர முடியாமல் சந்தையில் வியாபாரம் பண்ணும் காட்சியை காணும் ஆசிரியர் படும் மன அவஸ்தை சித்திரிக்கின்ற ஒரு வாக்கியம் இது.

*" பாடசாலைக்கு வரும் வேளை, வழியில் கண்ட காட்சிக்குப் பின் மனதில் தொற்றி கொண்ட கிளர்ச்சியை என்னால் அடக்க முடியவில்லை. மனம் தவித்தபடி இருக்கின்றேன்."* இவ்வாக்கியத்தில் கிளர்ச்சி என்ற சொல் பொருத்தமற்றதாக எனக்குப் பட்டது. தமிழ் மொழியில் ஒரு சொல்லுக்கு பல அர்த்தங்கள் இருப்பினும், முதன்மையான அர்த்தம் அல்லது பழகிப் போன அர்த்தம் ஒன்று இருப்பது உண்டு. அந்தக் **கிளர்ச்சி** என்ற சொல்லுக்கான பழகி போன அர்த்தம் அப்பிரதியின் கதைச் சொல்லியான அந்த ஆசிரியரின் பாத்திர வார்ப்புக்கு களங்கம் ஏற்படுத்தி விடுகின்ற சாத்தியமும் இருக்கிறது.

இத்தொகுப்பில் 80களின் இறுதி பகுதி முதற் கொண்டு 2011ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் எழுதி வெளிவந்த கதைகளாக இருக்கின்றன. அந்த வகையில் 80களுக்குப் பின்னான ஈழத்து படைப்பிலக்கியம் பேசிய போர்ச் சூழல், அது ஏற்படுத்திய பாதிப்பு ஆகியன பற்றி இத்தொகுப்பில் அமைந்துள்ள எல்லாப் பிரதிகளும் ஏதோ ஒரு வகையில் பேசிச் சென்றிருக்கின்றன. அத்தகைய வெளிப்பாடானது, அநாதரட்சகனை சமூகப் பிரக்ஞை மிக்க ஒரு படைப்பாளியாக நமக்கு இனங் காட்டுகிறது.

இனி இத்தொகுப்பில் எனது வாசக அனுபவத்தில் கண்ட சிறந்த கதைகள் சிலவற்றைப் பற்றிப் பார்ப்போம்.

1. சிதைவு
2. ஆறாத அவலம்
3. திருப்பம்
4. இழப்பு



5. தவிப்பு

இதில் **இழப்பு** கதை பற்றி ஏலவே சொல்லப்பட்டு விட்டது. அடுத்து **திருப்பம்** வேலையில்லா இளைஞனின் மனப்போராட்டம், சாதியம், தந்தையின் தொழிலை செய்வது என்ற முடிவு என்ற விஷயங்களை பேசுகின்ற இப்பிரதி, யாழ்ப்பாண சமூக வாழ்கையின் யதார்த்தத்தை நன்றாக பேசுகிறது. அதைப் போல் **ஆறாத அவலம்** என்ற கதையில் வரும் அலுவகத்தில் சிற்றுழியராக பணி புரியம் பூபாலண்ணர் என்ற பெரியவரின் வாழ்க்கையில் உள் ஒளிந்து இருக்கும் சோகத்தை அறியும் பொழுது கதை சொல்லியும் சரி, வாசகர்களான நாமும் சரி ஒரு கணம் கலங்கி விடுகிறோம். இத்தொகுப்பில் அமைந்துள்ள மற்றுமொரு சிறந்த கதையான **தவிப்பு** என்ற கதை ஒரு முதியவருக்கும் அவரது பாலிய காலத்தில் வாங்கிய சுவர் கடிகாரத்திற்குமான உறவைப் பற்றி பேசி, பேரன்களால் அக்கடிகாரம் உடைக்கப் படுவதும், உடைந்த அக்கடிகாரம் பின் பிள்ளைகளுக்குப் படிப்பிக்க பயன்படும் ஒன்றாக மாறுவதுமாக கதை நகர்கிறது. பாத்திர வார்ப்பில் சிறப்பான இக்கதையில் ஒரு சுவர் கடிகாரம் சமகால அரசியலுக்கான குறியீடாகவும் என்னால் வாசிக்க முடிந்தது. அத்தோடு தலைமுறை இடைவெளி பற்றியும் எந்த ஆர்ப்பட்ட தொனியுமின்றி பேசிச் செல்வதாக எனக்குப் பட்டது.

இறுதியாகச் ***சிதைவு*** பற்றி சொல்ல வேண்டும். இக்கதை விமர்சனத்திற்கு அப்பாற்பட்ட ஒரு கதை. இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள பெரும்பாலான கதைகளில் அவை புனைவுகளாக இருப்பினும், அங்காங்கே அநாதரட்கனின் நிஜ இருப்பு தலை காட்டினாலும், **சிதைவு** எனும் கதையில் முற்றும் முழுதுதாக அநாதரட்சகன் என்ற மனிதனின் இருப்பு பரவி இருக்கிறது. இக்கட்டுரை குறிப்பின் முன் பகுதியில் குறிப்பட்டது போல், போர்ச் சூழல் காரணமாக அவர் குடும்ப ரீதியாக அவர் எதிர்கொண்ட இழப்பின் சோகத்தை நமக்கு இக்கதை இடம் பெயர்க்கிறது. அதனால் இக்கதை புனைவுத் தன்மை அற்ற நிலையில், கற்பனையான பாத்திர வார்ப்பு என்ற கேள்விக்கு இடமே இல்லாமல், தன் குடும்பத்தின் இன்றைய நிலையை சித்திரக்கின்ற இக்கதையில் உயிர்ப்பு இருக்கின்றது.

மொத்தத்தில்,

**நிமிர்வு** எனும் இத்தொகுப்பில் அமைந்துள்ள கதைப் பிரதிகள் கடந்த கால ஈழத்து தமிழ் பேசும் மக்கள் கடந்து வந்த இழப்பை, அதன் விளைவான சோகத்தை ஆர்பாட்டம் இன்றி பதிவு செய்கின்ற ஒரு படைப்பாளியை இனங்காட்டும் ஆவணங்களாக திகழ்கின்றன. அத்தோடு, ஆண்மொழி – பெண்மொழி பற்றும் பாத்திர பாராமரிப்பு போன்ற பல விடயல்கள் பற்றி உதவும் பிரதிகளாகவும் அவை இருப்பதனாலும் ஈழத்து புனைவுயாக்க உலகில் பரவலாக பேசப்பட வேண்டிய, பேசப்படும் பிரதிகளாக அவை வெளிப்பட்டு இருப்பது மறுப்பதற்கில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உ. தாரிக்கின் 'பாரதி அக்கா'வை முன் வைத்து பிரதியின் அரசியலைப் பற்றிய உரையாடலுக்கான ஒரு குறிப்பு.

### பாரதி அக்கா

**எந்தத் தீங்கும் செய்யத் தெரியாதா ஓர் உயிராகவும்**
**சிறு பறவையாகியும் இருக்கிறாள்**
**வாசல் பெருக்குதல்**
**சட்டி பானை கழுகுதல்**
**அதெல்லாம் அம்மாவின் வேலை.**
**வளவினுள் இடையூறாக இருக்கும் மரங்களைத் தறித்தல்**
**தனக்கான வீட்டைத் தானே கட்டுதல்**
**தையல் மெசினில் ஒரு மெசினாக இயங்குதல்**
**தனக்கு வேண்டுமென யாவையும்**
**தானே வியர்வை சிந்திப் பெறுதல்**
**முத்தாகச் சிரித்தல்**
**கலகலத்துப் பேசுதல்**
**இதெல்லாம் அக்காவின் வேலை**
**பம்பரம் போன்று இயங்குவாள்.**
**எப்போதுமே அவளின் முகத்தில் ஆயிரம் நிலவு இருக்கும்.**
**பல பூந்தோட்டங்களும் மணக்கும்.**
**அன்று தங்கையின் கல்யாணத்தில்**
**பறந்து பறந்து செயற்பட்டாள்**
**ஒரு சொட்டு வறட்சியும் அவளின் முகம் காட்டவில்லை**
**அவள் தங்கைக்கு இன்னொரு தாயானாள்**
**ஆனால் எந்தத் தனிமையில்**
**எந்த இரவினில் எப்படியெல்லாம் அவள்**
**அவளாகவே வதைபட்டுக் கலங்குகிறாளோ தெரியவில்லை**
**அவளின் அகத்திலுள்ள புழுக்கத்தையும்**
**பருவத்தின் நெருக்குதலையும் தாங்க இயலாமல்**
**எந்த மூலையில் இதயத்தை ஒளித்து வைக்கிறாளோ புரியவில்லை**
**அவளின் சிறகுகள் பறக்க முடியாமல்**
**இன்னும் இரகசிய சிறைக்குள்ளே இருக்கின்றன.**
**எனது உம்மா எப்போதும் சொல்லுவாங்க**
**அவக்கு நல்ல வாழ்க்கை அமையும்**



**எல்லோரையும் விடவும் அவதான்**
**ராணியாக வாழ்வா என்று.**
**எனது பிரார்த்தனையிலும் - அந்த**
**அக்காவின் முகத்திலுள்ள**
**நிலாக்களையும்**
**பூந்தோட்டங்களையும்**
**நிலைபெறச் செய்யவே**
**வேண்டுகிறேன்.**

இது திருகோணமலை கந்தளாயை சேர்ந்த தாரிக் என்ற கவிஞரின் கடந்த வருடம் (2011) வெளிவந்த தென்கிழக்கு அஷ்ரப் சமூக சேவைகள் நிறுவனம் வெளியிட்ட கவிதைத் தொகுப்பான **'மகாராணி'** எனும் தொகுப்பில் இடம் பெற்றுள்ள **'பாரதி அக்கா'** எனும் கவிதை ஆகும். அக்கவிதையை படித்து முடித்து இருப்பீர்கள் என நம்புகிறேன். இக்கவிதையை முன்வைத்து பிரதியின் அரசியலை பற்றிய ஒரு உரையாடலுக்கான தொடக்க முயற்சியே இக்குறிப்பு.

ஒரு பிரதியின் கட்டமைப்பு ஊடாக வெளிப்படும் அர்த்தத்தின் அளவுதான், அப்பிரதி தருகின்ற அனுபவத்தின் தாக்கத்தை நிர்ணயம் செய்கிறது. அப்பிரதியிலிருந்து வெளிப்படும் அர்த்தம், – பெறப்படும் அனுபவம் என்ற இயக்கத்திற்கான ஆக்கம் தந்த படைப்பாளியை அப்பிரதியிலிருந்து முற்றும் முழுதுமாக இல்லாமல் செய்து விடுகின்ற அளவான கோட்பாடுகள் வளர்ந்து இருப்பதை நாம் அறிவோம்.

பின் –அமைப்பியல் ஊடாக மொழி சார்ந்த சிந்திப்புக்கு பின் படைப்பாளியின் மரணத்தைப் பற்றி பேசப்பட்டாலும், ஒரு பிரதியானது, படைக்கப்பட்டிருக்கும் மொழி தரும் முதல் அர்த்தத்தில், அல்லது முதல் வாசிப்பில் படைப்பாளியை பற்றிய பிரக்ஞையுடன்தான் வாசிக்கப்படுகிறது என்பது என் அபிப்பிராயம். அதற்கு முதன்மையான காரணம் அப்பிரதியில் செயற்படும் அப்பிரதி ஆக்கிய படைப்பாளியின் பெயரையிட்ட பிரக்ஞையே ஆகும். இக்கூற்று இன –மத –தேச –சமூக அடையாளத்துடன் வெளிப்பட்டும் படைப்பாளியின் பெயருக்கு மட்டுமல்லாமல், அத்தகைய அடையாளங்கள் எதனையையும் வெளிப்படுத்தாத ஒரு பெயரில் ஒரு பிரதி இருப்பினும் கூட, இக்கூற்று பொருந்தும். அத்தகைய நிலையில் அந்த படைப்பாளி பற்றிய வாசகனின் தேடல் விரிவான ஒன்றாகவே இருக்கும். அதாவது அவர் யார்? அவர் எங்கு இருக்கிறார்? என்பதாக.

இதனை நான் இங்கு குறிப்பிடுவதற்கு காரணம் ஏதோ ஒரு வகையில் முதல் வாசிப்பிலோ அல்லது ஏதோ ஒரு தருணத்தில் படைப்பாளியை பற்றிய தேடல் நிகழ்தான் செய்கிறது என்பதை அழுத்திச் சொல்லத்தான்.

இதன் கூற்றின் மூலம், ஒரு பிரதியை தனது பிரதியாக வாசகன் மாற்றுகிறான். என்பது முற்றும் முழுதுமாக மறப்பதாக அர்த்தம் ஆகாது.

இன்னும் மேலும சொல்வதென்றால், தாரிக்கின் அக்கவிதை படைப்பாளியை பற்றிய பிரக்ஞையுடன் என்னால் வாசிக்கப்பட்ட பொழுதும், அது தாரிக்கின் பிரதியாக வாசிக்கபடாமல், எனது பிரதியாக வாசிக்கப்பட, இரண்டாவது வாசிப்பின் எத்தனிப்பில் தாரிக் எனும் கவிதைச் சொல்லியின் படைப்பாக வாசிக்கபட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து இக்கவிதை பற்றிய எனது சில வாசிப்புகளைப் பற்றி பேசுவதற்கு முன்னதாக, புனையாக்கங்களுக்கு சூடப்படும் தலைப்புகள், அப்புனைவாக்கங்களை உள்வாங்கும் வாசகனுக்கு எந்த அளவுக்கு அவை உதவுகின்றது (படைப்பளியின் பிரதியாக பார்ப்பதற்கும் சரி, வாசகன் தனது அப்பிரதியாக வாசிப்பதற்கும் சரி) என்ற கேள்வி கனநாட்களாக எனக்குள் இருக்கிறது.

அந்த பார்வையில் தாரிகின் இக் கவிதையின் தலைப்பான **பாரதி அக்கா** என்ற தலைப்பை எடுத்துக் கொண்டோமானால், அது நற்செயலாக அச்சாகாமல் இருந்தாலோ, அல்லது தாரிக்கினாலோ அக்கவிதைக்கு ஏதோவொரு தலைப்பு கொடுக்கப்படாபல் இருந்திருந்தால், என் போன்ற வாசகர்கள் இக்கவிதைப் பிரதியை எவ்வாறு வாசித்து இருப்பார்கள் என்ற ஒரு கேள்வியும் எனக்குள் எழுந்தது. இக் கவிதையில் தலைப்பாக இடம்பெற்றுள்ள **பாரதி அக்கா** என்ற சொல்லாடலே இந்த கவிதையின் உயிராக இருக்கிறது. ஆனால், இச்சொல்லாடலோ இக்கவிதைப் பிரதியில் வேறு எங்கும் இடம்பெறவில்லை.

கவிதையின் செய்தியை கவிதைத் தலைப்புடன் சேர்த்து பார்க்குமிடத்து இனங்களிடையான உறவு, உணர்வு என்பதான வாசிப்பு பின் தள்ளப்பட்டு விடுகிறது. ஆக தலைப்பில் தங்கியிருத்தல் என்பது இக்கவிதைப் பிரதியின் பலஹீனமாகுகிறது. (இவ்விடத்தில் ஹைக்கூவை பற்றிச் சரியாகத் தெரியாத பல இளம் படைப்பாளிகள் தலைப்புகள் கொண்ட விடுகதைகளை ஹைக்கூக்களாக சொல்லிக் கொண்டமை இங்கு நினைவுக்கு வருகிறது.)

இனித் தலைப்பை மறந்து கவிதை சொல்லி ஊடாக இக்கவிதையை நாம் எவ்வாறு புரிந்து கொள்கிறோம் என்பதை பார்தோமானால், கல்யாணம் ஆகாத, எல்லா வேலைகளையும் ஒடி ஆடி செய்யும் “அகத்திலுள்ள புழுக்கத்தையும், பருவத்தின் நெருக்குதலையும்” கொண்ட ஒரு பெண்ணைப் பற்றிய கவிதை என்பதாக புரிந்து கொண்டு மேலே போனால் அவள், அன்று தங்கையின் கல்யாணத்தில் பறந்து பறந்து செயற்பட்டாள் என்று வரும்பொழுது, இதுவரையிலான கவிதையில் கவிதை சொல்லிக்கும் அவளுக்குமான உறவு எத்தகையது என்பது நமக்குள் தீர்மானம் ஆகாத நிலையில், ஒரு கேள்வி எழுகிறது. அந்தத் தங்கை யாருடைய தங்கை? கவிதைச் செல்லியினதா? அல்லது அவளது தங்கையா? ஆனால், ஒரு விடயத்தில் நாம் தெளிவு பெறுகிறோம். இவளது திருமணத்திற்கு முன் இவளது தங்கைக்கு கல்யானம் நடக்கிறது. அதற்கான காரணம் அக் கவிதைப் பிரதியில் வெளிப்படவில்லை. இதுவரையிலான நகர்ந்த கவிதைப் பிரதியில் அம்மா, அக்கா, தங்கை போன்ற சொல்லாடல்கள் ஒர் இன அடையாளத்தை எடுத்துக் காட்டுகின்ற சொல்லாடல்கள் என்பதும், கவிதை சொல்லிக்கும் அவளுக்கும் இடையிலான இன வேறுபாடு என்பதும், எனது உம்மா எப்போதும் சொல்லுவாங்க “அவக்கு நல்ல வாழ்க்கை அமையும். எல்லோரையும் விடவும் அவதான் ராணியாக வாழ்வா”



எனும் பொழுது உறுதியாகுகிறது. இந்த உறுதி இதுவரை இக்கவிதைப் பிரதி ஒரு கல்யாணம் ஆகாத ஒரு பெண்ணை பற்றி பேசுகின்றது என்ற நிலையை கடந்து, எல்லா வேலைகளையும் ஒடி ஆடி வேலை செய்யும், ‘அகத்திலுள்ள புழுக்கத்தையும், பருவத்தின் நெருக்குதலையும்’ கொண்ட ஒரு தமிழ் பெண்ணைப் பற்றி ஒரு முஸ்லிம் குடும்பம் உணர்வுப் பூர்வமாகக் கொள்ளும் மதிப்பை, பிணைப்பை பேசுகின்ற ஒரு கவிதைப் பிரதியாக வெளிப்படுகிறது.

இவ்வளவு தூரம் இக்கவிதைப் பிரதியிட்டு நான் விசாரம் செய்யவதற்கு காரணம், ஒரு பிரதியின் கட்டமைப்புக்கு காரணகர்த்தாவான படைப்பாளி, அப் பிரதியில் தெரிந்தோ, தெரியாமலோ விட்டுச் செல்லும் இடைவெளிகள், சில சொல்லாடல்களின் உபயோகம் தாமதமான பிரவேசங்களாக அமைவது என்பது, அப்பிரதியிலிருந்து அப்படைப்பாளி நீக்கம் செய்யப்படுவதை விரைவுப் படுத்தி விடுகிறது என்பதை முன் நிறுத்தத்தான்.

இத்தகைய விசாரங்களை கடந்து பார்க்குமிடத்து இலங்கையின் கீழக்கில் தமிழ் – முஸ்லிம் சமூகங்கள் இடையே நிலவிய, நிலவி கொண்டிருக்கும், நிலவ வேண்டிய நெருக்கத்தையும், ஒருமைப் பாட்டையும் மிக நுண்ணிய முறையில் பேசுகின்ற கவிதையாக தாரிக்கின் **‘பாரதி அக்கா’** எனும் இக்கவிதை திகழ்கின்றது என்ற வகையில் மிக சிறப்பான கவிதை என்பது என் அப்பிராயம்.

A. R. R. HAIR DRESSERS

89, Church Road,
Mattakuliya,
Colombo - 15.
Tel : 0112527219

முற்றிலும் குளிரூட்டப் பெற்ற சலூன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# மாற்ற மயக்கம்

– எஸ்.ஏ.உதயன

யன்னலோரமாய் இருந்துகொண்டு தூரமாய்ப் பார்த்தேன்.

வானத்தை இறக்கி விட்டமாதிரி வெளிச்சுப் போய் இருக்கிறது. ஒரே நாளில் வேக வேகமாக அடர்ந்திருந்த தெருவோரத்து வேப்ப மரத்தையெல்லாம் வெட்டி சங்காரித்துக் கொண்டு போகின்ற அந்த மிருகம் போன்ற பெரிய வாகனத்தைப் பார்க்க எரிச்சல் எரிச்சலாய் வந்தது.

இந்த ஊருக்குச் செழிப்பும் அழகும் வேம்புதான். அதனை எல்லாரும் மருத்துவ மரம் என்று கொண்டாடுகிறபோது இந்த ஆர்.டி.ஓ.காரன்களுக்கு மட்டும் அது புத்தியில் உறைக்காதது போல வேரோடு வெட்டிச் சாய்த்துக் கொண்டு போகிறார்கள் .றோட்டை அழகுபடுத்துகிறார்களாம்.

முன்பெல்லாம் சாலையின் ஒரு கோடியில் நின்று பார்த்தால் ஒற்றையாக யாரோ ஒருவர் போய் வருகிறதைத்தான் பார்க்க முடியும். இப்போது என்னடாவென்றால் எங்கிருந்துதான் முளைத்தார்களோ இத்தனை பேர் காலையில் இருந்து மாலை வரை அதுவும் வித விதமான வாகனங்களோடு இது எங்கள் ஊர், எங்கள் கடற்கரை என்று சொந்தம் கொண்டாட முடியாதபடி கடற்கரைக் காணியை எல்லாம் யாரோ அள்ளி வீசுகிற கற்றைக் காசுகளுக்கு விற்றுக் கொண்டிருக்கிறார்களாம். எனக்கு என்னவோ கடற்கரை கிட்ட வந்தது போல இருக்கிறது. அப்படியே எல்லாவற்றையும் கபளீகரம் செய்து விட்டால் பரவாயில்லைப் போல இருக்கிறது. யுத்தம் முடிந்த பின் கடகடவென்று சடுதியாக மாறுகின்ற கோலங்களைப் பார்க்கும் போது மனசுக்குள் பயம் தொற்றிக் கொள்ளுகிறது. புதுசு புதுசாக நாளுக்கு நாள் தோன்றுகிற உல்லாச விடுதிகளும் ஹோட்டல்களும். திரும்பவும் தலைமன்னார் இராமேஸ்வரம் கப்பல் ஓடப் போவதாகச் சொல்லுகிறார்கள். இப்போதே கடற்கரைப் பக்கம் ஊர்ப்பொண்டுகள் கருவாடு காயப் போடவும் போக முடியுதில்லையாம். யாரோவெல்லாம் அசிங்கமாகப் பார்க்கிறார்களாம். வீட்டு ஆம்புளைகளே பொண்டுகளை மறிச்சிப் போட்டாங்கள். யுத்தம் நின்று போனால் எல்லாம் சரியாகிப் போய்விடும் என்று நினைத்ததெல்லாம் பொய்தானோ..?

வித்தியா முதல் நாள் வேலைக்குப் போக வெளிக்கிட்டபோது பொட்டக் குட்டி வேலைக்குப் போறாளென்று கவலையாகத்தான் இருந்தது. கொஞ்சநாள்தான். வீட்டுக்கு வசதி வந்தபோது சந்தோசமாத்தான் எல்லாரும் எல்லாத்தையும் அனுபவிச்சோம். ஆனால் தற்போது வித்தியாவின் போக்கை நினைக்கிற போது நெஞ்சு குமுறுது. இவள் வீட்டிலிருக்கிற போது அவள் தம்பி அனந்துவுடன் போடுகிற சண்டைக்கு காரணம் புரியாமலிருந்தது. அவனும் அப்படித்தான் பள்ளிக்கூடம் விட்டு நேராக வீட்டுக்கு வருகிறானில்லை. அவனும் அவளைப் போலவே தான் ஊர் சுற்றிவிட்டு பிந்திப் பிந்தித் தான் வருகிறான். இப்போதெல்லாம் அவன் தேவையை அவனே பார்ப்பது போலவே, கையில் காசுப் புழக்கம். கேட்டால்,

"கடக்கரையில வெள்ளக்காரனுக்குத் தண்ணி வித்த காசு" என்கிறான். ஆம்பிளைப்புள்ள நேரஞ்செண்டு வந்தாப் பரவாயில்ல. பெண்பிள்ளை வீட்டுக்குப் பிந்தி வருவதுதான் எனக்கு வேதனையாக இருந்தது.

உதட்டுக்குச் சாயம் பூசிக்கொண்டிருந்த வித்தியாவிடம் கேட்டேன், "ராத்திரி பதினொரு மணிக்குப் பிறகு வெளியில என்ன வேலை?"

வித்தியா பதிலொன்றும் பேசாதிருந்தாள்.

"பொம்புளப்புள்ள நேரஞ்செண்டு வாறது சரியில்ல."

உதட்டுக்குச் சாயம் பூசுவதை நிறுத்தாமலே வித்தியா சொன்னாள் "அப்ப வேலைக்குப் போகாமல் விடட்டோ?" எனக்கு என்ன பதில் சொல்லுவதென்றே தெரியவில்லை.

மௌனம். அனிச்சையாகவே நான் என் காலைப் பார்த்தேன். வலது முழங்காலுக்கு கீழே வெட்டி மழுக்கி விட்ட இடத்தில் ஒரு பிடிப்புமில்லாமல் சுருங்கிப் போய்ப்பட பார்க்க என்னவோ போலிருக்கிறது. வீல்செயார் உபயம் வாழ்வுதயம்.

தாயில்லாப் பிள்ளைகள் என நினைத்து தவித்த போதுதான் வித்தியா பிழைக்கப் போகிறேன், உழைக்கப் போகிறேன் என்று வெளிக்கிட்டாள்.

வித்தியா வேலைக்குப் போனதற்குப் பிறகு குடித்தனத்துக்குத் தேவையானது எல்லாமும்தான் தாராள





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாய் கிடைக்கிறது என்றாலும் ஒவ்வொரு நாளும் நெஞ்சைப் பிடித்தபடி தான் வாழ்க்கை போகின்றது. இப்போது நான் ஏதும் ஏடகூடமாய்ச் சொல்லி, எங்கே வித்தியா வேலைக் குப் போகாமல் விட்டுவிடுவாளோ! படக்கென்று பயம் வந்து ஒட்டிக் கொண்டது. ஆனாலும் என் பொன்னத் தனத்தை நினைத்து மனசு கருகியது. வீட்டுக் குமர்ப்பிள்ளையை வேலைக்கு அனுப்பிச் சாப்பிடும் எனக்கு ஏன் அவளிடம் இந்த வேண்டாத கேள்வியெல்லாம். பொருமிக்கொண்டு மீண்டும் யன்னல் பக்கமாய் வீல்ச்செயாரை உருட்டினேன். தூரத்தில் கடல் தெரிந்தது. உயரமாய் எழுந்து கரையில் மடியும் மார்சா அலைகள். திரும்பிப் பார்த்தேன். வித்தியா வாசல் தாண்டிப் போயிருந்தாள்.

இப்போது இந்தத் தெருவில் இருந்தே ஐந்தாறு பெண் பிள்ளைகள் வித்தியாவைப் போன்று வேலைக்குப் போகத் தொடங்கியிருந்தார்கள். கடற்கரையில் புதிதாகக் கட்டியிருந்த ஸ்டார் ஹோட்டலில்தான் வேலையாம். நடைமாறி உடைமாறி ஒரு தினுசாகத்தான் எல்லாம் தெரிகின்றது. வழக்கத்துக்கு மாறாகப் பின்னேரம் நான்கு மணிக்கெல்லாம் வீட்டுக்குள் நுழைந்த வித்தியா கைப்பையைக் கட்டிலில் வீசியெறிந்து விட்டு படபடவெனப் பொரிந்தாள்.

அவள் கோபத்துக்கு காரணம் என்னவென்று தெரியவில்லை. வீட்டுக்குப் பின்னால் கிணற்றடிக்கு முகம் கழுவவென்று வந்தவள், வேலியைத் தாண்டி பக்கத்து வீட்டு அனுஜா வைக் கூப்பிட்டாள். வந்த அனுஜாவின் முகமும் உற்சாகமிழந்துதான் இருந்தது.

“கோல் கிடைச்சுதா?''

“இல்லையே.''

“இப்ப... கேர்ள்சுக்கு கோலிங் வாறது குறைவு பார்த்தியா?''

“ஓம்... வெள்ளக்காரன்களுக்கு சின்னப்பொடியன்கள் வேணுமாம்...”

வித்தியாவுக்கு தன் தம்பி அனந்துவை நினைக்கப் பயமாக இருந்தது. மறுபடியும் வீட்டுக்குள் வந்தவள் தம்பியைத் தேடினாள். நான் பொறுக்காமல் கேட்டேன்.

“யாரைத் தேடுறாய்?''

“இவன் தம்பி எங்க?''

“அவனும் உன்னப் போலத்தான். இங்க எங்க நிக்கிறான். ஊர் சுத்து றான்.”

சினந்து என்னைப் பார்த்தவள், என்ன நினைத்தாளோ அவசரமாய் வெளிக்கிட்டு வெளியே போனாள். அவள் போகிறதைப் பார்த்து என் வீல்செயாரும் தலைவாசலுக்கு உருண்டது. வெளியில் தெருவில் யாரோ பேசிக் கொண்டு போவது கேட்டது.

“சின்னப் பொடியன்கள் நாலு பேர பொலிஸ் பிடிச்சுக்கிண்டு போகுது.”

“ஏனாம்??

“யாரோ ஒரு பயலுக்கு எய்ட்சாம்.”

எனக்குத் ‘திகீர’ என்று இருக்க சடுதியாக நெஞ்சு வலித்தது.



# சன்மானம்

- அ.முத்துலிங்கம்

கடந்த வாரம் ஒருநாள் நான் வழக்கம் போல கீழ் அறையில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தேன். மனைவி மேலே தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென்று மேலேயிருந்து சத்தம் வந்தது. அப்படிக் கத்தினால் இரண்டு காரணம்தான் இருக்கும். ஒன்று, சுடுதண்ணீர் பானையைக் காலிலே போட்டு விட்டார். இரண்டு, 649 லொத்தரில் 10 மில்லியன் டொலர் விழுந்து விட்டது. இரண்டையும் சமாளிக்கும் தைரியத்தை மனதில் உண்டாக்கிக் கொண்டே மேலே ஓடினேன். தொலைக்காட்சியில் பிரபல எழுத்தாளர் திரு.வெங்கட்சாமிநாதனின் உருவம் தெரிந்தது. ஒரு நிகழ்ச்சியில் இவர் நிபுணராக அழைக்கப்பட்டு கருத்துச் சொல்லிக் கொண்டிருந்தார்.

என்னுடைய மனைவிக்கு வெங்கட்சாமிநாதன் என்றால் மிகப் பெரிய ஆதர்சம். அவருடைய ஒரு புத்தகத்தையும் படித்தது கிடையாது. இது வேறுவிதமான மரியாதை. ரொறொன்ரோவில் எங்கள் வீட்டுக்கு அவர் மூன்று தடவை வந்து மனைவி சமைத்த உணவை உண்டிருக்கிறார். புத்தகங்களை எப்படி வெ.சா. கறாராக விமர்சிப்பாரோ அப்படியே கறாராக சாப்பிடும் உணவையும் விமர்சிப்பார். மூன்றாவது நாள் சாப்பிட்ட பிறகு என் மனைவியின் ரசத்தை புகழ்ந்து தள்ளிவிட்டார். நான் அது சொதி என்று நினைத்திருந்தேன். அன்றிலிருந்து மனைவிக்கு அவரிடம் பெருமதிப்பு ஏற்பட்டிருந்தது. தொலைக்காட்சியில் அவரைப் பார்த்து அப்படி அலறியதற்கு அதுதான் காரணம்.

நானும் தொலைக்காட்சியில் மீதி நிகழ்ச்சியையும் பார்த்துவிட்டு வெ.சாவுக்கு அவரைப் பாராட்டி ஒரு கடிதம் எழுதினேன். அவருடைய பதில் மின்னஞ்சலில் மறுநாளே வந்தது. ‘அவர்களாகவே அழைத்தார்கள். காரிலே வந்து கூட்டிப் போனார்கள். திரும்பவும் காரிலே வீட்டுக்கு அனுப்பி வைத்தார்கள். ஆனால் சன்மானம் ஒன்றுமே தரவில்லை.’ நான் அவருக்கு ஆறுதல் சொல்லி பதில் எழுதினாலும் என் மனம் இதையே சிந்தித்தபடி இருந்தது. நான் 19வது வயதில் எழுதத் தொடங்கினேன். எப்படியானாலும் பிரசுரமானால் போதும். சன்மானமே தேவையில்லை என்றுதான் அந்தக் காலத்தில் நினைப்பு இருந்தது. தினகரனில் வெளிவந்த என்னுடைய சிறுகதைக்குச் சன்மானமாக பத்து ரூபாவுக்கு காசோலை வந்ததும் திகைத்துப்போய் நின்றது நினைவுக்கு வருகிறது. எத்தனை பெரிய காசு அது. அன்றிலிருந்து இன்றுவரை சிறுகதைகள், கட்டுரைகள், நாடகங்கள், நேர் காணல்கள், மொழிபெயர்ப்புகள், நாவல் என்று எழுதியாகி விட்டது. சன்மானம் என்று பார்த்தால் ஒரு பத்து வீதம் எழுத்துக்குக் கூட அது கிடைத்தது என்று சொல்ல முடியாது. சமீபத்தில் என்னுடைய மகன் எழுதிய கட்டுரை ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் பிரசுரமாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்குச் சன்மானமாக ஒரு தொகை கிடைத்தது. எவ்வளவு என்று கேட்டேன். சொன்னான். நான் 19 வயதில் இருந்து இன்றுவரை எழுதி எனக்கு கிடைத்த சன் மானத்தின் கூட்டுத்தொகையிலும் பார்க்க மகனுக்கு ஒரு கட்டுரையில் கிடைத்த பணம் அதிகமாக இருந்தது.

நியூ யோர்க்கர் பத்திரிகை மிகப் பெரியது. அதிலே ஒரு சிறுகதை எழுதுபவருக்கு 5000 டொலர் கிடைக்கும். ஓர் எழுத் தாளருக்கு அது எத்தனை பெரிய சன் மானம். அதேசமயம் ஆங்கில சிறு பத்திரி கைகள் ஒவ்வொரு எழுத்தாளருக்கும் சன் மானம் வழங்குகிறது. ஆனால் அது நியூ யோர்க்கர் போல பெரிதாக இருக்காது. பத்திரிகையின் நிதி நிலைமைக்கு தக்க மாதிரி சன்மானம் அமைந்திருக்கும். ஆனால் இலவசமாக ஒரு படைப்பை எழுத் தாளரிடம் இருந்து பெறும் வழக்கம் கிடை யாது. தமிழில் இது எப்படியோ வழக்கமாகி விட்டது. மரவேலை செய்பவருக்கு கூலி கிடைக்கிறது, வண்ணம் பூசுபவருக்கு பணம் கிடைக்கிறது, ரோட்டு வேலைக் காரருக்குக்கூட சம்பளம் என்று ஒன்று கொடுக்கிறார்கள். ஆனால் எழுத்தாளர் மட்டும் இலவசமாக எழுதித் தரவேண்டும் என்று எதிர்பார்ப்பது தொடர்கிறது.

சில காலத்துக்கு முன்னர் ஓர் ஓவியர் எனக்கு அறிமுகமானார். என்னுடைய சிறு கதைகளைத் தான் படித்திருப்பதாகக் கூறினார். எப்படி, எங்கே படித்தீர்கள் என்று ஆவலோடு கேட்டு மகிழ்ச்சிப்படுவதற்குத் தயாரானேன். அவர் பதில் சொல்லாமல் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். 'ஏன் உங்களுக்குத் தெரியாதா? உங்கள் சிறு கதைகளுக்கு ஓவியம் வரைந்திருக்கிறேன்' என்றார். 'அப்படியா? உங்கள் படங்களுக்கு சன்மானம் கிடைத்ததா?' என்று கேட் டேன். அவர் இல்லை என்று சொல்வார். அவருடன் சேர்ந்து துக்கம் கொண்டாட லாம் என நினைத்தேன். அவர் ஆர்வம் குறையாமல் கிடைக்கிறதே என்று சொன் னதுடன் எவ்வளவு என்றும் சொன்னார். என்னுடைய எந்தச் சிறுகதைக்கும் அப்படி யொரு தொகை கிடைத்ததில்லை. எனக் குப் பெரும் அதிர்ச்சியாகி விட்டது. எழுது வதை விட்டுவிட்டு இனிமேல் படம் வரைய ஆரம்பித்தால் என்னவென்று என்னைத் தீவிரமாக யோசிக்க வைத்தது. அது எப்படி எழுதியவருக்கு ஒன்றுமில்லை. ஆனால் அந்தச் சிறுகதைக்கு படம் வரைந்தவருக்கு சன்மானம் கொடுக்கிறார்கள் என்பது புரி யாத மர்மமாகவே ஆகிவிட்டது. நான் அவர் குறிப்பிட்ட சிறுகதையை இரண்டு வாரங் களாக எழுதினேன். ஏறக்குறைய 40 மணித்தியாலங்கள். இதற்கு படம் வரைவ தற்கு ஓவியருக்கு நாலு மணித்தியாலங்கள் தேவைப்பட்டிருக்கும். இருந்தும் ஓவிய ருக்கு நல்ல சன்மானம் வழங்கப்பட்டது. பத்து மடங்கு அதிக நேரம் உழைத்திருந்த ஆசிரியருக்கு ஒன்றுமே கிடையாது.

இங்கிலாந்தில் 1812ஆம் வருடம் சார்ல்ஸ் டிக்கின்ஸ் பிறந்தபோது ஆங்கி லத்தில் 66 நாவல்களே இருந்தன. அந்தக் காலத்தில் நாவல்கள் எழுதுவது மரியாதை யான தொழிலாகப் பார்க்கப்படவில்லை. சார்ல்ஸ் டிக்கின்ஸ் 1870இல் இறந்தபோது நாவல் இலக்கியத்தைப் பற்றிய உலகப் பார்வை மாறிவிட்டது. நாவலைத் தொடராக எழுதி பிரபலமாக்கியது சார்ல்ஸ் டிக்கின்ஸ் தான். அவருடைய மூளையில்தான் அவர் எழுதும் கதைகளுக்குச் சித்திரம் வரைந்து



பிரசுரித்தால் வாசகர்களிடம் நல்ல வர வேற்பு கிடைக்கும் என்று தோன்றியது. அந் தக் காலத்தில் நல்ல சித்திரங்கள் வரை பவர் என்று பெயரெடுத்த Samuel Luke Fildes என்பவரை அணுகி தன்னுடைய சிறுகதைகளுக்கு சித்திரம் வரையக் கேட் டுக்கொண்டார். இருவரும் கலந்தாலோ சித்து எப்படி சித்திரங்கள் அமைய வேண் டும் என்பதை முடிவு செய்வார்கள். அப் படியே கதையுடன் சித்திரமும் வெளிவரும். ஒலிவர் ட்விஸ்ட் நாவலுக்கு சித்திரம் வரைந்தது George Cruikshank என்பவர். சார்ல்ஸ் டிக்கின்ஸ் இறந்த பிறகுதான் ஒலிவர் ட்விஸ்ட் நாவலுக்கு கரு கொடுத்து எழுத வைத்தவர் என்று அவர் அதற்கு உரிமை கோரினார் என்பது வேறு விசயம்.

இப்படி ஆரம்பித்துத்தான் சிறுகதை களுக்கு படம் வரையும் மரபு ஏற்பட்டது. இப் பொழுது ஆங்கிலத்தில் சிறுவர் கதைகளுக் குத்தான் படங்கள் வரையப்படுகின்றன. பெரியவர்கள் கதைகளுக்கு படம் வரைவ தில்லை. ஆனால் புகைப்படங்கள் வெளி யாவதுண்டு. ஏனோ இந்த மரபு இன்றும் தமிழ் பத்திரிகைகளில் தொடர்கிறது. ஒரு முறை பத்திரிகாசிரியரிடம் பேசிய போது 'ஏன் சிறுகதைகளுக்கு படம் போடுகிறீர் கள்?' என்று கேட்டேன். அவர் கையி லிருந்த செல்பேசியால் பல்லைத் தட்டிக் கொண்டு சொன்னார், 'படங்களை பார்த்து வாசகர்கள் ஈர்க்கப்பட்டு சிறுகதைகளைப் படிக்கிறார்கள்' என்று. ஒரு படத்தைப் பார்த்து வாசகர்களைக் கவரும் விதமாகத் தான் தற்போதைய சிறுகதைகள் இருக் கின்றன என்று நினைத்துக் கொண்டேன். ஓவியர்களை உற்சாகப்படுத்த வேண்டும். ஊக்கம் கொடுத்து அவர்கள் சித்திரங்கள் பல வாசகர்களைச் சென்றடைய வேண் டும். அவர்கள் பொதுவான படங்கள் வரைந்து கொடுக்கலாம். அவற்றைப் பத்தி ரிகைகள் வெளியிடலாம். ஆனால் எதற் காக அவர்கள் சிறுகதைகளுக்கு படம் வரைகிறார்கள். அதனால் அவர்களும் சிறுமைப்பட்டு சிறுகதை ஆசிரியர்களும் சிறுமைப்படுகிறார்கள்.

நான் ஒரு சிறுகதை எழுதி அது பத்திரிகையில் பிரசுரமானால் அதன் தலைப்பைப் பார்த்துவிட்டு என் சிறுகதை யைப் படிக்க ஆரம்பிக்கலாம். அல்லது என் னுடைய பெயரைத் தெரிந்துகொண்டு சிறு கதைக்குள் நுழையலாம். அல்லது சிறு கதையின் பத்து வசனங்களைப் படித்து விட்டு அந்தச் சிறுகதையை படிப்பதா விடு வதா என்பதைத் தீர்மானிக்கலாம். ஒரு படத்தைப் பார்த்து சிறுகதையை வாசிக்க முடிவெடுப்பது என்பது ஓர் எழுத்தாளருக்கு எத்தனை அவமானம். அதிலும் பார்க்க கூடிய அவமானம் சித்திரம் வரைந்த வருக்கு சன்மானம் கொடுத்து எழுத் தாளரை கவனிக்காமல் இருப்பது.

ஒருமுறை என்னுடைய கதை ஒன் றுக்கு சித்திரம் வரைந்திருந்தார்கள். அதிலே ஒரு பெண் உட்கார்ந்து தலை யிலே சீப்பை வைத்து சீவிக்கொண்டிருந் தார். அந்தக் கையில் எந்த இடத்திலும் ஒரு பெண் தலைமுடி சீவவில்லை. ஒருவேளை கதை ஆரம்பிக்க முன்னர் சீவியிருப்பார். அல்லது முடிந்த பின்னர் சீவியிருப்பார். இந்தப் பெண்ணுக்கும் சிறுகதைக்கும் என்ன சம்பந்தம்? வேறு ஏதோ சிறுகதைக் குக் கீறிய படம் என்னுடைய சிறுகதைக்கு தவறாக வந்திருக்கலாம். அல்லது பொது வான சில சித்திரங்களை வரைந்து வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வப்போது அவற்றைப் பயன்படுத்துகிறார்களோ தெரியவில்லை. ஒரு வாசகர் படத்தைப் பார்த்துவிட்டு சிறுகதையைப் படிக்காமல் போவதையும் நான் கவனித்திருக்கிறேன். இந்த நிலையில் ஒரு சிறு கதைக்குப் படம் போடுவதில் பெரிய பயன் எதுவும் இருப்பதாக எனக்குப்படவில்லை.

சங்க நூல்களில் என்னை மிகவும் ஆச்சரியப்படுத்தியது ஆற்றுப்படை இலக்கியம்தான். உலகத்தில் வேறு எந்த இலக்கியத்திலாவது இப்படியான படைப்புகள் இருக்கின்றனவா என்று விசாரித்ததில் இல்லையென்றே சொல்கிறார்கள். ஒரு பாணன் அரசனைத் தேடி வருகிறான். பாடிப் பரிசு பெற்றுத் திரும்பும்போது இன்னொரு பாணனைப் பார்க்கிறான். அவனை அவன் ஆற்றுப்படுத்துகிறான். இன்னமாதிரி ஓர் ஊரில் இன்னமாதிரி ஓர் அரசன் இருக்கிறான். அவனிடம் பாடிப் பரிசு பெற்றுக் கொண்டு நான் திரும்புகிறேன். நீயும் அவ்வாறே போய்ப் பாடிப் பரிசு பெறலாம் என்று அவனுக்கு எப்படி அந்த ஊருக்குப் போவது என்று வழி சொல்கிறான். அந்தக் காலத்தில் வரைபடமோ, திசைப் பலகைகளோ, GPSX என்பதோ கிடையாது. இப்படி யாராவது வழி சொன்னால்தான் உண்டு. இந்தப் புலவர் போய்ப் பாடிப் பரிசு பெறுவார். பின்னர் அவர் திரும்பும்போது இன்னொரு புலவருக்குச் சொல்வார். அவர் போய் பாடி பரிசு பெறுவார். எறும்புகள் உணவு கண்டதும் ஒன்றுக்கு ஒன்று செய்தி பரிமாறி எல்லா எறும்புகளும் அந்தத் திசையில் படை எடுப்பது போல புலவர்களும் புறப்படுவர்.

இதிலே ஒரு ரகஸ்யம் இருக்கிறது. அனைத்து அரசர்களும் தேரும், யானையும், பொன்னும், மணியும் கொடுத்துப் புலவர்களை வழியனுப்புவதில்லை. புறநானூற்றில் ஓர் அருமையான பாடல் உள்ளது. பெருங்குன்றூர் கிழார் வயிறு எரிந்து பாடியது. ஒன்றும் இல்லை என்று அரசன் சொன்னால் புலவர் திரும்பியிருப்பார். அப்படிச் சொல்லவில்லை. பரிசு வருகிறது வருகிறது என்று நம்பிக்கையூட்டியதில், புலவர் பலநாள் வாசலில் நின்று களைத்து வெறுங் கையோடு வீடு திரும்புகிறார். 'நீ பெரிய வள்ளல் என்று நினைத்து உன்னிடம் வந்தேன். தருவாய் தருவாய் என நினைத்துக் காத்திருந்தேன். வீட்டிலே ஒன்றுமில்லை. பசியோடு மனைவியும் என் குழந்தையும் காத்திருக்கிறார்கள். நான் திரும்புகிறேன். நீ வாழ்க.' ஈயாத பல அரசர்கள் இருந்ததால் ஓர் அரசன் தந்தவுடன் புலவர்கள் அவனை ஒருவருக்கொருவர் அடையாளம் காட்டுவது அவசியமாகிறது. அவர்களும் போய் பாடிப் பரிசு பெறுகிறார்கள். இந்தக் காலத்தைப் போல அந்தக் காலத்திலும் சன்மானம் கொடுக்காமல் அலைக்கழித்த அரசர்கள் பலர் இருந்தார்கள்.

ஆங்கிலத்தில், சார்ல்ஸ் டிக்கின்ஸ் காலத்தில், ஒரு புத்தகத்துக்கு இவ்வளவு என்று பதிப்பாளர் முன்கூட்டியே பணம் கொடுத்து விடுவார். புத்தகங்கள் வெளியிட்டு காசு பார்ப்பது சிரமமான காரியம். ஆனால் சார்ல்ஸ் டிக்கின்ஸ் ஆரம்பத்தில் இருந்தே எழுத்துக்கு சன்மானம் வாங்கும் விசயத்தில் எச்சரிக்கையாக நடந்து கொண்டார். அவரிடம் அப்போதெல்லாம் பணம் இல்லை. அவர் Pickwick நாவலை பத்திரிகையில் தொடராக ஒவ்வொரு மாதமும் ஒன்றரைப் பக்கம் எழுதினார். அதற்கு 15



கினிக்கள் சன்மானம் என்பது ஒப்பந்தம். தொடக்கத்தில் திருமணம் செய்துகொள்வதற்குப் பணம் தேவைப்பட்டதால் இரண்டு மாத சன்மானத்தை முன்பணமாகப் பெற்றுக்கொண்டார். இப்படி பணக் கஷ்டத்தில் ஆரம்பித்த அவர் வாழ்க்கையில் போகப் போக செல்வம் கொட்ட ஆரம்பித்தது. ஒவ்வொரு எழுத்துக்கும் கறாராக பணம் அறவிடத் தயங்கவில்லை. ஓர் ஆங்கில எழுத்தாளர் வாழும்போதே அத்தனைப் பணக்காரர் ஆனதில்லை. இறந்தபோது அவரது சொத்து மதிப்பு 90,000 பவுண்டுகள். இன்றைய மதிப்பில் 10 மில்லியன் டொலர்கள்.

இப்படித் தமிழில் எழுதி பணம் சம்பாதித்தவர்கள் யாருமில்லை. பாரதியும் புதுமைப்பித்தனும் அனுபவித்த வறுமை எல்லோருக்கும் தெரியும். கடந்த 50 வருடங்களில் ஒரு சிலர் தமிழில் எழுத்துக்கு நல்ல ஊதியம் பெறும் நிலை வந்திருக்கிறது. ஆனால் அது விதிவிலக்கு. அவர்கள் அடுத்தவரை ஆற்றுப்படுத்தவில்லை. பெரும்பாலான எழுத்தாளர்கள் மதிக்கப்படவில்லை என்பதுதான் உண்மை. அவர்களுக்குத் தகுந்த சன்மானமும் கிடைக்கவில்லை. சங்ககாலப் புலவரைப் போல பலருக்கு வாசலில் நின்று வெறுங் கையோடு திரும்பிப் போகும் அவலம்தான் இன்றைக்கும்.

வட அமெரிக்க தொலைக்காட்சிகளில் அடிக்கடி காணப்படும் எழுத்தாளர் ஒருவரை தொலைபேசியில் அழைத்துக் கேட்டேன், 'அவருக்கு ஏதாவது சன்மானம் கிடைக்கிறதா?' என்று. அவர் சொன்ன பதில் எனக்கு முற்றிலும் புதிதாக இருந்தது. அவருடைய நேர்காணல்கள் பல சானல்களில் வந்திருக்கின்றன. நிபுணராகவும் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார். செய்தி சானல்களில் அவரை யாராவது பேட்டி கண்டால் அதற்கு சன்மானம் கிடைக்காது. அது செய்தி சம்பந்தமானது, சன்மானம் கொடுத்தால் செய்தியின் தன்மை மாறிப்போய்விட வாய்ப்பிருக்கிறது. ஆனால் நிபுணராகவோ வேறு விதமாகவோ பங்கு பற்றினால் அதற்கு சன்மானம் உண்டு.

அப்படிப் பார்த்தால் எழுத்தாளர் வெ.சா. ஒரு நிபுணராகத் தொலைக் காட்சியில் பங்கேற்று ஐந்து நிமிடம் பேசியிருக்கிறார். இந்தத் தொலைக்காட்சி நிறுவனம் 10 செக்கண்ட் விளம்பரத்துக்கு 30,000 ரூபா அறவிடுகிறது என்று சொல்கிறார்கள். அப்படியானால் வெ.சா.வின் 5 நிமிடத்துக்கு அவர்கள் ஊதியமாகத் தரவேண்டிய தொகை ரூபா 900,000. இதை அவர்கள் தரப்போகிறார்களா?

'உங்களால் எங்களுக்கு 5 நிமிடம் வீணாகி விட்டது. அந்த நேரத்துக்கு நாங்கள் விளம்பரமாக ரூபா 900,000 சம்பாதித்திருப்போம். அது நட்டமாகி விட்டது. அதை நீங்கள் தரவேண்டும்' என்று நிறுவனத்தினர் பெருந்தன்மையுடன் வெ.சா.விடம் கேட்காமல் இருப்பதற்கு மகிழ வேண்டும்.

**நன்றி : கொழும்பு தமிழ்ச்சங்கம் நடாத்திய உலகத் தமிழ் இலக்கிய மாநாட்டில் வெளியிடப்பட்ட பூவல் சிறப்பு மலர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணம் :




# மல்லிகையின் முதலாவது இதழின் தலையங்கம் (ஆகஸ்ட் 15 - 1966)

## வணக்கம்

மல்லிகையின் முதல் இதழ்தான் இது. இந்தச் சஞ்சிகைக்கு 'மல்லிகை' என்ற நாமகரணம் சூட்டப் பட்டதே ஒரு தனிக்கதை; சுவாரஸ்யமான வரலாறு.

ஒரு நண்பர் 'இதயம்' எனப் பெயர் வைக்கலாம் என்றார். இன்னொருவர் 'கமலம்' எனப் பெயர் சூட்டலாம் என்றார். வேறொருவர் 'மலர்' என்று வைக்கலாமென முகமலர்ச்சியுடன் சொன்னார். சற்றுத் தீவிரவாதியான பிறிதோர் அன்பர் 'செந் தாரகை' என அழைக்கலாமே என அபிப்பிராயப் பட்டார். முடிவில் 'கலைஞன்' என்று பெயர் சூட்டப்பட்டு அதற்குரிய ஆரம்ப ஆயத்த வேலைகள் செய்யப்பட்டு வந்தன. சம்பந்தப்பட்டவர்களுக்கு இப்பெயரில் அவ்வளவு அபிமானம் இல்லை. சிலர் அங்கீகரிக்கவுமில்லை. மீண்டும் ஆலோசனையும், கலந்துரையாடலும்.

முடிவில் ஏகோபித்த முடிவு காணப்பட்டது. அந்த ஏகமனதான முடிவின் நாமகரணம்தான் 'மல்லிகை'.

மிக நுட்பமான கருத்தோ அல்லது அற்புதமான கலையோ தமக்குத் தாமே நுட்பமாகவோ அல்லது அற்புதமாகவோ இருந்து விடுவதால் மாத்திரம் அவை சிறந்து விளங்குவதில்லை; உயர்ந்ததாக ஆகவிடுவதுமில்லை.

அவைகளை மக்கள் எவ்வளவு விரும்புகிறார்களோ, அவர்களது வாழ்க்கையைச் செம்மைப்படுத்த கலையும் கருத்தும் எவ்வளவு உதவுகின்றனவோ அந்தக் கலையும் கருத்துமே நீண்டகாலம் வாழும். அதுவே பின்னர் மக்கள் கலைகளாக மலரும், இதுவே எங்களது நம்பிக்கை.


மிக எளிமையாகவும், தூய்மையாகவும் அதேசமயம் மங்களகரமான முக்கிய நிகழ்ச்சிகளில் முதலிடம் பெறும் மல்லிகை மலரைப் போலவே அமைப்பில் மிக எளிமையாகவும், கருத்தில் தூய்மையாகவும் அதேநேரம் மக்களின் வாழ்க்கைப் பாதையில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களில் தோளோடு தோள் சேர்த்து நிற்கும்



நண்பனைப் போன்று ஏதோ ஒரு வகையில் பயன்படக் கூடியதுமான அம்சங்களைத் தன்னகத்தே கொண்டு மலர இருப்பது மல்லிகை.

ஆடம்பரமான வார்த்தைகளினால் சொல்லப்படும் எந்த வாக்குறுதிகளுமே இதயத்திலிருந்து வெளியிடப்படுபவையல்ல.

மல்லிகையின் கருத்தே உங்களது கருத்தானால் அதுவே போதும்.




# இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் சஞ்சிகையான 'புதுமை இலக்கிய'த்தில் எஸ்.ராமகிருஷ்ணன் எழுதிய கட்டுரைக் குறிப்பு. 1962 - பெப்பரவரி

## எழுத்தாளனின் சமுதாயத் தன்மை

எழுத்தாளன் மேக மண்டலத்தில் சஞ்சரிக்கும் அதீத கற்பனைவாதியாகவோ, பூமியிலேயே கட்டுண்டு கிடக்கும் மொட்டையான யதார்த்தவாதியாகவோ இருக்கக் கூடாது. நல்லறங்களது அச்சுப் பாத்திரங் களைப் படைத்து நடமாட விடும் பாவைக் கூத்துச் சூத்திரதாரியாகவும் இருக்கக் கூடாது. எழுத்தாளனின் மனோபாவனை சமுதாய வாழ்வில் வேரூன்றிச் செயல்படத் தயாராயிருக்க வேண்டும்.

தனிமனித உண்மை (Face) வேறு. முழு யதார்த்தம், சத்தியம் (Truth) வேறு.

எழுத்தாளன் வாழ்வை முழுமையாக அறிய முற்படல் வேண்டும். வாழ்வின் மாறுதல் விதிகளை அறிய வேண்டும். சமுதாயத்தில் சில அம்சங்கள் தேற்வுற்று அழிவதையும், சில அம்சங்கள் வளர்வதையும் பற்றி விஞ்ஞான ரீதியான அறிவைப் பெறவேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தைப் பற்றிய தெளிவுடன் லட்சிய ஒளி வீசும் மனோபாவனையைப் பெறமுடியும். அவன்தான் சோஷலிஸ்ட் யதார்த்தவாதி.

உலகப் புகழ்பெற்ற நவீனங்களில் அதீத கற்பனைவாதிகளால் எழுதப்பட்டவை உள்ளன. அந்த இலக்கிய கர்த்தாக்கள் மகத்தான தார்மீக லட்சியங்களால் உந்தப் பட்டவர்கள். சிறகு கட்டிப் பறந்தார்கள். ஆனால் அவர்களது படைப்புக்களில் சரித்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையின் சாரம் இடம்பெறவில்லை.

பிரசித்தி பெற்ற யதார்த்தவாத நாவலாசிரியர்கள் மக்களின் துன்ப துயரங்களை, இன்மையால் வடிக்கும் கண்ணீரை, போரால் வடிக்கும் செந்நீரை, அச்சமும் அவலமும், சினமும், செருக்கும், பொறாமையும், பொல்லாங்கும் மக்களைப் படுத்தி வைக்கும் பாட்டைச் சித்தரித்துப் புகழ் பெற்றுள்ளனர். ஆனால் எதிர்காலத்தைக் குறித்து நம்பிக்கை ஒளி வீசி மக்களைச் செயலுக்குத் தூண்டுவனவாக அவர்கள் இயற்றிய நாவல்கள் அமையவில்லை.

சோஷலிஸ்ட் யதார்த்தவாதம் சமுதாய உண்மையை அடிச்சரடாகக் கொண்டிருக்க வேண்டும். அதே பொழுதில், கம்பீரமான கனவை நனவாக்குவதற்காக மகோன்னதமான பணி புரிய மக்களின் உள்ளத்தைக் கிளர்ந்தெழச் செய்கிறது. தார்மீக இலட்சியமும், யதார்த்த உண்மையும் இணைபிரியா இரட்டையராக ஐக்கியப்படல் வேண்டும்.

இலக்கியம் வாழ்வின் அழகை உணர்த்தும் நுண்கலை என்பர். அது உரிய இடங்களில் இயற்கையின் எழிலைச் சுவையுடன் சித்தரிப்பதுடன் கதைப் பொருளை விண்டு காட்டுவதிலும், பாத்திரங்களைப் படைத்துக் காட்டும் தன்மையிலும் தான் வெற்றிக்கு அடிகோல முடியும். மனிதப் பண்புகளே உயிர்ப் பாத்திரங்களின் மூலம் தம் உள்ளத்தைப் பிணிக்கின்றன. எனவே தான், பெருமைசால் நவீனங்கள் மனிதப் பண்புக்கு உரியனவாக உள்ளன. அன்னையின் பெயர் புனிதமானதென்றும், சகோதரப் பாசம் சிறப்பானதென்றும், சிநேகதர்மம் மனிதனுக்கு உயர்வு தருகிறதென்றும், தூய காதல் எழில் மிக்கதென்றும் நாம் அறிவோம். அவற்றுடன் நாட்டுப் பற்றும், பொதுநலத் தொண்டும், விவேகத்தின் பாற்பட்ட வீரமும், சமாதான வேட்கையும், சர்வதேச சௌஜன்ய நாட்டமும் உன்னதமான மனிதப் பண்புகளாகத் திகழ்கின்றன.

கதை - மனிதாபிமானக் கண் கொண்டு மக்களது கஷ்டங்களைக் கண்டு கண்ணீர் வடிப்பதுடன், தீமைகளைக் கண்டு தார்மீகக் கண்டனம் செய்வதுடன் ஒடுங்கி விடவில்லை. சமுதாய முன்னேற்றத்தைச் சாதிக்கும் வகையில் பாடுபடும் மக்களைத் திரட்டும் இலக்கியப் பிரகடனமாகவும் இது விளங்க வேண்டும். கெட்டதை அழிக்காமல் நல்லது நிலைகொள்ள முடியாது என்ற கருத்து கதையில் புனைந்து கிடக்க வேண்டும்.

**நிகழ்வின் அவதானங்களுக்கு எழுத விரும்புகின்றவர்கள், நிகழ்வுகள் பற்றியும், அதில் கலந்துகொண்டு சிறப்பித்த பார்வையாளர்கள் மூன்று பேரின் கருத்துக்களையும் பெற்று அனுப்பி வைக்கவும்.**



குறுங்கதை

# குடமுழுக்கு!

- வேல் அமுதன்

அடுத்த வீட்டில் பழைய பத்திரிகைகள் கொள்முதல் செய்து கொண்டு இருந்த அந்தப் பாட்டாளியைக் கண்ட பேரம்பலம், "உது முடிந்த கையோடு எங்கடை வீட்டுப் பக்கமும் ஒருக்கா வந்திட்டுப் போ!" எனச் சொல்லி, தனது பங்களாவிற்குச் சென்றார்.

பாட்டாளி தனது பங்களாவுக்கு வரமுன்பே, பழைய பேப்பர்களை அள்ளி வந்த பேரம்பலம், அவன் வந்ததும் இரண்டு குவியல்களைக் காண்பித்தார். "இது நம்பர் வன். புத்தம் புதுப் பேப்பர். மற்றது நம்பர் ரூ. நம்பர் வன்னுக்கு எவ்வளவு தருவாய்?" - விசாரித்தார்.

"கிழியல், துண்டுப் பேப்பருக்கு டிமான்ட் இல்லை, ஐயா. இது எங்களுக்குத் தேவையும் இல்லை. நீங்க கேட்டதற்காக நம்பர் ரூவுக்கு பத்து ரூபா தரலாம். நீங்க நல்ல பேப்பர் எண்டது கிலோ பத்து ரூபா ஐயா!"

"என்ன ஆகக் குறைச்சுச் சொல்லுறாய்?"

"ஓம், ஐயா. இப்ப சாப்பாட்டுப் பார்சலை நியூஸ் பேப்பரிலை கட்டப் படாதாம். சுத்தமான வெள்ளைக் கடுதாசிலை கட்டச் சொல்லி இருக்கு. அதாலை பழைய பேப்பர் மார்க்கேற் சரிஞ்சு போச்சு."

"சரி... சரி... அப்ப எவ்வளவு தருவாய்?"

"நாங்க வாங்கிற விலை பத்து ரூபாதான் ஐயா. அடுத்த வீட்டிலும் அந்த விலைக்குத்தான் வாங்கினனான்."

"பதினைஞ்சு ரூபாப்படி எடப்பா."

"ஐயா, வீடு வீடாக நாங்க அலைகிறதிற்கு ரண்டு ரூபாதான் தேறும். பத்து ரூபாப்படி எடுக்கிறன்."

"பேப்பர் கிடக்கட்டும். நீ பதினைஞ்சுப்படி எடுப்பாய் எண்டால் வா. தாரன்."

‡ ‡ ‡

நீண்ட காலமாகக் குடமுழுக்கு செய்யப்படாத அப்பிரதேச முருகன் கோவிலுக்கு அப்போது திருத்தல் வேலை முடிந்து - கவர்ச்சிகரமாகப் பெயின்ற் அடித்து, தென்னிந்தியாவில் இருந்து இசை வாத்தியக் கலைஞர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவழைத்து கோலாகலமாகக் குட முழுக்கு நடைபெற்றுக்கொண்டு இருந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை. வித்துவான்களின் தவிற் கச்சேரியும் நிகழவிருப்பதாக அறிவிக்கப்பட்டு இருந்தது.

சனங்களோடு சனமாக அள்ளுப் பட்டு, பழைய பத்திரிகை கொள் முதல் செய்யும் அந்த பாட்டாளியும் தனது குடும்பத்தினரோடு அக்கோவி லுக்குப் போயிருந்தான். அந்நேரம் தெற்பை போட்ட உபயக்காரர் முன் னிலையிற் புரோகிதர் ஆராதனை பக்தி சிரத்தையோடு நடைபெற்றுக் கொண்டு இருந்தது.

'உபயக்காரர் பெரிய சீமான். பன்னிரண்டு லட்சம் ரூபா செல வழித்து, குடமுழுக்கை அவரே செய் விக்கிறார்' என்ற கதை எழுப்பமாகப் பேசப்பட்டது.

பழைய பேப்பர் கொள்முதல் செய்யும் பாட்டாளி உன்னிப்பாக உபயகாரரைப் பார்த்தார். அவனுக்கு நாடி விழுந்தது! உபயகாரர் வேறு ஆருமல்ல; பழைய பேப்பருக்குப் பதினைந்து ரூபா கேட்டு அடம் பிடித்த அந்தப் பேரம்பலம் ஐயா அவர்!


## புதிய சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா 1000/- (ஆண்டு மலர் உட்பட)

தனிப்பிரதி - 50/-

**ஓராண்டுச் சந்தாவுக்குக் குறைந்தது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

சந்தாவை நேரடியாகவோ, காசோலையாகவோ செலுத்தலாம். வங்கித் தொடர்புகளுக்கு Dominic Jeeva - 072010004231, Hatton National Bank, Sea Street, Colombo - 11 எனக் குறிப்பிடவும்.

காசோலையாக செலுத்துவதாயின் மேற்கூறிய வங்கிக் கணக்கு இலக்கத்திற்கு வைப்பிலிட்டு அதன் பற்றுச் சீட்டுப் பிரதியை மல்லிகைக்கு அனுப்பி வைக்கவும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :**

201/4, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13. தொலைபேசி : 2320721

mallikaijeeva@yahoo.com




# தூண்டில்

**- டொமினிக் ஜீவா**

**சமீபத்தில் வெளிவந்த நீர்வை பொன்னையன் அவர்களின் 'நினைவலைகள்' என்ற நூலைப் பற்றிய உங்கள் கருத்து என்ன?**

**கொழும்பு.** **கே.பொன்னுத்துரை**

புத்தகம் வெளிவந்த அந்த வாரமே பூபாலசிங்கம் புத்தகசாலையில் பெற்று, இரண்டொரு நாட்களில் அந்த நூலை முற்று முழுதாகப் படித்து முடித்தேன்.

எனக்கென்னமோ அந்த நூலின் உள்ளடக்கம் முழுமை பெற்றதாகக் கருத இயலவில்லை.

இந்த நூலின் வெளியீட்டு விழாவுக்கும் எனக்கு அழைப்பிதழ் கிடைக்கவில்லை. அதனால் இந்நூல் வெளியீட்டு விழாவிலும் கலந்துகொள்ள முடியவில்லை.

இந்த ஒதுக்கும் பழக்கம் ஈழத்துத் தமிழ் இலக்கிய எதிர்கால வளர்ச்சிக்குச் செம்மை சேர்க்கும் என நான் மெய்யாகவே கருதவில்லை. கருத்து முரண்பாடுகள் அரசியலிலும் இலக்கியக் களத்திலும் இயல்பாகவே தோன்றக் கூடியவை. கருத்து முரண்பாடுகளை ஜென்மப் பகையாக நாம் வளர்த்தெடுத்துவிடக் கூடாது.

இந்த இலக்கியப் பகைமை நோய் இளந்தலைமுறையினரின் ஆரோக்கியமான இலக்கிய வளர்ச்சியையும் பாதித்து விடக் கூடும்.

வழக்கம் போலவே, எஸ்.பொன்னுத்துரை போல, இவரும் என்னையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர் டானியலையும் எழுத்தில் நையாண்டி செய்து, இடையிடைய கருத்துக்களை மெழுகி யிருக்கிறார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி இரண்டாகப் பிளவுபட்ட காலத்தில் அப்பிளவை விரிவுபடுத்துவதில் மிக முக்கிய பங்கு வகித்தவர்களில் நண்பர் நீர்வை பொன்னையன் வடபிரதேசத்தில் கணிசமான பங்களிப்புச் செய்து - பிளவை இன்னும் இன்னும் ஆழ - அகலப்படுத்தியவர்களில் முக்கிய பங்கு வகித்தவர்களில் - இவரின் பங்கு குறிப்பிடத் தக்கது.

இவர் ஆரம்ப காலத்தில் இருந்து கட்சி ஊழியனாகச் செயற்பட்டு வந்தவர். தனக் கிருக்கும் கொழும்பு - யாழ்ப்பாண மேல்மட்ட அரசியல் தொடர்புகளைப் பின்பற்றி, கட்சியை உடைத்தவர்களில் இவரும் ஒருவர். இவருடன் கட்சியை விட்டு வெளியேறி மாற்றியக்கம் கண்டவர்களில் டானியலும் ஒருவர்.

நான் வெகு வெகு நிதானமாகவே எனது அரசியல் பங்களிப்பைச் செய்து கொண்டிருந்தேன்.

எக்காரணத்தைக் கொண்டும் பிரிந்த எழுத்தாளத் தோழர்களை எழுத்தின் மூலம் அவதூறு செய்யவோ, பேச்சின் மூலம் தரக்குறைவாகவோ தாக்கியவனுமல்ல.

- அது எனது நோக்கமுமல்ல!

ழ ழ ழ ழ

**தமிழகத்து சிறுகதைகளின் தரத்திற்கு ஈழத்துச் சிறுகதைகள் வரவில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்பாக.**

**ஏறாவூர். ஷர்மிலா செய்யதீன்**

இன்று இந்தத் தராதர ஒப்பீட்டை ஒரு கன்னைக்குச் சாதகமாக நாம் தீர்ப்புச் சொல்லிவிடக் கூடாது.

இந்தக் கருத்தை அல்லது பகுப்பாய்வை நாம் கவனத்தில் எடுத்துக் கொண்டுதான் நாம் நமது கருத்துகளைப் பதிவு செய்திடல் வேண்டும்.

மகோபாலன் வந்தான், கோட்டைக் கழற்றினான். கமலா காப்பியைக் கொண்டு வந்தாள்!டு என்ற கலைமகளின் அம்மாயிக் காலக் கதைகளின் ஆரம்ப காலக் கதைகளில் இருந்துதான் பிற்காலத்தில் புதுமைப்பித்தனும் பின்னர் ஜெயகாந்தனும் சிறுகதை உலகில் பெயர் நாட்டினார்கள்.



தமிழகச் சிறுகதைகளை நாம் எமது நாட்டுச் சிறுகதைகளுடன் ஒப்புநோக்கிப் பார்க்கவே கூடாது. இரண்டுமே இரண்டு நாடுகளின் படைப்புக்கள். தமிழக மக்களின் வாழ்க்கை முறை, சமூக முரண்பாடு, அரசியல் பார்வை வேறு. நமது நாட்டுத் தமிழ் மக்களின் வாழ்கை முறை வேறு.

அமெரிக்க மக்களின் தேசிய பாஷை ஆங்கிலம் தான். அதேபோல பிரித்தானிய மக்களினுடைய மொழியும் ஆங்கிலம் தான். ஆனால், இரண்டு நாடு களிலும் இருந்து ஆங்கிலத்தில் படைப்புகள் வெளிவந்த போதிலும்கூட, ஒன்று அமெரிக்க இலக்கியம் மற்றது பிரித்தானிய இலக்கியம்.

இரண்டும் ஒரே மொழியில் எழுதப்பட்டிருந்த போதிலும் கூட, இரண்டு இலக்கி யங்களுமே வேறு வேறு உலகப் பார்வைக் கோணத்தை கொண்டே இன்று வரையும் விமர்சகர்களினால் பார்க்கப்பட்டு வருகின்றன. விமர்சிக்கப்பட்டும் வருகின்றன.

இந்தவகையில் தான் நாம் நமது இலக்கியங்களையும், தமிழகத்தில் வெளிவரும் சிறுகதைகளின் தராதரங்களையும் ஒப்புநோக்கிக் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளல் வேண்டும். இதையும் மீறி, சார்புநிலை கொண்டு, கருத்துக் களைத் தெரிவித்தால் கிட்டத்தட்ட அக்கருத்துக்கள் ஒரு சார்புநிலை கொண்ட தாகவே அமைந்துவிடக் கூடும்.

ழ ழ ழ ழ

**சமகால மலையக இலக்கியப் போக்குப் பற்றிய உங்கள் கருத்து என்ன?**

**மருதானை ப. ஆப்டீன்**

அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் என நினைக்கின்றேன். மலையகத்தைச் சார்ந்த தலத்ஓயா என்ற ஊரிலிருந்து கே.கணேஷ் என்பவர் விடுமுறையைக் கழிப்பதற்காக யாழ்ப்பாண நகருக்கு வந்து தங்கியிருந்தார்.

நான் சந்தித்த இலக்கியவாதிகளில் இவர் ரொம்பவும் தனித்துவமானவர். சுவைஞர். தரமான கவிஞர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் விக்டோரியா வீதியில் அமைந்துள்ள தோழர் மு.கார்த்திகேசன் வீட்டிற்குத் தினசரி சாயங்காலம் கணேஷ் வந்து போய்க் கொண்டிருந்தார்.

அவர்தான் எம்மைப் போன்ற இளைஞர்களுக்கு முற்போக்கு இலக்கியத் தினது ஆழ அகலங்களைக் கண்டுணர வைத்தவர் எனச் சொல்லலாம்.

அவர் நமக்களித்த ரசனை மட்டத்தை ஆதாரமாகக் கொண்டு, நாம் பல புதிய புதிய மலையக எழுத்தாளர்களின் படைப்புக்களை அணுகி, ரசிக்கத் தொடங்கினோம்.

மலையக இலக்கியத்தின் பால் ஒரு தேடல் முயற்சி நம் இளந்தலைமுறை யினரிடம் அப்போதிருந்தே களை கட்டத் தொடங்கி விட்டது.

பல தரமான மலையகப் படைப்பாளிகளுடன் உறவுகொண்டு தொடர்பை நீடித்துக் கொண்டோம்.

இன்று பின்னோக்கிப் பார்த்தால் என்னைப் போன்றவர்களுக்கு அதிர்ச்சியாக இருக்கின்றது.

தரமான பழம்பெரும் மலையகப் படைப்பாளிகள் இன்று எழுதுவதையே நிறுத்திக் கொண்டு விட்டனர். சிலர் இலக்கிய உலகையே மறந்துபோய் விட்டனரோ என்ற சந்தேகிக்கக்கூடத் தோன்றுகின்றது.

மலையகப் புதிய தலைமுறையினருக்குச் சொந்த வாழ்க்கையில் பல்வேறு நெருக்கடிகளும், தினசரி சிரமங்களும் இடையூறுகளும் ஏற்பட்டுள்ளதை நாம் மெய்யாகவே புரிந்துகொள்ளுகின்றோம்.

அதேசமயம் வாழ்வதற்கே உயிரைப் பணயம் வைத்துப் போராடி இலக்கிய உலகில் பெயர் பதித்த வல்லவர்கள் ஈழத்து இலக்கிய உலகில் இருந்து தம்மைத் தாமே துண்டித்துத் தனிமைப்படுத்திக் கொள்வது, அந்த மக்களின் வருங்காலச் சுபீட்ச வாழ்வுக்கு நல்லதுமல்ல. சரியான அணுகு முறையுமல்ல.

வாழ்க்கையில் இடைக்கிடையே தடங்கல்கள் ஏற்பட்டுச் சுய வாழ்வைச் சிரமப்படுத்தி, திசை திரும்ப வைக்கும் அத்தனைச் சிரமங்களையும் மலையக இலக்கிய வளர்ச்சியின் எதிர்கால நன்மை கருதி, பழைய புதிய மலையகப் படைப்பாளிகள் புதிய உற்சாகத்துடனும், நம்பிக்கையுடனும், திடகாத்திரத்துடனும் தமிழ் இலக்கிய உலகில் தமது பெயரை நிலை நாட்டுவார்கள் என மனமார நம்புகின்றேன்.

201/4, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13 முகவரியில் வசிப்பவரும், மல்லிகை ஆசிரியரும், வெளியீட்டாளருமான டொமினிக் ஜீவா அவர்களுக்காக, கொழும்பு விவேகானந்த மேடு, 103A, இலக்கத்திலுள்ள Promac Printers அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.





## நீங்கள் தரமான இலக்கியச் சுவைஞரா?

'மல்லிகைப் பந்தல்' வெளியீடுகளைத் தொடர்ந்து படியுங்கள்.

கடந்த 47 ஆண்டுகளுக்கு மேலாக நமது மண்ணைச் சார்ந்த படைப்பாளிகளின் பல் துறைப்பட்ட நூல்களை வெளியிட்டு வருகின்றது, மல்லிகைப் பந்தல் நிறுவனம்.

மல்லிகைப் பந்தல் வெளியீடுகளை நீங்கள் வாங்கும் போது, அதனது பொருளாதார ஆதரவு மல்லிகை மாத இதழுக்கும் சுவறுகிறது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

மல்லிகைப் பந்தல்
தொலைபேசி : 2320721
201/4, புதிய கதிரேசன் வீதி.கொழும்பு 13.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Happy
## Digital Centre (Pvt) Ltd

**We Are Leading Towards to new prints in various Styles**

- Low Cost
- High Speed
- High Quality

- Any Paper or Any Board
- 1200 dpi x 8 bit High Resolutuion colour output
- Panorama Print 13 x 40

**NO** Positive
Plates
Colour Separation



KONICA MINOLTA

**Digital Pro Lab & Digital Offset Press**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org